ஜூன். 08- ஜூன். 14, 2008 June 08 - June 14, 2008 பக்கங்கள் - 28 20.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
# சுடர் ஒளி
THE SUDAROLI
வார மலர்



# படையினரின் விநியோகத்தை முடக்க புலிகள் வியூகம்

# படையினரின் விநியோகத்தை முடக்க புலிகள் வியூகம்

வடக்குப் போர் முனையில் படையினர் தமது நடவடிக்கையை தீவிரமாக்கியுள்ள நிலையில் -

அந்தப் போர் முனைக்கான விநியோகத்தை முடக்க விடுதலைப் புலிகள் புதிய வியூகம் அமைத்துள்ள நிலையில் -

இவ்வாண்டு முடிவதற்குள் வடக்கை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் என அரசின் பங்காளிக்கட்சியான ஹெல உறுமய உரத்துக்குரல் கொடுத்துள்ளது.

அதற்கு ஊக்கமளிக்கும் வகையில் - எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும் வடக்கை மீட்கும் முயற்சி கைவிடப்படமாட்டாது என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க அறிவித்துள்ளார்.

வடக்கில் இருந்து பயங்கரவாதத்தை விரைவில் ஒழிப்போம். அதுவரை ஓயமாட்டோம் என்று நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கூறியுள்ளார்.

கிழக்கை மீட்டு வெற்றி விழாக் கொண்டடியது போன்று வடக்கையும் மீட்டு வெற்றிவிழாக் கொண்டாட வேண்டும் என்பதே அரசின் இலக்கு என்பது வெளிப் படையான விடயமாகும்.

தெற்கு மக்களைத் திருப்திப் படுத்தவும் -

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் அல்லல்படும் மக்களை சமாதானப் படுத்தவும் -

சர்வதேச மட்டத்தில் அரசுக்கு எதிராக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பிக் கொள்ளவும் -

அரசுக்கு தற்சமயம் உள்ள ஒரேயொரு 'துருப்புச் சீட்டு' வடக்கு மீதான போரும் அதனை மீட்பதும்தான்.

ஆட்சியை இழுத்துக் கொண்டு செல்வதற்கு அந்தத் துருப்புச் சீட்டு உதவுமே தவிர, நாட்டில் அமைதியைக் கொண்டுவரவோ, தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கோ உதவப் போவதில்லை என்று ஆய்வாளர்கள் ஆருடம் கூறுகின்றனர். வன்னியை நோக்கிய படை நகர்வு 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அந்த நடவடிக்கை ஒரு வருடத்தைத் தாண்டிய போதும் முன்னேற்றம் இன்றித் தொடர்கின்றது.

இதுவரை மன்னார் மாவட்டத்தில் பெருமளவு பகுதியை தம்வசம் கொண்டு வந்து விட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையில் இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டும், ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காயப்படுத்தப் பட்டும் போர்முனையில் இருந்து அகற்றப்பட்டுவிட்டனர் என்று அரசுத் தரப்புத் தகவல்கள் வெளியாகின்றன.

விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டனர். அவர்கள் ஆளணி, ஆயுத பற்றாக் குறையை எதிர் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வெற்றிகொள்ளமுடியும் எனப் படைத்தரப்பில் இருந்து தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.



இத்தகவல்கள் குறித்து விமர்சிக்கவோ, சரியானவை என்று ஏற்றுக் கொள்ளவோ இயலாமல் இருக்கின்றது என்று சர்வதேச ஊடகங்கள் கருத்து வெளியிடுகின்றன.

அந்தப் பிரதேசத்துக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதால் களமுனையில் என்ன நடக்கின்றது என்ற உண்மை நிலையை அறிய முடியவில்லை என்று அவர்கள் காரணம் கூறுகின்றனர்.

கள முனையில் இருந்து வரும் தகவல்களை ஆராயும்போது, வன்னியில் எஞ்சியுள்ள பிரதேசங்களை அரசு தன்வசம் கொண்டு வர எத்தனை வருடங்கள் செல்லுமோ என்று சிந்திக்கவேண்டியுள்ளது.

அரசுத் தகவல்கள் இப்படியிருக்க - விடுதலைப் புலிகளின் தகவல்கள் வேறு வகையாக உள்ளன.

படையினரின் முன்னேற்றம் முறியடிக்கப்பட்டது. 30 படையினர் கொல்லப்பட்டனர். 50 படையினர் கொல்லப்பட்டனர். ஆயுத தளபாடங்களை கைப்பற்றினோம் என்று விடுதலைப் புலிகள் அறிவிக்கின்றனர்.

படையினரின் நகர்வை முறியடிக்கும் தாக்குதல்களையே இப்போது நடத்து கின்றோம். பெரிய அளவிலான தாக்கு தல் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் விடுதலைப் புலிகள் அறிவிக் கின்றனர்.

படையணிகள் யாவும் இன்னும் களமிறக்கப்படவில்லை. முன்னேற்ற முயற்சியியை முறியடிக்கும் செயற்பாட்டுக்கு சிறிய அணிகள் மட்டுமே களம் இறக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

மன்னாரில் படையினர் கடந்த ஒரு வருடமாக திணறுகின்றனர். பாரிய அளவில் தாக்குதலை படையினர் ஆரம்பித்தால் அத்தாக்குதலை முறியடித்து தக்க பதிலடி கொடுக்க படையணிகள் தயார் நிலையில் உள்ளன என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

பாரிய அளவிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அரச தரப்பில் இருந்து தகவல்கள் வந்து கொண்டிருக்க -

சும்மா முறியடிப்புச் சமரையே மேற் கொள்கிறோம் என்று விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

முறியடிப்புச் சமரில் ஈடுபடும் புலிகள் படையினரின் விநியோகத்தை முடக்க புதிய வியூகம் ஒன்றை வகுத்துள்ளனர்.

மன்னாரில் 2001 ஆம் ஆண்டு மரணமான தளபதி கங்கை அமரனின் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள புதிய படையணி நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கடற்படையினரின் கப்பல் களை துவம்சம்செய்துவருகின்றது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி நாயாறு கடற் பகுதியில் வைத்து டோறா படகு ஒன்று தகர்க்கப்பட்டது.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி திருகோண மலை 'அஷ்ரப்' துறைமுகத்தில் வைத்து வழங்கல் கப்பலான 'இன்விசிபிள்' கப்பல் தகர்க்கப்பட்டது.

கடற்படையினரின் வழங்கலை முறியடிக்க கப்பல்கள் தகர்க்கப்பட்ட போது, கடற்படையினரின் எல்லைப்புற சிறு முகாம்களும் தகர்க்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் நெடுந்தீவில் அமைந்திருந்த கடற்படை முகாம் ஒன்று தகர்க்கப்பட்டது.

அதன்பின் மன்னாரில் கடற்படை முகாம் ஒன்று கடந்த மாதம் தாக்குதலுக்கு இலக்கானது.

ஆகப் பிந்திய தாக்குதலில் கடந்த மாதம் 29 ஆம் திகதி மண்டைதீவுக்கு சமீபமாக உள்ள சிறுத்தீவு கடற்படைத்தளம் தாக்கப் பட்டுள்ளது.

கடற்படையின் கப்பல்களையும் எல்லைப்புற கடற்படை முகாம்களையும் தகர்க்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ள விடுதலைப் புலிகளின் இலக்கு விநியோகத்தைச் சீருலைப்பதுதான்.

கடற்படையினர் மீதான தாக்குதலை தீவிரமாக்கியுள்ளனர் புலிகள். போர் முனை யில் தாக்குதலை தீவிரமாக்கியுள்ளனர் படையினர்.

இதற்கு மேலாக வடக்கை மீட்கும் போரை தீவிரமாக்கப் போவதாக அரச தரப்பில் இருந்து அறிவிப்புகள் வருகின்றன.

இவற்றைநோக்குமிடத்து அடுத்து வரும் மாதங்கள் யுத்தமாதங் களாகவே அமையப்போகின்றன என்று கருதவேண்டியுள்ளது.

அதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**யாழவன்**

# லண்டனை உலுப்பிய கொலைகள்!

தனிமையும், பொருளாதார நெருக்கடியும், இயலாமையினால் ஏற்பட்ட விரக்தியும் இணைந்து பிரிட்டனில் இலங்கை தமிழக் குடும்பமொன்றை ஒருநொடியில் சிதைத்துள்ளது.

லண்டனின் தென்பகுதியில் கார்ஸ்சோல்டனில் இடம்பெற்ற அந்தச் சம்பவம் உலகின் கவனத்தை பரவலாக ஈர்த்துள்ளது.

தனது ஐந்துவயது மகனையும் நான்கு வயதுமகளையும் கொலை செய்ததற்காக 35 வயது சசிகலா நவநீதன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சறேயின் கார்ஸ்சோல்டன், பார்க் லேனில் உள்ள அந்த வீட்டிற்கு பொலிஸார் வந்தவேளை ஐந்து வயதுச் சிறுவனும் அவனது நான்கு வயது சகோதரியும் கடும் கத்திக்குத்துக் காயங்களுடன் உயிருக்காக போராடிக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

பொலிஸாருடன் வந்திருந்த மருத்துவ உதவியாளர்கள் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்ததும் இரு குழந்தைகளையும் அம்புலன்ஸுக்குக் கொண்டுசென்றனர். மயக்கநிலையில் காணப்பட்ட ஒரு குழந்தைக்கு நினைவு திரும்பச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மற்றைய குழந்தை சக்கர நாற்காலியில் கொண்டுசெல்லப்பட்டது.

39 வயது தந்தையும் 35 வயது தாயும் அந்த இடத்தில் வைத்தே பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். இரவு 10.30 மணிக்கு தமக்கு தொலைபேசி அழைப்புக் கிடைத்ததாகவும் தாங்கள் சில நிமிடங்களிலேயே வந்துவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருகுழந்தைகளையும் காப்பாற்றுவதற்கு தாம் மேற்கொண்ட முயற்சி பலனளிக்காதது குறித்த ஏமாற்றம் அதிகாரிகளிடம் தென்பட்டது. மருத்துவமனைக்கு அவர்கள் எடுத்துச்செல்லப்பட்ட போதிலும் ஒருநிமிட இடைவெளியில் இருவரும் இறந்துவிட்டனர்.

இருவரும் வெவ்வேறு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். எனினும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஒருமணித்தியாலத்திற்குள் இருவரும் இறந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர் என மெட்ரோ பொலிட்டன் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கத்துக்குத்துடன் மீட்கப்பட்ட ஆறுமாத பெண் குழந்தை, மருத்துவமனையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றது.

குழந்தைகளை காப்பாற்றுவதற்கு துணைமருத்துவ பிரிவினர் மேற்கொண்ட போராட்டத்தினை படுகொலை இடம்பெற்ற வீட்டுக்கு அருகில் வசிக்கும் ஜோன் பெய்லி இவ்வாறு விவரித்தார்.

''குழந்தையொன்று வெள்ளைத்துணியில் சுற்றப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதை கவனித்தேன். வெள்ளைத்துணி முழுவதும் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. அம்புலன்ஸில் குழந்தையை வளர்த்தி நினைவு திரும்பச் செய்வதற்கு முயற்சியை மேற்கொண்டனர்'' என்றார் அவர்.

''மற்றைய குழந்தையை வீட்டிலிருந்து கொண்டுவர அரைமணிநேரம் பிடித்தது. ஸ்ட்ரெச்சரில் கிடத்தப்பட்ட நிலையில் குழந்தை கொண்டு வரப்பட்டது'' என மற்றுமொரு அயல்வீட்டுக்காரரான ஜிம் டவ்வி தெரிவித்தார்.

''நான் அம்புலன்ஸ் பணியாளரிடம் குழந்தைகள் பிழைக்குமா எனக் கேட்டேன். அவர் என்னைப் பார்த்து தலையசைத்த பின்னர் 'சொல்லமுடியவில்லை' என்றார்'' என மேலும் டவ்பி தெரிவித்தார்.

இதன்பின்னர் ஆடையில் இரத்தம் காணப்பட்ட நிலையில் பெண் ஒருவரும் பின்னர் ஆணும் அம்புலன்ஸில் எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் டவ்பி தெரிவித்தார். அந்த ஆண் பொறுமையானவராக காணப்பட்டார். பொலிஸாரும் அவருடன் நிதானமாக நடந்து கொண்டனர் எனவும் டவ்வி குறிப்பிட்டார்.

அவரின் கைகளுக்கு முதலில் விலங்குகள் போடப்படவில்லை. பொலிஸ் வானின் முன்பக்கத்திலிருந்து அவர் தொலைபேசியில் எவருடனோ உரையாடினார். பின்னர் அவரை வாகனத்தின் பின்னால் உள்ள கூண்டில் அடைத்தனர். அவர் பொலிஸாருடன் வாதாடியதுபோல தோன்றியது. எனினும், அவர் அவர்களை எதிர்க்கவில்லை என்கின்றனர் அயலவர்கள். விசாரணைகள் தொடரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் தடயவியல் நிபுணர்களும் காணப்பட்டனர்.

வீட்டின் மேல் அறையிலுள்ள ஜன்னலில்

**அனாமிகா**

ஆறுபூச்சாடிகளில் பூக்கள் அழகாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. கீழே உள்ள அறையில் சிங்கப்பொம்மை ஒன்று காணப்படுகின்றது.

அந்த வீட்டுக்கு முன்னால் வசிக்கும் இந்தியரான சென்குப்தா, ஒருவருடத்துக்கு குறைவான காலப்பகுதியிலேயே அந்த இலங்கையர்கள் குறிப்பிட்ட வீட்டில் குடியேறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பெண் அப்போது கர்ப்பிணியாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கின்றார்.

சம்பவத்தைக் கேள்வியுற்றதும் உறவினர்கள் வரத்தொடங்கி விட்டனர். குழந்தைகள் இறந்ததைக் கேள்வியுற்றதும் அவர்கள் கதறியழத்தொடங்கி விட்டனர்.

சசிகலா மன அழுத்தத்தினாலும், தனிமையினாலும் பாதிக்கப்பட்டிருந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.


சசிகலாவுடன் அவரது சகோதரனின் குடும்பத்தினர் தங்கியிருந்தனர். அவர்கள் வேறுவீட்டுக்கு சென்றபின்னர் சசிகலா மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

அவரின் கணவர் நாள் முழுவதும் வேலை செய்வதால் கதைப்பதற்கு கூட எவரும் இல்லை. பிள்ளைகளும் குழப்படி நிறைந்தவர்களாக காணப்பட்டனர்.



உயிர் தப்பிய ஆறு மாத குழந்தை

அதேவேளை சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு வெளியே பொலிஸார் காவற்பணியில்



நான்கு வருடங்களுக்கு முன்னர் அவர்கள் பிரிட்டனுக்கு வந்தனர். 39 வயதான நவநீதன் சொந்தக் கடையொன்றை நடத்தி வந்தார். எனினும், இருதய சத்திரசிகிச்சைக்குப் பிறகு அவரது வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

வீட்டையும் வேலையையும் கவனிக்கவேண்டிய அழுத்தம் அவர்களைப் பாதித்திருக்கலாம் என்கின்றனர் மனநல நிபுணர்கள்.

சசிகலா சமீபத்தில் சாரதி அனுமதிப்பத்திர சோதனையில் சித்தியடையத் தவறினார்.

''அது ஒரு சிறந்த குடும்பம். ஒன்றாகச் செயற்பட முயன்றனர். அவர்கள் மத்தியில் சச்சரவு இல்லை'' என்கின்றனர் அவர்களை நன்கு அறிந்தவர்கள்.

இச்சம்பவம் பிரிட்டனில் உள்ள தமிழ்ச்சமூகம் உளவியல் ஆதரவற்ற நிலையில் வாழ்வதை புலப்படுத்துகின்றது. அவர்களுக்கு கதைப்பதற்கு எவரும் இல்லை என்கின்றார் மனநல நிபுணர் போல் சத்தியநேசன். இந்தக் குடும்பம் யாழ்ப்பாணம், சுன்னாகத்தைச் சேர்ந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

# வரலாறு வழங்கப்போகும் தீர்ப்பை யாரால்தான் தடுக்கமுடியும்?

வரலாற்றின் தவறுகளை மறப்போர் அதன் தவறுகளை மீளவும் செய்ய சபிக்கப்பட்டவர்களாவர். - இது ஜேர்மனிய சிந்தனையாளர் ஜோர்ஜ் சந்தயணாவின் வார்த்தை. சமீப காலமாக சிங்களத்தின் இறுமாப்பு நிறைந்த வார்த்தைகளை கேட்க நேரும் போதெல்லாம், நான் இந்த வரிகளை நினைத்துக் கொள்வதுண்டு.

உலக மேலாதிக்க அரசியல் வரலாற்றில் இந்த வரிகள் யாருக்கெல்லாம் பொருந்தி போகும் என்ற ஆராய்ச்சியில் நான் ஈடுபட விரும்பவில்லை. ஆனால், ஒடுக்குமுறைகளின் ஏகபோகவாதிகளாக எப்போதுமே இருக்க முடியும் என நம்புவோருக்கெல்லாம் இந்த வரிகள் பொருந்தும்.

சிங்களத்தின் நவீன அரசியல் வரலாறு என்பதே தமிழர்களை அடக்கி ஆண்டதன் வரலாறுதான். ஒவ்வொரு கால கட்டத்திலும் தெற்கின் ஆட்சியைக் கைபற்றும் சிங்கள ஆளும் வர்க்கம் அந்த ஒடுக்குமுறை வரலாற்றைத் தொடர்வதில் அப்பழுக்கற்ற முறையில் ஒற்றுமையைப் பேணி வந்திருக்கின்றது.

இன்று அந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பை மகிந்த தலைமையிலான சிங்கள ஆளும் வர்க்கம் பொறுப்பேற்றிருக்கிறது.

" அடுத்த வருடம் யுத்தம் இருக்கப் போவதில்லை. நாங்கள் விடுதலைப் புலிகளின் தலைவரை இல்லாமலாக்கி விடுதலைப் புலிகளை பூண்டோடு அழித்துவிடுவோம். இப்பொழுது அங்கு சிறுதொகையான புலிகள் மட்டும்தான் எஞ்சியிருக்கின்றனர். அவர்களையும் விரைவில் அழித்துவிடுவோம்''-சமீபகாலமாக இப்படியான வசனங்களை அடிக்கடி கேட்க முடிகின்றது.

இப்படியான வீரவசனங்களைக் கேட்கும் போதெல்லாம் எனக்கு இந்திய தூதுவராக இருந்த ஜே . என். தீட்சித் 87களில் கூறிய வார்த்தைகள்தான் நினைவுக்கு வந்த போகும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கும்படி பல்வேறு வகையான பசப்பு வார்த்தைகளைப் பயன்படுத்திய தீட்சித் இறுதியில், ''எனது சுங்கான் பற்றி முடிவதற்குள் உங்களை இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிடுவோம்'' என ஆவேசமாகக் கூறினார்.

அன்று தீட்சித்தின் ஆவேசமான இந்த வார்த்தைகளை அமைதியாகச் செவிமடுத்த திரு. பிரபாகரன் அவர்கள் ''சரி பார்ப்போம்'' என்றார். இப்பொழுதும் அவரது நிலைப்பாடு அப்படித்தான் இருக்கின்றது. எவ்வேளையிலும் தடுமாறாமல் புலிகள் வரலாற்றிலிருந்து கற்றுக்கொண்டு தமது பயணத்தைத் தொடர்கின்றனர்.

இந்த இடத்தில் நாம் கடந்து வந்த அரசியல் வரலாற்றின் ஒரு சிறு பகுதியை நினைத்துக்கொள்வோம்.

தமிழர் தேசத்தின் ஒடுக்குமுறைக்கு எதிரான அரசியல் வளர்ச்சியானது கோரிக்கை அரசியலில் இருந்து விடுபட்டு, எதிர்ப்பு அரசியலாகப் பரிணமித்த காலத்திலிருந்து இன்று வரையான சிங்களத்தின் பௌத்த தேசியவாத கொள்கை என்பது தமிழர்களின் போராட்டத்தை அழித்தொழிப்பதை நோக்கமாகக் கொண்டதே. இதுதவிர வேறு எந்த நோக்கமும் அதற்குக் கிடையாது. அந்த நோக்கத்திற்கு இசைவாகவே இன்று வரை சிங்களம் செயலாற்றி வருகின்றது.

70களின் பிற்பகுதியிலிருந்து, தமிழர் தேசிய விடுதலை என்பது, ஒரு ஆயுத வழி புரட்சிகர அரசியல் வழிமுறையினூடாகவே சாத்தியப்படக்கூடியது என்ற வாதம் தமிழ் மக்கள் மத்தியில் வலுவடைந்தது.

இதன் தொடர்ச்சியாகத்தான் பல ஆயுத வழி அரசியல் இயக்கங்களும் தோன்றின. அவ்வாறு தோன்றிய இயக்கங்கள் தமக்குள் கோட்பாடு மற்றும் அரசியல்நிலைப்பாடுகளில் சில வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் அடிப்படையில் சிங்கள மேலாதிக்கத்திலிருந்து தமிழ் மக்களை விடுவித்தல், தமிழ்மக்கள் சுய கௌரவத்துடனும், தன்னாட்சி அதிகாரத்துடனும் வாழ்தல்



போன்றவற்றில் உடன்பாடுகளைக் கொண்டிருந்தன.

இத்தகைய பின்புலத்தில்தான் அவ்வாறான இயக்கங்களினால் ஒன்றிணைந்து திம்புப் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள

தாரகா

முடிந்தது. அந்தப் பேச்சுவார்த்தையின் தோல்வியையே இந்தியா தனது நேரடி தலையீட்டிற்கான ஒப்பந்தமாக வளர்த்தெடுத்தது.

இந்தக்காலத்தில் இந்தியா தனது மேலாதிக்க நலனின் கீழ் தமிழர் பிரச்சினையை அணுகியது. இதன் ஆபத்தை விளங்கிக்கொண்ட விடுதலைப் புலிகள் ஆரம்பம் தொட்டே இந்தியாவுடன் ஒரு வகையான பனிப்போரில் ஈடுபட்டனர். அதுவே காலப்போக்கில் இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடி மோதலாகப் பரிணமித்தது.

இந்த இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டியது என்னவென்றால், நரித்தனமான அரசியலில் கைதேர்ந்த ஜே. ஆர் . ஜெயவர்த்தனவின் மனதில் ஒரு தெளிவான நிகழ்ச்சி நிரல் இருந்திருக்கவேண்டும். ஜே.ஆரைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் தமிழர் விடுதலைப் போராட்டத்தை மிக இலகுவில் அழிதொழித்துவிட முடியுமென்றே அவர் கருதியிருந்தார்.

இதனால்தான் 1979 இல் பயங்கரவாத தடைச்சட்டத்தை நிறைவேற்றியதுடன் ஆறுமாத காலத்தில் தமிழரின் ஆயுதப் போராட்டத்தை அடக்கி தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இராணுவத் தளபதிகளுக்கு கட்டளை பிறப்பித்தார். இதனை ஒரு சிங்கள ஆய்வாளரே " தீவிர சுய மகிழ்ச்சி எதிர்பார்ப்பு'' என்று வர்ணித்திருந்தார். ஆனால், இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிட்டதைத் தொடர்ந்து ஜே.ஆரின் மூளை வேறு ஒரு விடயத்தைச் சிந்தித்திருக்க வேண்டும்.

அதாவது, இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி ஒன்றிணைந்த தமிழர் போராட்டச் சக்தியை சிதறடித்தல் மற்றும் இந்தியாவுடன் தமிழர்களுக்கு இருக்கும் உறவை வலுவிழக்கச் செய்தல்.

நான் இவ்வாறு கூறுவதற்கெல்லாம் எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. ஆனால், பிற்காலங்களில் நடைபெற்ற சம்பவங்களையும் அரசியல் போக்குகளையும் அடியொற்றிச் சிந்திக்கும்போது இவ்வாறானதொரு மதிப்பீட்டுக்கான நியாயப்பாடு உண்டு.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின்போது இந்தியாவுக்கு ஒரு நலன் இருந்தது. அதேபோன்றே ஜே. ஆருக்கும் ஒரு நலன் இருந்தது. இலங்கையின் தமிழ் ஆயுத இயக்கங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் இலங்கையின் அரசியல் எதிர்காலத்தைத் தனது மேலாதிக்கத்தினுள் கொண்டுவருவதே இந்தியாவின் நலனாக இருந்தது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவைப் பொறுத்தவரையில் நான் மேலே குறிப்பிட்ட இரண்டு விடயங்களும் ஜே.ஆரின் நலன்களாக இருந்தன. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் நரித்தனமான அரசியல் தந்திரோபாயத்திற்கு இந்தியா பலியானது. இறுதியில் இந்தியாவின் முயற்சிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுடன் மோதுவது என்ற இந்தியப் படைதுறை முடிவால் படுதோல்வியடைந்தன.

ஜே. ஆர். எதிர்பார்த்தது போன்றே தமிழர் விடுதலை இயக்கங்கள் இந்தியா என்னும் மாயமானுக்குப் பின்னால் அணிதிரண்டன. விடுதலைப் புலிகள் ஓர் அணியாகவும், இந்தியாவிற்கு பின்னால் நின்ற இயக்கங்கள் ஓர்அணியாகவும் மாறியதில் தமிழர் போராட்ட வலு சிதறியது. அத்துடன் அதுவரை இந்தியா குறித்த கற்பனைகளில் இருந்த ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவை எதிர்க்கத்தொடங்கினர்.

இந்தக் காலத்தியில் ஜே.ஆரால் போடப்பட்ட சிங்கள அடித்தளத்தில் தான் இன்றுவரை சிங்களம் இயங்கி வருகின்றது. இராணுவ ரீதியான ஒரு வழிமுறையினூடாக தமிழர் போராட்டத்தை அழித்தொழிக்கும் அதேவேளை தமிழர் சமூகத்தில் எதிர் போராட்ட அணிகளை உருவாக்கியுள்ள உள்ளக ரீதியாகவும் தமிழர் போராட்டத்தை அழித்தொழித்தல் என்னும் இருமுனை யுத்த தந்திரோபாயம்தான் ஜே. ஆரின் பால பாடமாகும்.

ஜே. ஆரின் தந்திரோபாயத்திற்கு நமது தலைமுறை பலியாகியிருக்கின்றது என்பதை நாம் மனந்திறந்து ஏற்கத்தான் வேண்டும். இன்றுவரை விடுதலைப்புலிகளுக்குச் சவாலாக இருப்பது சிங்களத்தின் இராணுவம் அல்ல, தமிழ் சமூகத்திற்குள்ளே இருந்து தொழிற்படும் அவ்வாறான தமிழ்த் தேசிய எதிர் அரசியல் அமைப்புகள்தான்.

1987 இன் பின்னர் சிங்களத்தின் அரசியல் கொள்கை என்பது பல மடைந்து வரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தொழிப்பதாகத் தான் இருந்தது. அதற்காக எவரது உதவியையும் பெறுவது, அதற்காக அவர்களுடன் எவ்வாறான உடன்பாடுகளையும் செய்வது என்ற நிலைப்பாட்டிற்கு சிங்களம் சென்றது. சிங்களத்தின் இன்றைய வெளிநாட்டுக்கொள்கை என்பதே விடுதலைப்புலிகளை மையப்படுத்தியதுதான்.

ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை முற்றிலும் ஒரு விடுதலை இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இருப்பது சிறிலங்காவில் மட்டுமாகத்தான் இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

இத்தகைய பின்புலத்தில்தான் ஜே. ஆர். நினைத்து முடியாமல் போனதை, பிரேமதாச நினைத்து முடியாமல் போனதை, சந்திரிக்காவும் அவரது மாமனாரும் கற்பனை செய்து முடியாமல் போனதை இப்பொழுது மகிந்தவும் அவரது சகோதரர்களும் இணைந்து கற்பனை செய்கின்றனர்.

கிழக்கில் கருணா விடயத்தால் ஏற்பட்ட சில தடைகளால் புலிகள் கிழக்கிலிருந்து போரியல் சார்ந்துபின்நகர வேண்டிய தேவை ஏற்பட்டது. வெளித்தோற்றப் பாட்டில் இது ஒரு பின்னடைவுதான்.

இதனை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்ட மகிந்த தலைமையிலான சிங்களம் அதே போன்று வடக்கையும் இராணுவ ரீதியாக வெற்றிகொள்ள முடியுமென்ற நப்பாசையில் தனது படைகளை நகர்த்தி வருகின்றது . இப்பொழுது தடுமாறுகிறது.

எப்போதுமே சொந்த மூளையில் இயங்காத சிங்களத்தின் படைத்துறை, எப்போதுமே சொந்த மூளையை மட்டுமே நம்பும் போரியல் திறன் கொண்ட புலிகளை எதிர்கொள்வதில் தடுமாறுகின்றது.

சிங்களம் இன்று இறுமாப்புடன் நோக்கும் அதன் கிழக்கு வெற்றிகளையும் அதிக காலத்திற்கு அது தக்க வைக்கப் போவதில்லை. சிங்களம், புலிகளை அழித்தொழித்து விடுவதாக அங்கலாய்க்கும் போதெல்லாம் புலிகளோ, பிரபாகரன் அவர்கள் அன்று தீட்சித்திற்கு சொன்ன வார்த்தைகளுடன் தமது பயணத்தை எந்தவிதமான தடுமாற்றமும் இல்லாமல் தொடர்கின்றார்.

வரலாற்றில் இருந்து எதனையுமே கற்றுக்கொள்ளாத சிங்களத்திற்கு (மகிந்த அணியினருக்கு) வரலாறு வழங்கப் போகும் தீர்ப்பை யாரால்தான் தடுக்க முடியும்?

(நன்றி நிலவரம்)

# முறுகல் முடிவுக்கு வராதா?

அஸ்லம் எஸ். மௌலானா

மழை விட்டும் தூவானம் ஓயவில்லை என்பது போலவே கிழக்கு நிலைவரம் அமைந்துள்ளது. அங்கு நடந்து முடிந்த மாகாண சபைத்தேர்தலைத் தொடர்ந்து தலைதூக்கிய வன் முறைகளும் அசம்பாவிதங்களும் இன்னும் தொடரவே செய்கின்றன.

கடந்தமாதம் 22ஆம் திகதி பிள்ளையான் குழுவின் ஆரையம்பதி பிரதேசப் பொறுப்பாளரும் மற்றொரு உறுப்பினரும் காத்தான்குடியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதன் எதிரொலியாக ஆரையம்பதியில் வியாபாரம் செய்து கொண்டிருந்த மூன்று முஸ்லிம்கள் பிள்ளையான் குழுவினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டதுடன் செங்கலடியில் வைத்து இரண்டு முஸ்லிம்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

**தொடரும் படுகொலை**

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற ஹர்த்தால், கடையடைப்பு மற்றும் வீதி மறியல் போராட்டங்கள் காரணமாக சுமார் ஒரு வார காலம் அந்த மாவட்டமே முழுமையாக இயல்பு நிலையை இழந்திருந்ததுடன் அங்கு பெரும் பதற்றமும் பீதியும் நிலவின.

இதன்போது அங்கும் இங்குமாக இடம்பெற்ற பல்வேறு அசம்பாவிதங்களுள் அகப்பட்டு - அப்பாவித் தமிழ் - முஸ்லிம் மக்கள் பலர் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். பதிலுக்குப் பதிலடி என்றவாறு தொடர்ந்த வன்முறைகள், அங்கு இனக்கலவரமொன்று வெடிப்பதற்கான சூழ் நிலையைத் தோற்றுவித்திருந்தன.

எனினும் தமிழ், முஸ்லிம் சமயப் பெரியார்களும், சிவில் சமூக அமைப்பினரும் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் காரணமாகவும், கிழக்கு மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பதில் தலைவருமான பிள்ளையான் வழங்கிய உத்தரவாதங்களின் பேரிலும் அங்கு ஓரளவு சுமுக நிலை ஏற்பட்டதுடன் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் வர்த்தக நிலையங்கள், கடைகள் மற்றும் சந்தைகள் செயற்படத் தொடங்கின.

ஆனால், மட்டு. மாவட்டம் முழுமையான இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு முன்னரே கடந்த ஞாயிறன்று பிற்பகல் வேளை கல்லடி தமிழ் கிராமத்தினுள் வைத்து காத்தான் குடியைச் சேர்ந்த முஸ்லிம் வியாபாரி ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

**மீண்டும் இருளாகிய மட்டு.**

இந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. அதனால் காத்தான்குடி நகரில் நான்கு தமிழர் வாள் வெட்டுக்கு இலக்காகினர். பதிலுக்கு ஆரையம்பதி மற்றும் கல்லடி தமிழ் பகுதிகளில் வைத்து முஸ்லிம்கள் ஐவர் தாக்கப்பட் டனர்.

இத்தகைய அசம்பாவிதங்கள் மட்டு. மாவட்டத்தை மீண்டும் இருளுக்குள் தள்ளி விட்டிருக்கின்றன. கடந்த சில நாட்களாக முஸ்லிம் பகுதிகளில் ஹர்த்தால் - கடையடைப்பு மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்ற செவ்வாய்க்கிழமை காத்தான் குடி நகரில் அமைதியான முறையில் ஹர்த்தால் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும் அன்று பிற்பகல் இரண்டு முஸ்லிம்கள் பிள்ளையான் குழுவினரால் கடத்தப் பட்டுள்ளனர் என்ற செய்தி வெளி வரவே அங்கு வன்முறைகள் வெடித்தன.

பொலிஸ் மற்றும் படையினரின் பாதுகாப்பு துணையுடன் சென்ற வாகனங்கள் கூட கல்வீச்சுக்கு இலக்காகின. இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ள னர். அத்துடன் ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டது

**தொடரும் போராட்டம்**

இத்தகைய பதற்றமான சூழ்நிலை காரணமாக தமிழ் - முஸ்லிம் எல்லைக் கிராம மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி நடுஊருக்குள் சென்று தஞ்சமடைந்தனர். இக்கட்டுரை எழுதப்படும் (புதன்கிழமை மாலை) வரை பதற்றம் தனிய வில்லை;



போக்கு வரத் துகளும் இடம் பெறவில்லை.

அதே வேளை கடத்தப்பட்ட முஸ்லிம்கள் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளில் அறிவுப்புச் செய்துள்ளனர். எனினும், பிள்ளையான் குழுவினரிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டுமெனக்கோரி காத்தான் குடி நகரில் ஆயிரக்கணக் கான மக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதனிடையே கடந்த புதன்கிழமை நடைபெற்ற கிழக்கு மாகாணசபையின் அங்குரார்ப்பண அமர்வைப் பகிஷ்கரிக்குமாறு காத்தான்குடி ஜம்மியதுல் உலமா, முஸ்லிம் உறுப்பினர்களிடம் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது. பிள்ளையான் குழுவினரால் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டு வருவதைக் கண்டித்தும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையிலுமே அந்த அமர்வைப் புறக்கணிக்குமாறு கிழக்கு மாகாண சபை முஸ்லிம் உறுப்பினர்களை ஜம்மியதுல் உலமா கேட்டிருந்தது.

**பகிஷ்கரிப்புக் கோரிக்கை புறக்கணிப்பு**

எனினும், மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லா உட்பட ஆளும் தரப்பு முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும் அந்த அமர்வில் பங்குபற்றியிருந்தனர். தனது ஒவ்வொரு அரசியல் நகர்விலும் உலமாக்களின் பெயரைப் பயன்படுத்திக்கொள்ளும் ஹிஸ்புல்லாவால் கூட முஸ்லிம் சமூகத்தின் நலன்சார்ந்த ஒரு கோரிக்கையை ஏற்றுச் செயற்பட முடியவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி அரசுத் தரப்புடன் இணைந்துகொண்ட போதும் முதலமைச்சர் பதவி கிடைக் காமல் போனபோது அரசை விட்டு வெளியேறி தனிக் குழு என்ற அறிவிப்பை வெளியிட்ட போதும் பின்னர் மாகாண அமைச்சைப் பொறுப்பேற்றபோதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உலமாக்கள் மற்றும் புத்திஜீவிகளின் வேண்டுகோளின் பேரிலேயே தாம் முடிவெடுத்ததாக ஊடகங்களில் அறிக்கைவிட்டு வந்த ஹிஸ்புல்லாவின் முகத்திரை இதன்மூலம் கிழிக்கப்பட்டிருக்கிறது.

தனது அரசியல் காய்நகர்த்தல்களின் போது உலமாக்களின் தலையில் அவற்றைப் போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்ளும் அமைச்சர் ஹிஸ்புல்லாவின் அறிக்கைகளினால் உலமா சபைகளும் முஸ்லிம் மக்களும் குழப்பமடைந்தே வந்துள்ளனர். இதனால், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கூட ஊடகங்களில் மறுப்பறிக்கை விடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருந்தது. கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது அவ்வாறான அறிக்கையொன்றை அது வெளியிட்டிருந்தது.

**உலமா சபை காட்டம்**

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தின் அசாதாரண சூழ் நிலைக்கு பிள்ளையான் குழுவினரின் நடவடிக்கைகளே காரணம் என்று காத்தான்குடி ஜம்மியதுல் உலமா பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளது.

அங்கு ஏற்பட்ட கலவரங்களின் போதெல்லாம் தமிழ் தரப்பினருடன் சமரசப்பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்ற அந்த ஜம்மியத்துல் உலமா, தற்போது பிள்ளையான் குழுவினர்மீது முழுமையாக நம்பிக்கையிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக வழிக்குத் திரும்பியிருப்பதாகக் கூறிக்கொள்ளும் அந்த ஆயுதக் குழுவினரால் முழு அப்பாவி முஸ்லிம்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருப்பதாக ஜம்மியத்துல் உலமா கடும்கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பதில் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான பிள்ளையான் அவர்களால் அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் மீறப்பட்டிருப்பதனாலேயே முஸ்லிம்களின் அதியுயர் கண்ணியமிக்க சபையாகக் கருதப்படுகின்ற ஜம்மியத்துல் உலமா கூட பொறுமையிழந்து மிகவும் காட்டமாக அறிக்கை வெளியிடுமளவுக்கு வந்திருக்கிறது.

**ஆயுதக்களைவு அவசியம்**

கிழக்கில் சுமுகநிலை ஏற்படவும் அவ்வாறு ஏற்படும் அமைதிச்சூழல் நீடித்து நிலைப்பதற்கும் தமிழ் - முஸ்லிம் ஐக்கியம் பேணப்படுவதற்குமான ஒரே வழி பிள்ளையான் குழுவினிடமிருந்து ஆயுதங்கள் களையப்படுவதேயாகும் என முஸ்லிம்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

முன்னதாக தேசிய முஸ்லிம் கவுன்ஸில் இதனை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் இக்கருத்தை வெளியிட்டி ருக்கிறார். மாகாண ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்றிருக்கும் பிள்ளையான் குழு ஆயதங்களைக் கீழே வைப்பதன் மூலமே ஜனநாயக நீரோட்டத்தில் முழுமையாக இணைந்து கொள்ள முடியும் என சுட்டிக் காட்டப்படுகிறது.

முதலமைச்சர் பிள்ளையான் முஸ்லிம்களுக்கு வழங்கியிருக்கும் உத்தரவாதங்களை நிறைவேற்றுவதற்கு இதயசுத்தியுடன் செயற்பட முன் வருவாரானால் அவர் தமது இயக்க உறுப்பினர்களைக் கட்டுக் கோப்புக்குள் வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.


முதலமைச்சர் பிள்ளையானிடம் அந்தக் கடிவாளம் உள்ளபோதிலும் சர்வசாதாரணமாக ஆயுதங்களுடன் நடமாடும் அடிமட்டப்போராளிகள் தொடர்ந்தும் முஸ்லிம்கள் மீது தமது கைவரிசையைக் காட்டுவார்களானால் அதற்குப் பிள்ளையானிடமுள்ள மாற்று வழி என்ன என்பதை அவரே சிந்திக்க வேண்டும்.

கிழக்கில் தோன்றியிருக்கும் இச்சிக்கல் நிலைக்கும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கும் அவரே தீர்வு தரவேண்டிய கடப்பாட்டையும் பொறுப்பையும் கொண்டிருக்கிறார். அவர் இன்று ஆயுதக்குழு ஒன்றின் தளபதி மட்டுமல்ல கிழக்கிலங்கையின் அரசியல் அதிகாரம்மிக்க முதல் வரும்கூட என்பதை மறக்கலாகாது.


STUDY IN EASTERN EUROPE

MEDICINE & ENGINEERING






Belarus இல் உள்ள மாநில பல்கலைக் கழகங்களில் அனுமதி

- இலங்கை மருத்துவ சபை, உலக சுகாதார ஸ்தாபனம் ஜி.எம்.சி. பிரித்தானியா, அமெரிக்கா, மற்றும் 150நாடுகளில் அங்கீகாரம் பெற்றது.
- உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்தும் இடமாற்றம் செய்யப்படும்.
- 200 மாணவர்களுக்கு மேற்பட்டவர்களின் பட்டியலைப் பார்வையிடலாம். அவர்கள் கூறும் கருததுக்களை பரிசீலிக்கலாம்.
- மருத்துவத்துறையில் PhD/ சிறப்பு கற்கை
- ஜூன் 15 ஆம் திகதி முதல்குழு புறப்படுகிறது.

விஸா - 100% உத்தரவாதம்

To register & for information - 0773017883

PATHE ACADEMY

PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office
37, School Lane (Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271

Overseas Student Placement Department
111-1/2, Maya Avenue Colombo-6.
Tel :0112586418

www.patheacademy.org

சுடர் ஒளி
ஜூன் 08 - ஜூன் 14 2008
85, ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## இக்கட்டான நிலையில் ஈழத் தமிழ்மக்கள்

கடந்த ஐந்து தசாப்த காலமாக நீடித்துவரும் இலங்கை இனப்பிரச்சினை பல்வேறு கட்டங்களையும் தாண்டி தற்பொழுது உள்நாட்டுப் போராக விஸ்வரூபமெடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்மக்களின் உரிமைகளைப்பெறும் நோக்கத்துடன் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த எழுபதுகளின் பிற்பகுதியில் வடக்கில் மட்டுமே போராட்டத்தின் தாக்கம் இருந்தது. பின்பு கிழக்கும் அதன் பின்பு குண்டுவெடிப்புகள், தாக்குதல்கள் என்று தெற்கும் இதன் தாக்கத்துக்கு உள்ளாகின. இனயுத்தம் தற்பொழுது முழு நாட்டையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

இதன் ஆகப்பிந்திய திருப்பம்தான் புலிகளின் பகுதிகளில் ஆழ ஊடுருவும் படையணியினர் அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்தும் கிளைமோர் தாக்குதல்களும் அதற்குப் பதிலடி போன்று கொழும்பில் இடம்பெற்றுவரும் குண்டுத் தாக்குதல்களும் ஆகும். கொழும்பு குண்டுத்தாக்குதல்களிலும் பெரும்பாலும் அப்பாவிப்பொதுமக்களே பலியாகின்றனர். இப்படியான நிலையிலேயே, இனக்கலவரத்துக்கு இடம் அளிக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி அடிக்கடி கூறிவருகிறார்.

ஏற்கனவே கிழக்கை புலிகளின்பிடியில் இருந்து மீட்டு விட்டதாகவும் கிழக்கு மக்கள் ஜனநாயக உரிமைகளை அனுபவிக்க வழி திறந்துவிட்டதாகவும் அரசு கூறியது. ஆனால், இன்று கிழக்கில் என்ன நடக்கிறது? ஒற்றுமையாக இருந்த தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் மோதிக்கொள்கிறார்கள். படையினரின் கட்டுப்பாட்டில் வரும்வரை அமைதியாக இருந்த கிழக்கு தற்போது எரிமலையாகி விட்டது.

ஆகவே, இலங்கைத் தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கி உள்ள இக்கட்டான நிலையில் அவர்களுக்கு உதவக்கூடிய ஒரே வெளிநாட்டுச் சக்தி இந்தியா என்பதில் ஐயமில்லை.

1983 இல் தமிழ் மக்கள் மீதான இனவன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு ஒரு நாள் கடந்தும் அதனை கட்டுப்படுத்தாது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வாளாவிருந்தசமயம், "உங்களால் கட்டுப்படுத்த முடியாவிட்டால் இந்தியா உதவிக்கு வரவேண்டுமா?" என்று இலங்கையை அச்சுறுத்தும் விதத்தில் இந்திராகாந்தி கேட்டிருந்தார். அத்துடன், தனது வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவை உடனடியாக இலங்கைக்கு அனுப்பினார். அது இந்திராகாந்தியின் தலைமையில் இந்தியா இருந்த காலம். அப்படியான காலம் இனியும் திரும்பி வருமா என்பது தமிழ்மக்கள் மத்தியில் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

இந்திராகாந்திக்குப் பின்னர் இந்தியாவில் பதவிக்கு வந்த எந்தத் தலைவர்களும் இலங்கைத் தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டவர்களாகத் தெரியவில்லை. தமிழ்மக்களின் போராட்டங்களை ஆயுதப் பலத்தால் அடக்கிஒடுக்கும் இலங்கை அரசுக்கு ஒத்தாசையாகவே இருந்து வருகிறார்கள். தற்பொழுது பதவியில் இருந்து வரும் மன்மோகன் சிங் அரசாங்கமும் இதனைத்தான் செய்கிறது.

இலங்கைத் தமிழ்மக்களின் போராட்டம் உள்நாட்டுப் போராக உருவெடுத்து வரும் இந்த சமயத்திலும் இந்திய அரசு நடந்துகொள்ளும்விதம் மிகவும் வேதனை அளிக்கிறது.

இந்திய அரசாங்கம் இலங்கையின் ஆயுதக் கொள்வனவுக்காக பெருமளவு பணஉதவிகளை வழங்கிவருகிறது. இலங்கையின் படை அதிகாரிகளுக்கும் இந்தியா விசேட பயிற்சிகளை வழங்கிவருகிறது. அத்துடன், ராடர் கண் காணிப்புச் சாதனங்களை வழங்கி இலங்கை அரச படைகளின் திறனை அதிகரிக்கச் செய்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகம 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், கடல்கண்காணிப்பில் இந்தியாவின் பங்களிப்பு இலங்கைக்கு பெரும் அளவில் உதவுவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு; யுத்தம் தீர்வு அல்ல என்று இந்தியா சமீபகாலமாகக் கூறிவருகிறது. அதேசமயம் இலங்கையில் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அரச படைகளுக்கு பெருமளவு உதவிகளைச் செய்துவருகிறது. இந்த இரட்டைவேடம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப்போகிறது?

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவானசக்திகள் தற்பொழுதுகுரல் கொடுத்து வருகின்றன. ஆனால், உருப்படியான ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டம் எதுவும் அங்கு இல்லை. ஈழத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசாங்கம் தலையிடவேண்டும் என்று வெறும் கோரிக்கையுடனேயே அவர்களின் போராட்டம் நிற்கிறது.

ஆகவே இலங்கையில் தற்பொழுது எழுந்துள்ள மிகவும் நெருக்கடியான கட்டத்தில் யதார்த்தநிலையை உணர்ந்து இதயசுத்தியுடன் இந்தியா செயற்பட வேண்டும். இந்தியா வரலாற்றுத் தவறு இழைக்கக்கூடாது.

# கிழக்கில் புலிகளின் நிலைகளைக் கண்டறிவதில் சவால்களை எதிர்கொள்ளும் சிங்களப்படை

வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை முடிவின்றி நீண்டு சென்று கொண்டிருக்கும் நிலையில், கிழக்கில் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியிருக்கும் தாக்குதல்களால் படையினர் முன்னுள்ள நெருக்கடி மேலும் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

கிழக்கில் இருந்து விலகிச் சென்ற ஜெயந்தன படையணியை புலிகளின் தலைமைப்பீடம் மீண்டும் கிழக்கிற்கு அனுப்பி வருவது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், தேர்தல் முடிந்த மறுநாள் 11 ஆம் திகதி மட்டக்களப்பு அரசடியிலும், 16 ஆம் திகதி நாவற்குடாவிலும், 20 ஆம் திகதி அரசடியிலும் வைத்து தலா ஒவ்வொரு பொலிஸார் என மொத்தம் மூன்று பொலிஸார் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். அதுவும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தநிலையில்!

*கிழக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களுக்கும் புதிதாக சிறப்பு தாக்குதல் தளபதிகளை புலிகளின் தலைமை நியமித்திருப்பதானது புலிகளிடம் கிழக்கிற்கு அணிகளை அனுப்புமளவுக்கு ஆளணி வளம் இருப்பதையே காட்டுகிறது.*

மட்டக்களப்பில் மட்டுமன்றி திருகோணமலையிலும் தேர்தல் நடைபெற்ற 10 ஆம் திகதி அதிகாலை 2.23 மணிக்கு ஏ.520 என்ற ஆயுத விநியோகக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதும். அன்று காலை அம்பாறை, பன்னலகம என்ற இடத்தில் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தியிருந்ததும் கிழக்கின் அனைத்து பகுதிகளுக்குள்ளும் மோட்டார் தாக்குதல்களை நடத்தும் வலிமையுடன் புலிகள் ஆழமாக ஊடுருவியுள்ளனர் என்பதையே காட்டுகிறது.

கடந்த 20ஆம் திகதி அம்பாறை ரூபஸ் குளத்தில் அதிரடி படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அதிரடி படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லலப்பட்டார். நான்கு பேர் படுகாயமடைந்தனர். கடந்த 22 அம் திகதி அம்பாறை, அக்கரைப்பற்று ஊரணியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயம் அடைந்திருந்தார். மறுநாள் 23 ஆம் திகதி அம்பாறை பக்மிட்டிய என்ற இடத்தில் நடந்த கிளைமோர் தாக்குதலில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயம் அடைந்தார். 20 ஆயிரம் இராணுவத்தினர், 10 ஆயிரம் பொலிஸார் என சுமார் 30 ஆயிரம் படைத் தரப்பினரின் பாதுகாப்பு வலையத்தை உடைத்துக் கொண்டு புலிகளின் அணிகள் கிழக்கிற்குள் ஊடுருவியுள்ளதையே இந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டு கின்றன.

மகிழினி

அதுமட்டுமின்றி, கிழக்கில் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளமை படைத்தரப்பிற்கு புதிய நெருக்கடிகளையும் தலைவலியையும் ஏற்படுத்தியிருக்கிறது. அதேநேரம், கடந்த 22 ஆம் திகதி மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா படையினருடன் சேர்ந்தியங்கும் பிள்ளையான் குழுவின் ஆரையம்பதி பொறுப்பாளரும், அக் குழுவின் முக்கிய பிரமுகருமான சாந்தன் துப்பாக்கிதாரிகளால் ஓட ஓட விரட்டி விரட்டி சுட்டுக்கொல்லப்பட்டமையும், அதனையடுத்து அங்கு இடம்பெறும் வன்முறையும் கிழக்கில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

முஸ்லிம்களே சாந்தனை சுட்டுக் கொலை செய்தனர் என்று பிள்ளையான் குழு குற்றம் சுமத்துகின்ற போதும் அதனை முஸ்லிம்கள் அடியோடு நிராகரித்துள்ளனர். கிழக்கை முழுமையாக கைப்பற்றி, அங்கு ஒரு தேர்தலை நடத்தி, மாகாண நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தியிருப்பதாக சிங்களம் கௌரவத்துடன் கூறிக்கொள்ள முடியாத நிலைக்கு புலிகளின் ஊடுருவல்களும் தாக்குதல்களும் கிழக்கில் அதிகரித்துவிட்டன இத்தகையதொரு நிலையில் கிழக்கு பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் கூறிவரும் தகவல்களில் எதுவித உண்மையுமில்லை என்ற கருத்து சிங்கள மக்கள் மத்தியில் கூட உருவாகி வருகிறது.

கிழக்கில் அதிகரித்திருக்கும் தாக்குதல்களைப் பொறுத்தவரை ஒரே சமயத்தில் மூன்று மாவட்டங்களிலும் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. புலிகளின் சிறிய குழு ஒன்றே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாக படைப் புலனாய்வுப் பிரிவினர் கூறிவரும் தகவல்கள் மேற்படி மூன்று மாவட்டங்களிலும்



ஒரே சமயத்தில் இடம்பெறும் தாக்குதல்கள் பொய்ப்பிப்பதாகவே அமைந்துள்ளன.

அதாவது, ஏற்கனவே இருந்ததைவிட மேலதிகமான அணிகள் வன்னியிலிருந்து கிழக்கிற்கு விரைந்துள்ளன. கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திற்குமென சிறப்புத் தளபதியும், தாக்குதல் தளபதிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் தாக்குதல்களை மேற்கொண்டுவரும் ஜெயந்தன் படையணியின் சிறப்புத் தளபதியாக கேணல் கீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட புலிகளின் தாக்குதல் சிறப்புத் தளபதியாக கேணல் வசந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியாக கேணல் ராம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களில் கீர்த்தியும், வசந்தனும் பிரிகேடியர் பால்ராஜின் அஞ்சலி நிகழ்வில் தலைவர் பிரபாகரனுடன் இணைந்து பங்கேற்றிருந்தனர். தளபதி கேணல் இந்நிகழ்வில் பங்கேற்கவில்லை. அவர் அம்பாறையில் நிலைக்கொண்டு தாக்குதல்களை ஒருங்கிணைத்து வருவதாகக் கூறப்படுகிறது.

புலிகள் கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்புத் தாக்குதல் தளபதிகளை நியமித்து களமிறக்கியிருப்பது முக்கியத்துவம் மிக்கதாக பார்க்கப்படுவதுடன் கிழக்கில் தாக்குதல்கள் மிகவேகமாக அதிகரிக்கும் சாத்தியங்களையும் தோற்றுவித்திருக்கிறது.

வன்னியிலிருந்து கிழக்கிற்கு வருகை தந்த புலிகள் திருகோணமலையின் வடக்கேயுள்ள பேராறு பகுதியில் தரையிறங்கி அங்கிருந்து மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் நகர்ந்துள்ளனர் என்று தெரிய வருகிறது. பேராறு பகுதியில் தரையிரங்கிய இந்த அணியினரின் கிழக்கு நகர்வு [illegible]ித்து முகர்ந்து பிடித்து படையினர் கந்தளாய் சிற்றாறு பகுதியிலும் மீக்ஸ்கொடல்ல பகுதியிலும் வைத்து மேற்படி புலிகளின் குழுவுடன் வழிமறிப்பு தாக்குதலில் ஈடுபட்டனர். எனினும், படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு - போக்குக்காட்டி விட்டு - உரிய இடங்களை புலிகளின் அணிகள் சென்றடைந்திருக்கின்றன. வன்னியில் தினமும் கடும்மோதல்களும் உயிரிழப் புகளும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையிலும் புலிகள் கிழக்கிற்கு தமது அணிகளை அனுப்புகின்றனரெனில் அதற்கு வலுவான காரணங்கள் இருக்கவே செய்யும். குறிப்பாக, படையினரின் போர்த்திட்டங்களைக் குழப்புவதே கிழக்கில் மீண்டும் களமிறக்கப்படும் புலிகளின் முக்கிய பணியாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வன்னியைச் சூழ கடுமையான தாக்குதல்கள் இடம்பெற்று வருகையில் வன்னியைச் சூழ்ந்துள்ள களமுனைகளில் குவிக்கப்பட்டுள்ள படையினரின் கவனத்தைக் குலைப்பது அல்லது அங்குள்ள படையினரை பரவலாக்குவதே புலிகளின் உத்தியாகும். கிழக்கில் படையினருக்கு ஏற்படும் நெருக்கடியானது வன்னிக்களமுனைகளில் இத்தகையதொரு நிலையை இலகுவில் ஏற்படுத்திவிடும். எனினும், கிழக்கில் தற்போது இடம்பெறும் சிறிய சிறிய தாக்குதல்களால் இத்தகையதொரு நிலையை புலிகளால் அடைந்து கொள்வது கடினமே. எனவே, எதிர்வரும் நாட்களில் கிழக்கில் தமது தாக்குதல்களை புலிகள் தீவிரப்படுத்தும் சாத்தியங்களே அதிகமாகவுள்ளன. மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த கையோடு புலிகள் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருப்பதை வைத்துக் கொண்டு மாகாணசபை நிர்வாகத்தைக் குழப்பும் வகையில் புலிகளின் மேலதிக அணிகள் களமிறக்கப்பட்டிருக்கலாமென எழுந்தமானமாகக் கூறிவிடமுடியாது.

அப்படி மாகாணசபை நிர்வாகத்தைக் குழப்புவதானால் தேர்தல் காலத்தில் புலிகளின் அணிகள் கிழக்கில் தமது கைவரிசையைக் காட்டி தமது நோக்கத்தை இல்குவாக அடைந்திருக்கலாம். ஆனால், தோதல் காலத்தில் அப்படி எதுவும் நடக்கவில்லை. ஆகவே, புலிகளின் நோக்கம் அதுவல்ல.

அம்பாறையிலும் மட்டக்களப்பிலும் பாதுகாப்புத் தரப்பினர் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல்களைப் பார்க்குமிடத்து படைத்தரப்பிற்கு நெருக்கடி ஏற்படுத்துவதே புலிகளின் திட்டமென்பது வெளிப்படையாகி உள்ளது. அத்துடன், கிழக்குத் தேர்தல் முடியும்வரை நிறுத்தப்பட்டிருந்த சுமார் 20,000 படையினரில் கணிசமானோரை தேர்தல் முடிந்தபின்னர் வடக்கிற்கு நகர்த்தும் திட்டம் இராணுவத் தளபதியிடம் இருந்ததாகவும் முன்னர் கூறப்பட்டது. எனவே, கிழக்கில் தேர்தலுக்குப் பின்னர் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்தி படையினரை வடக்கிற்கு நகர்த்தும் திட்டத்தைக் குழப்பவும் புலிகள் திட்டமிட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

அதையும் மீறி வடக்கு நோக்கி படையினர் நகர்த்தப்படும் பட்சத்தில் கிழக்கில் களையெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புலிகளுக்கு வாய்ப்பாகிவிடும். அந்தவகையில் கிழக்கில் மீண்டும் களமிறக்கப்பட்டுள்ள புலிகளால் படைத்தரப்பு பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கப்போவது உறுதியாகி இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கிழக்குப் பிராந்தியக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜம்மிக லியனகே தலைமையிலான் மூன்று படையணிகள் நிலைகொண்டுள்ளன. 21 ஆவது 22 ஆவது 23 ஆவது படையணிகளே இவையாகும். இந்த மூன்று படையணிகளும் தாக்குதல் படையணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. 21ஆவது படையணி கஜசிங்கபுரத்திலும் 22 ஆவது படையணி திருகோணமலையிலும் 23 ஆவது படையணி வெலிக்கந்தையிலும் நிலைகொண்டுள்ளன.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என மேற்படி தாக்குதல் படையணிகளும் நிலைநிறுத்தப்பட்டிருந்தாலும் புலிகள் கிழக்கில் எந்தெந்த இடங்களில் நிலைகொண்டுள்ளனர் என்பதைக் கண்டறிவதில் படைத்தரப்பு பாரிய சவால்களுக்கு முகம்கொடுத்திருப்பது வெளிப்படையே. இந்நிலையில் புலிகள் யால வனவிலங்கு சரணாலயப் பகுதிக்குள் மீண்டும் நுழைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்தவாரம் படைப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்திருக்கும் தகவல்களின்படி புலிகளின்

(23ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சி இழப்பை நோக்கி காங்கிரஸ் கட்சி

இந்தியாவின் ஆளும் கட்சி கடந்த சில மாதங்களாக தேர்தல்களில் தோல்வியை மட்டுமே கண்டு வருகிறது. கேரளா, மேற்குவங்கம், பஞ்சாப், பீஹார், உத்தரபிரதேசம் என வரிசையாக மாநிலசட்டசபை தேர்தல்களில் அடிமேல் அடிவாங்கி வருகிறது ஆளும் கட்சியான காங்கிரஸ். இந்த வரிசையில் சமீபத்தில் கர்நாடகமும் சேர்ந்து கொண்டது. சோனியா, ராகுல் என நட்சத்திர பிரசாரகர்களின் பிரசாரத்தையும் புறங்கண்டு பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றுவிட்டது.

இன்னும் 11 மாதங்களில் அடுத்த லோக்சபா தேர்தல்கள் நடைபெற வுள்ள நிலையில் கர்நாடக சட்டசபை தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்கு சோர்வுதரும் வகையில் உள்ளன. பி.ஜே.பியோ படு உற்சாகத்தில் திளைத்திருக்கிறது. உலகளாவிய உணவுத் தட்டுப்பாடு இந்தியாவையும் பாதித்திருப்பதால் விலைவாசி உயர்வு கர்நாடகத்தில் காங்கிரஸின் தோல்விக்கு ஒரு காரணம் என்பது உண்மைதான். எனவே, பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முயற்சிகளில் காங்கிரஸ் அரசு முழுமூச்சாக இறங்கியிருக்கிறது. இலங்கை போன்ற அண்டை நாட்டில் பணவீக்கம் 30% ஐ தாண்டும் நிலையில் இந்தியாவில் இது 7-8% ஆகவே உள்ளது. எனினும், இருந்ததை விட விலைவாசி உயர்கையில் மக்களின் கசப்புணர்வை சம்பாதிக்கவே நேரிடும். ஈவிரைந்து விலைவாசிகளை கட்டுப்படுத்தாவிட்டால் காங்கிரஸ் எதிர்வரும் லோக்சபா தேர்தலில் மண்கவ்வுவது திண்ணம்.கர்நாடக தேர்தலில் கட்சி தோற்றாலும் கடந்த தேர்தலில் வென்ற 65 இடங்களுடன் ஒப்பிடும் போது இம்முறை பெற்ற 80 ஆசனங்கள் ஒரு முன்னேற்றமே. இன்னும் சிறப்பாக வியூகம் அமைத்திருந்தால் வெற்றியை அண்மித்திருக்கலாம் என்பது தெளிவாக புலப்படுகிறது. தென் மாநிலம் ஒன்றில் பி.ஜே.பி தனித்து ஆட்சிபீடம் ஏறும் வரலாற்று நிகழ்வு நடந்தேறியுள்ளது. பி.ஜே.பி இந்த வேகத்தில் வெற்றிகளை குவித்துச் சென்றால் அடுத்த ஆட்சியை அக்கட்சி



அமைப்பதில் எந்த தடையும் இராது. அக்டோபரில் முக்கிய ஹிந்தி மாநிலங்களான மத்தியபிரதேசம், ராஜஸ்தான், சத்திஷ்கர், டில்லி ஆகியவற்றின் சட்ட சபைத்தேர்தல்கள்

பத்திரத்து வீட

நடைபெறவுள்ளன. இவற்றில் வெற்றி பெறுவதற்கு வியூகம் வகுக்கும் முயற்சிகள் இப்போதே ஆரம்பமாகிவிட்டன. இவற்றில் பி.ஜே.பி தான் இப்போது ஆளும் கட்சியாக உள்ளது. முறைப்படி பார்த்தால் காங்கிரஸ் கட்சி இந்த தேர்தல்களில் வெல்ல வேண்டும். இம்மாநிலங்களில் மாறி மாறி பி.ஜே.பியும், காங்கிரஸுமே ஆட்சியில் இருந்துள்ளன. எனவே, இந்தமுறை காங்கிரஸ் கட்சியின் முறையாகும். இதனையும் தவறவிட்டால் கட்சி சோர்வின் உச்சத்துக்கு தள்ளப்படும். சோனியா காந்தி தமது 10 ஆண்டு அரசியல் வாழ்வில் பல சவால்களை சமாளித்து தலைநிமிர்ந்த ஒருவராவார். போட்டி நிறைந்த இந்திய அரசியல் களத்தில் எதிர்நீச்சல்போடும் வல்லமை அவருக்கு உண்டு என்பதை அவர் பல தடவைகள் நிரூபித்துள்ளார். எனினும், எதிர்வரும் மாதங்கள் அவருக்கு மிகுந்த சோதனையான மாதங்களாக இருக்கும். சாதி அடிப்படை யிலான கட்சிகள் தலையெடுத்து வருவது தேசிய கட்சியான காங்கிரஸுக்கு முக்கிய தலைவலியாக உள்ளது. இது தவிர எரிபொருள் விலை உயர்வு, கூட்டணி கட்சிகளின் நெருக்குவாரம் என பல முனைகளில் போராட வேண்டிய நிலைக்கு சோனியா காந்தி தள்ளப்பட்டுள்ளார். இவற்றை விட கட்சிக்குள் ராகுல் காந்திக்கு குடை பிடிக்கும் கூட்டத்தினரின் அழுத்தங்கள் வேறு சோனியா காந்தியை சிரமத்துக்குள்ளாக்கி வருகின்றன. மத்திய அமைச்சரும் தீவிர சோனியா விசுவாசியாக இருந்தவருமான கல்வி அமைச்சர் அர்ஜுன் சிங் சமீபத்தில் ராகுல் காந்தி பிரதமராக வேண்டும் என்று கூறிய கருத்து பல சர்ச்சைகளை கிளப்பியது. மன்மோகன் பதவியில் இருக்கும்போது இவ்வாறு பகிரங்கமாக பேசுவது நல்லதல்ல என்று சோனியா கருதுகிறார். சோனியா-மன்மோகன், சோனியா-கருணாநிதி உறவு என உயர்மட்டத்தில் சோனியாகாந்தி அற்புதமாக நட்பை பேணி வருகிறார். அதற்கு ஆப்புவைக்கும் வகையில் ராகுல்காந்தியின் ஆதரவாளர்கள் நடந்து வருகின்றனர். உதாரணமாக ராகுலின் நண்பரும் காலம்சென்ற காங்கிரஸ் தலைவர் மாதவராய்சிந்தியாவின் மகனுமான ஜோதிராதித்யா சிந்தியா தகவல் தொழில் நுட்ப இணை அமைச்சராக்கப்பட்டதை குறிப்பிடலாம். தகவல் தொழில் நுட்ப அமைச்சராக இருந்த தயாநிதி மாறன் கலைஞருடன் முரண்பட்டு வெளியேறினார். அந்த இடத்துக்கு மூத்த தி.மு.க தலைவர் ராசாவை தி.மு.க பிரேரித்தது. ராசா அமைச்சை சரியாக நிர்வகிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு ராகுலிடம் வைக்கப்பட்டது. இதனால் ராகுலின் நண்பரான சிந்தியாவை அதே அமைச்சில் இணை அமைச்சராக்க ராகுல் வழியுறுத்தினார். சோனியாவும் இணங்கினார். இது தி.மு.க தலைவருக்கு பிடிக்கவில்லை என்று தெரிகிறது. இவ்வாறே ராகுலின் வற்புறுத்தலால் உத்தரபிரதேச மூத்த தலைவரான அகிலேஷ்தான் அமைச்சு பதவியிலிருந்து தூக்கப்பட்டார். ராகுலிற்கு ஜால்ரா போடும் கூட்டம் கட்சியை சின்னாபின்னமாக்கிவிடலாம் என்ற அச்சம் காங்கிரஸின் தலைவர்களிடையே தோன்றியுள்ளது. இதேபோன்று ராஜீவும் பிரதமராக இருந்தபோது தனது பள்ளித்தோழர்களின் ஆலோசனையில் அரசு நடத்த முயன்று தலைகுப்புற விழுந்தது பலருக்கு நினைவிருக்கலாம். சோனியாகாந்தி போராடி அரசாட்சியை கைப்பற்றியவர். அவரது வயதும் அவரது அரசியல் முதிர்ச்சிக்கு ஒரு காரணம். ஆனால், ராகுல்காந்தியை பொறுத்தவரை தந்தையைப் போல அனுபவமின்மையும் கூட்டாளிகளின் பிழையான வழிநடத்தலும் நிலைமையை சிக்கலாக்கிவிடக்கூடிய ஆபத்துநிறையவே உண்டு. தற்போதைக்கு சோனியா காந்தி, ராகுல் சொல்வதற்கு எல்லாம்

**எஸ்.சுரேந்திரஜித்**

ஆடும் நிலைக்குள் இன்னும் முற்றாக விழுந்து விடவில்லை. ஆனால், அந்த ஆபத்து நிறையவே உண்டு. புத்திர பாசம் கண்ணை மறைப்பதான இந்த ஆபத்தை அவர் உணரா விட்டால் சிக்கல் அதி கரிக்கும். எந்த மகனுக்காக இவ்வளவு போராடி இந்த கட்சி சாம்ராஜ்யத்தை மீளக்கட்டியெழுப்பினாரோ அந்த மகனாலேயே அது சுக்குநூறாகும் அவலத்தை அவர் காண நேரிடலாம்.

# அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார்?

குடியரசுக் கட்சியின் ஜோன் மக்கெய்ன் அல்லது ஜனநாயகக் கட்சியின் பராக் ஒபாமா. இந்த இருவரில் ஒருவரை அடுத்த ஜனாதிபதியாக அமெரிக்கா தெரிவுசெய்யவுள்ளமை உறுதியாகியுள்ளது.

இருவரும் தம்மை இருதரப்பினதும் சீர்திருத்தவாதிகளாக முன்னிலைப் படுத்துகின்றனர். அதேவேளை கொள்கை முதல் கொண்டு தோற்றம், அனுபவம்வரை இருவருக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.


புஷ்ஷுக்குப் பின்னர் 44ஆவது ஜனாதிபதியாக வரப்போகின்றவரை தெரிவுசெய்வதற்கான பிரசாரத்தில் அடுத்த ஐந்து மாதங்களும், தளர்ச்சியடையும் பொருளாதாரம் முதல் ஈராக் யுத்தம் வரை பல விடயங்கள் பேசப் படப்போகின்றன.

71 வயதான பழுத்த அனுபவம் மிக்க மக்கெய்ன் அமெரிக்க காங்கிரஸ் ஒருபோதும் அல்குவைதாவிடம் சரணடையக்கூடாது என வாதிடுபவர். தெரிவு செய்யப்பட்டால் இவரே அமெரிக்காவின் வயது கூடிய ஜனாதி பதியாக விளங்குவார்.

ஒபாமா



46வயதுடைய பராக் ஒபாமா கறுப்பு இனத்தவர். ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உறுதியளித்துள்ளவர். இவர் தெரிவு செய்யப்பட்டால் வெள்ளை மாளிகையில் முதலாவது கறுப்பினத்தவராக விளங்குவார்.




தேர்தலில் எவர் வெற்றிபெற்றாலும் நாடு செல்லும் திசையில் பாரிய மாற்றங்கள் ஏற்படப்போவது உறுதி என்கிறார் ஜோன் மக்கெய்ன். ஆனால், மக்கள் தெரிவுசெய்யவேண்டியுள்ள விடயம், எது சரியான மாற்றம் எது பிழையான மாற்றம் என்பதே என்பது அவரது கருத்து.

இதற்குப் பதிலளிக்கும் ஒபாமா, மக்கெய்ன் புஷ்ஷின் கொள்கைகளை புதிய கொள்கைகளாகக் காட்ட முயல்கிறார் என்கிறார். நவம்பர் 4இற்கு முன்னர் விடை காணப்படவேண்டிய முக்கிய கேள்விகள் சில உள்ளன.

மக்கெய்னால், மக்கள் ஆதரவற்ற புஷ்ஷின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு, மாற்றத்துக்கான மக்களின் தீவிர விருப்பத்தை ஏற்றுக்கொள்ளமுடியுமா? நாட்டின் அடிமைக்காக வரலாற்றிலிருந்து உருவான கசப்பான வாதப்பிரதி வாதங்களிலிருந்து ஒபாமா விடுபடுவாரா?

**ரஜீவ்**

வெள்ளை மாளிகைக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு 270 தொகுதிகளைக் கைப்பற்றவேண்டும். 14 மாநிலங்களில் கடும்போட்டி நிலவும்.

தமது கட்சிகள் கடந்த முறை வென்ற மாநிலங்களை காப்பாற்றுவதற்கு இருவரும் கடுமையாகப் போட்டியிடுவர். மக்கெய்ன் ஜனநாயகக் கட்சியிடம் உள்ள மாநிலங்களை இலக்குவைப்பார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பதவிவகிக்கும் ஜனாதிபதியோ அல்லது உபஜனாதிபதியோ போட்டியிடாதது அரைநூற்றாண்டில் இதுவே முதல்தடவை.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

எப்படியும் செய்யலாம் என்பது ஒருவழி: இப்படித்தான் செய்வது என்பது வேல்அமுதன் வழி! வேல்அமுதன் வழியில் 'சுயதெரிவுமுறை' பற்றிய விபரம்அறிய சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்ப சிட்டியூர் மாயெழுவேல் அமுதனிடம் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் தொடர்புகொள்க! வேல் அமுதனின் கொழும்பு நேரடி தொலை பேசி: 2360488, 2360694, 4873929.

## தேவை

நிறுவனமொன்றிற்கு Computer Type Setters உடனடியாகத் தேவை. அத்துடன் கொழும்பு வீதிகளில் நன்கு பரிச்சயமுள்ள சாரதி ஒருவரும் தேவை. சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 83-D, Hampden Lane, Wellawatte, Colombo 06. Tel:2366042.

---

கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள பிரபல சைவ ரெஸ்டூரண்டுக்கு வெயிட்டர்மார்கள் (ஆண், பெண்) இருபாலாரும் உடன்தேவை. சம்பளம் ரூபா 5,000/= தரப்படும். நாள் ஒன்றுக்கு 600/= முதல் 1,000/= வரை சன்மானமாக தேடலாம். உணவு, தங்குமிட வசதி இலவசம். உடன் நேரில் வரவும். விலாசம்:- SRIYANI, NO.131, 2ND CROSS STREET, COLOMBO -11.

---

புறக்கோட்டையிலுள்ள வர்த்தக ஸ்தாபனத்திற்கு நன்கு அனுபவமுள்ள சமையல்காரர் தேவை. மூன்று நேரம் சமையல். உடன்வரவும். 116,4th Cross Street, Colombo 11.

---

Dehiwala யில் இயங்கும் தனியார் நிறுவனமொன்றிற்கு Marketing Executive தேவை. 25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். மலையக இளைஞர்கள் விரும்பத்தக்கது. யாழ்ப்பாணத்தில் Agent Rep ஆக வேலை செய்யக்கூடியவர்களும் தொடர்பு கொள்ளவும். Tel:077 6380850.

---

வீட்டுப் பணிப்பெண், காவலாளி, சாரதி, பராமரிப்பாளர், சமையற்காரர், வீட்டுப்பையன் கொழும்பு பங்களாக்களில் வேலைக்குத் தேவை. சம்பளம் 8,000/= - 12,000/= இடையில். அரச அனுமதி பெற்ற சமித் ஏஜென்சி, 53/F, கொஸ்யின்னவத்தை, கட்டுவாவல, பொரலஸ்கமுவ. 011 4868554, 011 5620504. புறக்கோட்டை - பிலியந்தலை 120 வீதி, கட்டுவாவல 10 ஆம் கட்டை சந்தியில் இறங்கவும்.

---

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். தங்குமிட வசதி வழங்கப்படும். மலையகத்தோருக்கு முன்னிடம். நேரில் வரவும். அருண் டெக்ஸ்டைல்ஸ் இல.12, Gampola Road, Nawalapitiya. Tel: 071 6815023, 054 2223027.

---

அக்கரைப்பத்தனையில் அமைந்துள்ள தனியார் தேயிலைத் தோட்டம் ஒன்றிற்கு சுப்பர்வைசர் ஒருவர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். The Superintendint, Powysl and Estate, Dayagama. TV, DVD, Radio திருத்துனர்கள் முன் அனுபவமுள்ளவர்கள் உடனடியாகத் தேவை. Sea St. EAP எதிரிசிங்க முன்னால் Sinhico Electronic, 1.5/2B, Beach Street, Colombo - 11. Tel:4934858, 4999535, 072 2111279

---

கொச்சிக்காய் அரவைமில்லுக்கு அனுபவமுள்ள பாஸ்பைசை ஆள் தேவை. சம்பளம் or கமிஷன் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் 88 St.Sebastian Street, Colombo 12.

---

Teachers தேவை. All Subjects UKG to Grade 7 (English Medium) Tuition Teachers தேவை. Montessori Teachers வெற்றிடமும் உண்டு. English Medium Montessori அனுபவமுள்ள Montessori Diploma சான்றிதழுடன் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். தொடர்புகளுக்கு: Xcellence International Academy, 100, New Chetty Street, Colombo 13. 0773 865355,0777287932.

---

இரவு/பகல் சிகிச்சை நிலையத்திற்கு ஆண்/பெண் உதவியாளர் தேவை. நேரில்வரவும். தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 6,000/=. ஜெனரல் மெடிகல் சென்டர், 105/05 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10. 077 7357277.

---

கொழும்பு நகரில் பிரபல்யமான புத்தக காட்சியறைக்கு மற்றும் களஞ்சியசாலைகளில் அனுபவமுள்ள / அனுபவமற்ற வயது 18-25 இடைப்பட்ட க.பொ.த. சா/த வரை பயின்ற ஊழியர்கள் தேவை. கிழமை நாட்களில் காலை 9-5 மணிக்கிடையில் நேர்முகப்பரீட்சைக்கு நேரில்வரவும். நேரத்தை ஒதுக்கிக் கொள்ளவும். தொலைபேசி:011 4877227.

## வாடகை

வெள்ளவத்தை Rohini Roadஇல் சகல தளபாட வசதிகளுடன் (Including Kitchen Utencils) 3 அறைகளைக் கொண்ட Luxury Apartments with A/C ஒரு மாதம் அல்லது ஒருவருடம் வரை வாடகைக்கு உண்டு. வாடகை பேசித் தீர்க்கலாம். தொடர்பு:2624547/0777 667002.

---

காலி வீதியில் இருந்து 50மீற்றர் தூரத்தில் (Land Side) உள்ள வீடுவாடகைக்கு கொடுக்கப்படும். குறைந்த மாதம் 6 மாதங்களும் விரும்பப்படும். வீட்டிற்கு தேவையான Fridge, Washing Machine, TV, சோபா தளபாடங்களும் உள்ளன. Tel:4969641.

---

தெஹிவளையில் 2 பெரிய அறைகளுடன் காலி வீதியில் இருந்து 100 யாருக்குள் முழுமையாக Tile பதிக்கப்பட்ட தொலைபேசி இணைப்புடன் வீடு வாடகைக்கு உண்டு. சிறு குடும்பம் விரும்பத்தக்கது. வாகன தரிப்பிட வசதி இல்லை. முகவரி: 21/1, 2nd Floor, Vandervert Place, Dehiwala. Tel: 2729905.

---

வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கு Mattakuliya Crow Island இல் நல்ல சூழலில் கடற்கரை சமீபமாக நல்ல சுவாத்தியமுள்ள வீடு, அறைகள் A/C யுடன் கூடியது. Fully Furnished நாளாந்த, வார, மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்படும். அத்துடன் திருமணம் மற்றும் வைபவங்களுக்கு ஏற்ற மண்டபமும் வாடகைக்கு விடப்படும். தொடர்பு:2520748, 078 6168970.

---

தெஹிவளை Hill Street சமன் மாவத்தையில் (Quarry Road) Large Tile பதிக்கப்பட்ட Hall, கராஜ், 2 படுக்கையறை Pantry Kitchen, 2 Bathroom மற்றும் சகல வசதிகளுடன் தனி வீடு வாடகைக்கு உண்டு. 14,000/=. 2715391.

---

வெள்ளவத்தைக்கருகில் தளபாட, சமையல், ஏனைய வசதிகளுடன் AC, Non-AC அறைகளுடன் வீடு. நாள், கிழமை அடிப்படையில் வாடகைக்கு விடப்படுகிறது. வெளிநாடு, உள்நாட்டிலிருந்து விடுமுறை, சடங்குகாரியங்களுக்காக வருவோர்களுக்கு, சிறந்த சூழலில், தரமான சிக்கனமான தெரிவு. 077 3874292, 2721798.

---

கொள்ளுப்பிட்டி, இணைந்த குளிய லறைகளுடன் மூன்று படுக்கையறைகள் தரிப்பிடவசதி நான்கு வாகனங்களுக்கு வியாபாரத்திற்கும் உகந்தது. Terrazo தரை SLT Wire Line மாதம் 40,000/=, 142/1, காலி வீதி, 0777 357277.

---

புதிய பெரிய மாடி வீடு வாடகைக்கு சகலவசதியுடன் இரண்டு பெரிய அறைகள் முழுவதும் Tiles பதிக்கப்பட்டு உள்ளது. வாகனம் நிறுத்தலாம். தொலைபேசி வசதியுள்ளது. தொடர்பு: 5030939, 4859662. கூடுதலாக முஸ்லிம் குடும்பம் விரும்பத்தக்கது. 139, Abeyratna Mawatha, Borelesgamuwa.

---

கொழும்பு 13 கொட்டாஞ்சேனை Jampettah Street, No.257 இல் அமைந்துள்ள 4 Stories Building வாடகைக்கு விடப்படும். ஒவ்வொரு தட்டும் 450 ச. அடி பரப்பளவைக் கொண்டதுடன் தனியான Toilet வசதியுடன் 3 Phase Power Supply யுடன் அமைந்துள்ளது. Offices, Tuition Centers, Harbour Clearing Office, Clinic Centre போன்றவற்றுக்கு உகந்தது. தொடர்பு: 011 2331616 0777 382916.

---

வெள்ளவத்தையில் சகல வசதிகளுடனான அறை படிக்கும்/ வேலைசெய்யும் ஆண் ஒருவருக்கு பகிர்ந்து தங்குவதற்கு வாடகைக்குண்டு. No.40, பெர்னாண்டோ றோட் (Delmon Hospital இற்கு அருகில்)

---

W.A.Silva Mawatha (வெள்ளவத்தை Royal Hospital இற்கு அண்மையில்) 3 அறைகள், 2 குளியலறை முழு வீட்டுத் தளபாடங்களுடன் கூடிய வீடு கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. தொடர்பு:2587570 2505814 H.P:0712203568.

---

வெள்ளவத்தையில் Seperate Annex வாடகைக்கு உண்டு. Hall, 1Room With Attach bathroom, Kitchen, Seperate Light bill, Water Bill, Cable Bill தொடர்பு கொள்ளும் முகவரி:-3/2, Arethusa Lane, Wellawatte, Colombo - 06.

---

வெள்ளவத்தையில் காலி வீதிக்கு மிக அருகில் அழகிய சொகுசு தொடர் மாடி வீடு 3 படுக்கையறை, 2 குளியலறை, 2 A/C, Hot Water சகல தளபாட வசதிகளுடன் வார, மாத வாடகைக்குண்டு. (2,500/= pre Day) 0777 550949.

---

வத்தளை - ஹெந்தளையில் பாதுகாப்பான சூழ்நிலையில் உள்ள வீட்டில் உயர் கல்வி பயிலும், நல்ல தொழில் புரியும் ஆண்களுக்கு தங்குமிட வசதி. பஸ் தரிப்பிடத்திற்கு 8 நிமிட தூர நடை. சியாரிசு தேவைப்படும். தொடர்பு: 071 4142976 2981830.

---

கொழும்பு 11 மெனிங் மார்க்கட்டில் இரண்டு மாடிகளைக்கொண்ட விசாலமான கட்டடம் தற்பொழுது ஹோட்டல் நடைபெறுகின்றது. அரிசி, கிழங்கு, வெங்காயம் தொகை களஞ்சியசாலைக்கு அல்லது ஹோட்டல் ஒன்றிற்கு மிகவும் உகந்தது. மிக பெரிய அளவிலான வருமானம் பெறும் ஸ்தாபனம் வாடகைக்கு உண்டு. தொடர்பு:071 2755365 2321850.

## கல்வி

Maths, English Medium (Edexcel & Cambridge) Leading School ஆசிரியரினால் O/L, A/L வகுப்புகள் Scheme of Work மூலம் Personal/Group Classes நடத்தப்படும். 077 6714688.

---

வெளிநாட்டு மொழிகள் டச் (Dutch), ஜேர்மன் (German), பிரான்ஸ் (French), ஆங்கிலம் (English) தராதரம் பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் உள்நாட்டு மொழிகள் சிங்களம் (Sinhala), தமிழ் (Tamil). இடம்: Dutch Lanka Academy, 69-1/4, Galle Road, Dehiwala. Tel:011 2718811.

---

சிங்கள மொழி வகுப்புகள் பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் மொழி Link Language Grade 06 - 09 மற்றும் Grade 01-15 G.C.E O/L 2008 இரண்டாம் மொழிக்கான விஷேட வகுப்புகள் 30 வருடங்களுக்கு மேலான அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. P.I.U.C.Institute, 23, Rudra Mawatha, Wellawatte 0777 822873.

---

Elocution (English) புதிய பிரிவுகள் ஆரம்பம். செவ்வாய், வியாழன் மாலை 4 மணி. தொடக்கம் அத்துடன், Spoken Sinhala ஆரம்பத்திலிருந்து பேச பழக கற்றுத்தரப்படும். சனி, ஞாயிறு மாலை நேரங்களில் நடைபெறும். தொடர்பு:- Royal Academy, 12-16 ,Sangamitha Mawatha, Colombo - 13. Tel.060 2134101.

---

G.C.E A/L 2009/2010 மாணவர்களுக்கான ICT புதிய பிரிவுகள் ஆரம்பம். G.C.E. (O/L) G-10 மாணவர்களுக்கான ICT வகுப்புக்களும் நடைபெறுகின்றன. தொடர்புகளுக்கு: Royal Academy, 12-16,Sangamitha Mawatha, Colombo - 13. Tel:060 2134101.

---

கொட்டாஞ்சேனையில் எல்லாப் பாடங்களிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கணிதம்,ஆங்கிலம் Spoken English, Biology, Chemistry, Physics and Other Subjects. Individual Attention. English and Tamil Medium. 011 7213605.

---

(Ms.Office, Graphic Designing, Hardware) வீடுகளுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். அத்துடன் Computer Repairs செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 077 1502000 077 5372080.

---

பன்மொழிகளில் தேர்ச்சி பெற உங்கள் அறிவுக்கு வித்திடும் EPI Institue இல் (No.316 ½, Galle Road), colombo-04, (Srilanka Institute மேல் மாடி) Spoken (English, Sinhala, German=Swiss=Deuteche, French), AAT/IAB, CMA, CIMA, Beauty Culture (சிகை, முக, உடை, அலங்காரம்), சமையற்கலை, தையல், யோகாசன பயிற்சி வகுப்புக்கள் ART ஆரம்பமாகின்றன. June 5 ஆம் திகதி முதல் சகல விபரங்கட்கும் EPI யின் தொலைபேசி 0112503697 or 0777842347.

---

Special Classes for CIMA Chartered for CIMA/ Chartered/ AAT / IAB / BBA Degree Courses & Local A/L English Medium - Econ.- Acc.- Stats., Studies, London O/L AS- A/L S1 & S2/ C1 & C2/ Lectures by M. Roy, Ideal Wellawatte. - Genius. Kotahena. 077 9914260.

---

English Language, Grammar, Comprehension Letter and Essay Writing முதலானவை International School மற்றும் உள்ளூர் பாடசாலை மாணவர்களுக்கு வீடுகளுக்கு வந்து M.A. பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். 0777 315186.

---

அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பயிற்சி பெற்ற, பல வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் சிங்கள வகுப்புக்கள் பாடசாலை மாணவர்களுக்கு, உத்தியோகஸ்தர்களுக்கு, அடிப்படையிலிருந்து அத்தோடு, கல்வி நிறுவனங்களுக்கும் சமுகமளித்து கற்பிக்கப்படும். விபரங்களுக்கு: Subash - 0777 593798.

---

A'Level 2008 - General English Rapid and Crash Course கிழமையில் இரண்டு நாட்கள் மாத்திரம் Morning, Evening, by London or Srilankan Graduate indinidual Attention, for Best Results, Contact: - 49, Mayfield Lane, Kotahena. Week Days at 3.30 - 5.30 pm.

## சேவை

அதிநவீன வசதிகளுடன் தனிப்பட்ட அறைகளுடன் TP தனியான முதியோர் பராமரிப்பு இல்லம் வயோதிபர் ஆண்/பெண் இருபாலாருக்கும் ஏற்ற அமைதியான சூழலில் உணவு, தங்குமிடம், மருத்துவம் மற்றும் எல்லாவிதமான இதர வசதிகளுடன் கொழும்புக்கு அண்மையில் வத்தளையில் அமைந்துள்ளது. கட்டணம் மற்றும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- Sri Sai Elder's Home, 641/1, Negombo Road, Kerangapokuna, Mabole, Wattala. Tel:2934359, 0714819033. Tel/Fax:- 2341704.

---

கிழக்கு மாகாணத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு வியாபார சம்பந்தப்பட்ட விற்பனைவரி, வருமான வரி உட்பட சகல கணக்குகளும் எழுதி கணக்காய்வு செய்து தரப்படும். நாடு முழுவதும் கிளைகள் உண்டு. தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவும். முகவரி:- A.Chandran, No.09, Boundary Road, Pandiruppu-02, கல்முனை. Phone:- 0774540176.

---

மட்டக்குளி பிரதேசத்தில் இருந்து Wesley College (Grade 1 & 2) மற்றும் கொட்டாஞ்சேனை பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கும் (7.30-12.50 p.m) School Van சேவை நடைபெறுகிறது. குறிப்பிட்ட அளவு பிள்ளைகளே சேர்த்துக்கொள்ளப்படுவர். தொடர்பு கொள்க:- 0723658630.

---

ஒரு பெண் முதியவருக்கு உணவு உட்பட தங்குவதற்கு தேவையான சகல வசதிகளுடன் கூடிய தனி அறை பம்பலப்பிட்டியில் உண்டு. தொடர்பு: 0713326622.

---

Satellite Channels, KTV, Sun, Sports Channels, Vijay TV மற்றும் இது சம்பந்தமான வேலைகள் தரமான முறையில் மலிவாக செய்து தரப்படும். ரிசீவர் Satellite, டிஸ் வகைகளும் உண்டு. 0773910690.

## பழுது பார்த்தல்

சகலவிதமான தொலைக்காட்சிப் பெட்டிகள் (TV) உங்கள் வீடுகளுக்கு வந்து துரிதமாகவும் உத்தரவாதத்துடனும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: (St.Jude Electronics) S.டிலான், 104/37, சங்கமித்த மாவத்தை, கொழும்பு 13. Tel: 2388247, 072 2199334.

---

Electrical, Wiring, Plumbing, Washing Machine, Fridge, Water Motor, Grinder, Fan Etc... என்பன வெள்ளவத்தை பம்பலப்பிட்டி உட்பட கொழும்பின் அனைத்துப் பாகங்களுக்கும் வந்து செய்துதரப்படும். E-Electrical Service, Sasi-077 9220271, 011 5712356.

---

கொழும்பு, கண்டி பிரதேசங்களில் வீட்டுக்கு காரியாலயங்களுக்கு நேரில் வந்து குறைந்த விலையில் Computer Repair செய்து கொடுக்கப்படும். Hardware, Software, Formatting, Installation, ADSL Internet Configuration and Virus Card Installation. தொடர்பு:முரளி 077 3920739 077 4412699.

---

Computer, Monitor, Printer Repairs Service, Maintenance & Upgrading, Net 2 Phone, Network, Software Installation ஆகியன தங்கள் இடத்திற்கு வந்து செய்துதரப்படும். தொடர்புகளுக்கு: 071 4448855.

---

சகல விதமான TV, Radio, CD Player மற்றும் Electronic பொருட்கள் உத்தரவாதத்துடன் திருத்தித் தரப்படும். வீட்டுக்கு வந்து திருத்தப்படும். தியாகு T.Tech Electronic, 2 1/1, Sri Ramanathan Mawatha, Colombo 13. Tel: 072 5445075.

## வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறை அல்வாய் முத்து மாரியம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் தெற்கு வீதியில் அமைந்துள்ள (4 அறை, 2 ஹோல், குசினி) சகல வசதிகளுடன் 2 பரப்பில் அமைந்துள்ள வீடும் சற்று அருகாமையில் 100 பனைகளுடன் கூடிய 5 பரப்புக்காணியும் Sri Lanka பள்ளிக் கூடத்திற்கு அருகாமையில் 4 1/2 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:0112552487, 0777492771.

## வைத்திய ஆலோசனை


உளவியல் தாக்கங்களால் பாதிக்கப்பட்டுவருகிறீர்களா? நாளாந்த வாழ்க்கையில் திருமணம், உறவுமுறை (Relationship), கல்வி, தொழில் சம்பந்தப்பட்ட உடல், உளரீதியான பிரச்சினைகளுக்கு வைத்தியநிபுணர் உளவளத்துணை ஆலோசனை (Counselling) வழங்குகிறார். தொடர்புகளுக்கு: 0777 248583




## வினாடிக்கதை




''தினமும் பத்து ரூபா கொடுத்திடவேணும். இல்லாட்டி நடக்கிறதே வேற....அநாதைப் பிச்சைக்காரன் என்று நாளைக்கு முனிசிபாலிட்டி வண்டியிலே ஏத்திடுவோம்...புரியுதா?'' என்று மிரட்டியவனைப் பார்த்து அஞ்சி நடுங்கி பத்துரூபாயை எடுத்து நீட்டினான் அந்தப் பிச்சைக்காரன், 'பிச்சை எடுக்கிறதை விட இது மகா கேவலம்' என்று மனதில் சொல்லியவாறே.






''ஹலோ ஹலோ! சபையில் யாரோ 'காது கேட்கும் கருவி' ஒன்றை விட்டுச் சென்றிருக்கிறார்கள்...இழந்தவர் வந்து பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்...இதோடு பத்து தடவைக்கு மேல் கூப்பிட்டாகிவிட்டது, ஒருவரும் வரமாட்டேன் என்கிறீர்களே...!''

## காகேடா ஹோட்டல்



காகேடா ஹோட்டல் பிரபலமானது. பிளாட்பாரத்தில் ஸடூல்களைப் போட்டு நடந்துகொண்டிருந்த அது நாளடைவில் வளர்ந்து மேஜை நாற்காலி போடப்பட்டு வசதியானதாக அமைந்தது. ஒருநாள் ஒருவர் சாப்பிட்டுவிட்டு கைகழுவ வாஷ்பேசினுக்கு சென்றவர் காறித்துப்பி நாகரிகமில்லாமல் நடந்துகொண்டார். சாப்பிட்டுக்கொண்டிருந்த மற்றவர்களுக்கு இது அருவருப்பாக இருந்தது. இதைப் பார்த்த முதலாளி அவரிடம் சென்று ''நல்ல ஹோட்டலில்இதற்குமுன்பு நீங்கள் சாப்பிட்டதே இல்லையா?'' என்று கடிந்துகொண்டார்.

''நானா தாஜ், ஓபராய் போன்ற எல்லா பெரிய ஹோட்டல்களிலும் சாப்பிட்டிருகிறேன்''.

''இப்படி அநாகரிகமாக வாய் கொப்புளிப்பதைப் பற்றிஅவர்கள் என்ன சொன்னார்கள்?''

''இது என்ன காகேடா ஹோட்டல் என்றா நினைத்துக்கொண்டாய் என்றுகூறி என்னை வெளியே அனுப்பிவிட்டார்கள்''.

ஒருநபர் மட்டும் பயணம் செய்யும் காரை உருவாக்கினால் என்ன என்று யோசித்த ஜப்பானியர்கள் அதனைக் கண்டுபிடித்து விட்டார்கள்....

படத்தில் டோக்கியோ பல்கலைக்கழக மாணவர் அதனை ஓட்டிச்செல்கிறார். சி-காம்ஸ் என்பது இந்தக் காரின் பெயர். மின்சாரத்தில் 30 வினாடிகள் சார்ஜ் செய்தால் 20நிமிடம் இந்தக் கார் செல்லுமாம். மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் இக்கார் செல்லும்.






## 'யார் இவர்' தெரிகிறதா? 42



### இந்த வாரம் பிரகாசமாகி இருக்கும் உருவம் யாருடையது?

அராஜகங்களை அடக்கும் 'அரசாங்கம்' இவர். இவரின் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் ஐவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
''யார் இவர் தெரியுமா?''
85,ஜெயந்த, மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

★ ''யார் இவர் தெரிகிறதா?'' இல.40இற்கான சரியான விடை: - நடிகை ப்ரியாமணி. சரியான விடைகளை அனுப்பியோரில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:

1.கஜன், வத்தளை
2.எஸ்.ராகினி, முல்லைத்தீவு.
3.ஏம்.எம்.அன்வர், காத்தான்குடி.
4.வர்ஜன், திருமலை.
5.சுபைர், கொழும்பு.





## தத்துவம்

என்னதான் மீனால் நீந்தத் தெரிந்தாலும் மீன்குழம்பில் அதனால் நீந்தமுடியுமா?

இன்று தூங்கினால் நாளை எழுந்திருக்கலாம். ஆனால், நாளை தூங்கினால் இன்று எழுந்திருக்க முடியுமா?

ரயில்வே ஸ்டேஷனில் பொலிஸ் ஸ்டேஷன் இருக்கலாம். ஆனால், பொலிஸ் ஸ்டேஷனில் ரயில்வே ஸ்டேஷன் இருக்கமுடியாது.

# சகோதர போட்டி மனப்பான்மைக்கு காரணம் பெற்றோர்களின் கவனமின்மையா ?



கேள்வி: எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள். மூத்த பையனுக்கு வயது 11, இளையவருக்கு வயது 9. இவர்களுக்கிடையே எந்த நேரமும் போட்டி, பொறாமை, சண்டை. இவர்களை விலக்குப் பிடிக்கவே எனக்கு வேண்டாம் என்றாகிவிடும். ஒவ்வொருவரும் நான் மற்றவரிடம் தான் கூட அன்பு வைத்திருப்பதாகச் சொல்லிக் காட்டுவார்கள். எனக்கு இருவரிடமும் ஒரே அளவான அன்புதான். இந்த இரு சகோதரரும் இப்படி போட்டி மனப்பான்மையு டன் வளர்வதை எண்ணி அவர்களின் எதிர்காலம் குறித்து பயமாக இருக் கின்றது. 'கவனம் எடுக்காதே விட்டு விடு, கால கெதியில் எல்லாம் சரியாகி விடும்' என்று எனது சிநேகிதிகள் சொல்கின்றார்கள். ஆனால், இவர்கள் வளர்ந்து ஒருவருக் கொருவர் எதிரியாகி விடுவார்களோ என்று பயமாக இருக்கின்றது. எனது பிரச்சினை தீர வழிசொல்லவும்.

பதில்: சகோதர போட்டி மனப்பான்மை என்பது மனித இனம் உருவாகியதி லிருந்தே இருப்பதாகத் தெரிகின்றது. இதனை ஆங்கிலத்தில் Sibling Rivalry என குறிப்பிடு வார்கள். உண்மையில் அநேகமான சிறுவர்கள் தமது சகோதரர்களுடன் அதிக சிநேகமாகவே இருக்கின்றார்கள். இவர்களிடையே போட்டி, பொறாமை, சண்டை ஏற்படுவது சகஜம். இதனை மனோவியலில் அன்பு, வெறுப்பு (Love, Hate) உறவு என்றும் குறிப்பிடுவதுண்டு. எப்பொழுது, எந்தவயதில் இந்த சகோதர வெறுப்பு ஆரம்பமாகின்றது என்று கண்டறிவது கஷ்டம். ஒருவரோடு ஒருவர் பேசாமலி ருப்பதிலிருந்து அடிதடி சண்டை வரை இந்த வெறுப்பு பரிணமிக் கக்கூடியது. இந்த சகோதர போட்டி இரண்டாவது சகோதரம் பிறக்கு முன்னரே ஆரம்பமாகி - இருவரினதும் வளர்ச்சியின்போது தொடர்ந்து செல்லும். இரு சகோதரர் களுக்கிடையேயும் விளையாட்டுச் சாமான்களிலிருந்து பெற்றோரின் கவனத்தை ஈர்க்கும் முயற்சிவரை இந்தப் போட்டி இருக்கலாம்.

அநேகமாக ஒரு சகோதரன் மற்றவரை விட புத்திசாலியாக இருந்தால் அதுவும் போட்டியை வளர்க்கும். இதில் பிரச்சினை என்னவென்றால் சகோதரர்கள் சண்டையிடுவதை, போட்டியிடுவதை பெற்றோர்களாகிய நாங்கள் காண்பதோ, கேட்பதோ அல்லது எந்தவேளையில் நாம் இதில் தலையிடுவது என்று தீர்மானிப்பதோ போன்ற நிகழ்வுகள் தான் எம்மை பாதிக்கின்றன. இன்றைய சூழ்நிலையில் குழந்தைகளுக்கு நாம் தண்டனை கொடுக்க சட்டத்தில் இடமில்லை. சிறுவர் துஷ்பிரயோகம் Child Abuse என்று நாம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவோம். எனவே, நாம் பதற்றப்படாமல் சினத்தை அடக்கிக் கொண்டு பண்பாக கதைத்து புரிந்து ணர்வை வளர்த்தால்தான் இந்த சகோதரப் போட்டி பெரும் பிரச்சினையாக உருவாகாமல் தடுக்கமுடியும்.

இருவரும் போட்டிபோட்டு, சண்டை பிடிக்கும்போது இருவரையும் தனியாக பிரித்து அவர்கள் அமைதி அடையும் வரை இருத்திவையுங்கள். எந்தக் குழந்தை மேல் தவறு என்று நியாயம் வழங்காதீர்கள். சண்டை பிடிப்பதே தவறு என்பதை இருவருக்கும் புரிய வையுங்கள். அந்தத் தவறை இருவரும் ஏற்றுக்கொண்டு, மன்னித்து மறந்து விட புத்திமதி கூறுங்கள். ஒருவர் பிழை, ஒருவர் சரி என்று மத்தியஸ்தம் செய்யப்போகாதீர்கள். இருவரும் ஒரு பொருளுக்காக போட்டிபோட்டால் அந்த விஷயத்தை விட்டு அகன்று இருவரும் சேர்ந்து விளையாடக்கூடிய செயல்முறைகளுக்கு அவர்களது கவனத்தைத் திருப்புங்கள். இன்னொருவரின் உரிமைக்கு, கருத்துக்கு மதிப்புக் கொடுப்பது, இன்னொருவரின் பார்வையில் தனது செயலை மதிப்பிடுவது, விட்டுக் கொடுப்பது, கலந்து முடிவெடுப்பது, ஆத்திரம் கொள்ளாது அடக்கிக் கொள்வது போன்ற பயிற்சிகளை பயிற்று வியுங்கள். குழந்தைகள் எல்லோரையும் பெற்றோர்கள் சமமாகத் தான் பார்க்கின்றார்கள். அதேவேளையில் சகல விடயங் களையும் சமனாகவும், நியாய மாகவும் பகிர்ந்துகொள்ள முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, சிலவேளைகளில் ஒரு குழந்தைக்கு மற்றக் குழந் தையை விட சில விடயங்கள் அதிகம் செய்ய வேண்டும்.

குழந்தைகளை திருத்த எண்ணம் கொண்டு செயல்படும்போது அன்பு, பாசம் என்பவை நிறைய இருக்க வேண் டும். அறிவுரைகள், அன்பு, ஆதரவு என்ற இந்த மூன்றின் அடிப்படையில் உங்கள் குழந்தைகளின் போட்டி மனப்பான்மையை குறைக்கவும்.

கேள்வி: வயது 68, ஆண். வலது காது கேட்கும் சக்தி குறைந்துள்ளது. எனது வீட்டில் மற்றவர்கள் தொலைக் காட்சி கேட்கும்போது எனக்கு அவர்கள் வைக்கும் ஒலி அளவில்- ஒன்றுமே கேட்காது. தொலை பேசியில் மற்றவர்கள் பேசுவது விளங்கு வதில்லை. இது வயதால் ஏற்படு கின்றது என்கிறார்கள். வயதுக் கும் கேட்கும் சக்திக்கும் என்ன தொடர்பு. என்னை விட வயதான வர்களுக்கு இன்னும் செவிப்புலன் நன்றாக இருக்கின்றதே- அது எப்படி?

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை, கொழும்பு-14.

பதில்: முதிர்வயது வரும் போது கேட்கும் புலன் குறைவது சாதாரண மானதே. எந்த வயதினருக்கு இது ஏற்படுகின்றது என்பதற்கு எதுவித வரைமுறையும் இல்லை விமான நிலையத்தில், விமான பராமரிப்பு தொழிற்சாலைகளில், பெரும் தொழிற்சாலைகளில் நீண்டகாலம் பணிபுரிபவர்களுக்கு - சாதாரண மனிதரைவிட நேரத்தோடு காது கேட்பது குறைந்து விடுகிறது. சில மருந்துகளை - முக்கியமாக Antibiotics எனப்படும் நோய் எதிர்ப்பு மருந்துகளை - நீண்ட காலம் உபயோகிப்பவர்களுக்கு காது கேட்பது குறைவதுண்டு. இப்படி மருந்துகளால் காது பாதிக்கப்படும் சிறு குழந்தைகளை எனது தொழில் முறையில் அதிகம் சந்தித்துள்ளேன். ஒரு காலத்தில் காச நோய் அல்லது சயரோகம் என்கின்ற TB நோய்க்கு Streptomycin ஊசி மருந்தை மாத கணக்கில் போடுவதுண்டு. இந்த ஸ்ரெப்ரோமைசின் மருந்தும் கேட்கும் சக்தியை குறைக்கும்.

அதே வேளையில் வயது ஆகும் போது காது நரம்புகள் - அதாவது, ஒலி அலைகளை காதிலிருந்து மூளைக்கு எடுத்துச் செல்லும் நரம்புகள் - இந்தத் தன்மையை மெல்ல மெல்ல இழக்கின்றன. இப்படி ஒலி எடுத்துச் செல்லும் இந்த கேட்கும் நரம்பு - Auditory Nerve என்கின்ற மூளை நரம்புகளின் எட்டாவது நரம்பு. இது பல நரம்பு களின் கற்றை. Bundle of Strands of Nerve என்று சொல்லலாம்.

ஒவ்வொரு சிறு நரம்பு கீற்றும் (Strand) ஒலியின் ஒவ்வொரு அலைவரிசை யையும் கடத்து கின்ற விதத்தில் அமைக் கப்பட் டுள்ளன. அதாவது சில நரம்பு கீற்றுகள் உயர்ந்த துடிப்புள்ள ஒலி அலைகளையும் (Higher Frequency) சில குறைந்த துடிப்பு ஒலி அலைவரிசைகளையும் கடத்துகின்றன. வயதாகும் போது உயர்ந்த துடிப்புள்ள ஒலி அலை களை கடத்தும் நரம்பு கீற்றுகள் பாதிக்கப்படுகின்றன. இதனால், பேச்சுக்கள் விளக்கமில்லாமல் கேட்கப்படுகின்றன. இதனை சமாளிக்க இவர்கள் - பேசுபவர்களின் உதடு அசைவுகளைப் பார்த்து புரிந்து கொள்ள முயல்வார்கள். ஆனால், தொலைபேசியில் பேசுபவர்களின் உதட்டசைவுகளை இவர்களால் பார்க்க முடியாது. எனவே, தொலைபேசி உரையாடல்கள் இவர்களுக்கு புரியாது. இவர்களுக்கு தாங்கள் பேசுவதையே கேட்க முடியாமலிருப்பதால் - இவர்கள் அளவளாவும்போது மற்றவர் களுக்கும் கேட்கவில்லை என்று எண்ணி - பெரிய சத்தத்துடன் பேசுவார்கள். கண்பார்வை குறைவுக்கு - கண்ணாடி எப்படி பெரிதுபடுத்திக் காட்டுகின்றதோ அதுபோல் இவர்களுக்கு ஒலியை மிகைப்படுத்துவதற்கு Hearing Aids- கருவிகளை உபயோகப் படுத்தலாம். கண்ணாடிகளை வாங்கும்போது பார்வை அளவுகளை பரீட்சித்து பொருத்தமானதை வாங்குவதைப் போல Hearing Aids வாங்கும் போதும் காது கேட்கும் சக்தியை பரிசோதித்து வாங்க வேண்டும். உங்களுக்கு இப்படி பரிசோதித்து வாங்கி உபயோகப்படுத்தும் Hearing Aids உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.



# அறிவியல்

ரி.கே.ஆர்

## காப்பியின் கதை...



காப்பிக்கொட்டையானது காப்பி மரத்திலிருந்து, எடுக்கப்படும் விதையாகும். உலக அளவில் இரண்டாவதாக மிக அதிகளவில் வர்த்தகம் செய்யப்படும் வணிகப் பொருளாக காப்பிக்கொட்டை உள் ளது. எதியோப்பியா நாட்டிலுள்ள கப்பா என்ற இடம்தான் காப்பியின் பூர்வீகம். எதியோப்பிய நாட்டை காப்பியின் தாய்கம் எனலாம். இதற்கு ஒரு கதையும் உண்டு. கப்பா பகுதியில் மேய்ந்துகொண்டிருந்த ஆடுகள் ஒருவித சிவப்பு நிற பழங்களை உண்டதும் உற்சாகம் அடைந்தன. அந்த உற்சாகத்தை கொடுத்த பழம்தான் காப்பி. 'கபேபேன்ஸ்' எனப்படும் காப்பிக்கடைகள் முதன்முதலில் புனித நகரமான மக்காவில்தான் ஆரம்பிக்கப்பட்டன. நாளடைவில் அரேபியா நாட்டின் சதுரங்கம் விளையாடும் இடங்களில், கேளிக்கை விடுதிகளில், ஆட்டம்பாட்டம் கொண்டாட்டம் என்று எப்போதுமே மகிழ்ச்சியில் களைகட்டிக் கொண்டிருக்கும் பிரபலமான இடங்களில் காப்பியின் சுவை வேகமாகப் பரவியதால் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு காப்பி விற்பனையாகும் கடைகள் புதுவளர்ச்சியும் தனித்தன்மையும் அடைந்தன.

காப்பியை மிக அதிகமாகத் தயாரிக்கும் நாடு பிரேசில். காப்பிக்கு மிக அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்ட நாடு அமெரிக்கா. காப்பியின் தலைசிறந்த ஆறு தயாரிப்பாளர்களில் இந்தியாவும் இடம்பெற்றுள்ளது.

## மிளகாய் சாப்பிடுவது நல்லதா?



நன்கு பழுத்த, காய்ந்த கார மிளகாயில் ஆரஞ்சுப்பழத்தில் உள்ளதைவிட மூன்றுமடங்கு அதிகமாக 'விட்டமின் சி' உள்ளது.

அளவுடன் தினசரி உணவில் சேரும் பச்சை மிளகாயும், அரைத்த கார மிளகாய்ப் பொடியும் உடலில் இருந்து நன்கு வியர்வை வெளியேற உதவுகின்றன. இயக்கத்தைத் தூண்டிவிடுகின்றன. வெப்பப் பிரதேச நாடுகளில் நோயாளிகளை உடனே வியர்க்கச் செய்யவேண்டுமென்றே காரமிளகாய் சேர்ந்த உணவைச் சாப்பிடச் சொல்வார்கள். இதனால், வியர்வை பெருகி காய்ச்சல் குறைந்து உடல்குளிர்ச்சி அடையும். மிளகாயின் தோலிலும், நரம்புகளிலும் விதைகளிலும் காப்ஸஸின் என்ற ஆக்கக்கூறுப்பொருள் இருக்கிறது. முழு அளவில் செறிவூட்டப்பட்ட இந்தப் பொருளில் இருந்தே மிளகாய் மூலம் எமக்கு வெப்பம் கிடைக்கிறது. காப்ஸஸின் நரம்பு வலிகளையும், நோய்களையும் இடுப்பிலும், உடம்பிலும் பயத்தம்பருப்பு அளவில் வரும் வேர்க்குரு போன்ற கழலைகளையும் உடனடியாகக் குணமாக்குகின்றது. மிளகாய் அதிகமானால் குடலுறுப்புகள் கெடவும் வாய்ப்புண்டு.

## அமெரிக்காவின் செயற்கைக் கோள்



அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட நவீன உளவுச் செய்கோள் ஒன்று 2011 ஆண்டு விண்ணுக்கு ஏவப்பட உள்ளது. பேசிக் (Basic) எனப் பெயரிடப்பட்ட இந்தச் செய்கோள் ஏற்கனவே அமெரிக்காவினால் விண்ணுக்கு ஏவப்பட்டிருக்கும் செய்கோள்களை விட மிகவும் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட அடுத்த தலைமுறை செய்கோள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டுப் படைகளின் வலிமை, படை நடவடிக்கைகள் எனப் பல உளவுத்தகவல்களை மிகவும் துல்லியமாக படம்பிடித்து சரியான ஆழ்கூறைக் கணிப்பிடக்கூடியளவுக்கு இச்செய்கோள் திறன்கொண்டது.

இதனைத் தயாரிக்க 4பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன. இதனைத் தயாரிப்பதற்கு அமெரிக்க பாதுகாப்புத்துறையின் தலைமையகமான பென்டகன் 2006ஆம் ஆண்டு மறுப்புத் தெரிவித்தபோதும் தற்போது இதற்கு அனுமதி அளித்துள்ளது. எனினும் இத்தகைய செலவுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாதுகாப்பு வல்லுநர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

## முழுவதும் வைரமாக மாறிவரும் நட்சத்திரம்



முழுவதும் வைரமாக மாறிவரும் ஒளிவீசும் நட்சத்திரத்தை வானமண்டலத்தில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அந்த நட்சத்திரம் விஞ்ஞானிகளுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ஹார்வர்ட்ஸ்மித்சோனியன் விண்வெளி அறிவியல் ஆய்வுமையத்தைச் சேர்ந்த விஞ்ஞானி திராவிஸ் மெட்கப் என்பவர் தலைமையில் ஒரு குழு இந்த நட்சத்திரம் பற்றி பல ஆண்டுகளாக ஆய்வுநடத்தி வருகிறது.

பூமியில் இருந்து 50ஒளி ஆண்டுகள் தூரத்தில் ஒரு நட்சத்திரக் கூட்டத்தில் இந்த நட்சத்திரம் மின்னுகின்றது. ஒருகாலத்தில் சூரியன் போல் அனல்கக்கி ஒளிவீசிய நட்சத்திரம் பிற்காலத்தில் முற்றிலும் எரிந்து அதில் இருந்த கார்பன் இறுகி முழுவதுமாக வைரமாக மாறிவிட்டதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நான்காயிரம் கி.மீ. சுற்றளவு கொண்டதாக இது விளங்குவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தென்ஆபிரிக்காவில் உள்ள சுரங்கத்தில் 546கரட் அளவில் ஒரு வைரம் வெட்டி எடுக்கப்பட்டது. உலகளவில் இதுதான் பெரிய வைரம். ஆனால், வானில் உள்ள நட்சத்திரம் பலகோடி கரட் அளவில் உள்ளதாக வானியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்பு இந்த நட்சத்திரத்துக்கு 'பிபிஎம்37093' என்று பெயர் வைக்கப் பட்டிருந்தது. இப்பொழுது இந்த வைர நட்சத்திரத்துக்கு லுசி என்று விஞ்ஞானிகள் பெயர் மாற்றம் செய்துள்ளனர். இந்த வைர நட்சத்திரத்துக்கு நன்கு ஒளிவீசியதால் 40ஆண்டுகளுக்குமுன்பே விஞ்ஞானிகளின் கவனத்தை அது ஈர்த்தது. அப்பொழுது நட்சத்திரத்தின் உள்பகுதி கிறிஸ்டலாக மாறி இருக்கும் எனக் கருதிய விஞ்ஞானிகள் அது முழுவதுமாக வைரமாக இருக்கிறது என்பதனை தற்பொழுது கண்டுபிடித்துள்ளனர். சூரியனும் இன்னும் 500கோடி ஆண்டுகளுக்குப் பிறகு முற்றிலும் எரிந்து வெள்ளை நட்சத்திரமாக மாறிவிடும். அதன்பின்னர் 200கோடி ஆண்டுகளுக்குப் பிறகு சூரியனும் ஒருவைர நட்சத்திரமாக மாறிவிடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## தகவல் டொட் கொம்

* மூட நம்பிக்கை இந்த உலகம் முழுவதும் உண்டு. இத்தாலி நாட்டவர்களும் அதற்கு விதிவலக்கு அல்ல. இத்தாலியர்கள் யாராவது ஒரு கன்னியாஸ்திரியுடன் நடக்க நேர்ந்தால் உடனடியாக இரும்பைத் தொடுகிறார்கள். அந்த நாட்டில், யுவர் நன், டச் அயர்ன்' (Your nun, Touch Iron) என்ற ஒரு வழக்கு மொழியே உள்ளது.

* ஸ்பெயின் நாட்டின் வடபகுதியில் அல்டமிரா என்ற இடத்திலுள்ள குகையின் விதானத்தில் 17 எருதுகளின் படங்கள் வரையப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் கரடிகள், குதிரைகள், ஓநாய்கள் ஆகிய வற்றின் படங்களும் உள்ளன. இவை முப்பதாயிரம் வருடங்களுக்கு முற்பட்டவை.

அதிகம் வளர்ச்சி பெறாத மனிதன் இவ்வளவு அற்புதமாக ஓவியம் தீட்டி இருப்பது அறிஞர்களை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

1940 இல் லஸ்காஸ் என்ற இடத்தில் மற்றொரு கண்டுபிடிப்பு. சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தபோது அங்கே ஒரு மரம் சாய்ந்து கிடப்பதையும் அதனுள் ஒரு பொந்து இருப்பதையும் பார்த்து, ஆர்வமிகுதியால் அதனுள் சென்று பார்த்தபோது உள்ளே 18அடி ஆழத்துக்கு ஒருகுகை இருந்தது. அங்கு அருமையான ஓவியங்கள் காணப்பட்டன. இந்த ஓவியங்கள் பத்தாயிரம் வருடங்களுக்கு முன்னர் தீட்டப்பட்டவையாகும்.

இந்த ஓவியங்களை தீட்டியவர்கள் பழங்கால இனத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் வேட்டையாடி தின்றுவாழ்ந்திருக்கின்றனர். மனிதனிடம் அறிவு வளர்ச்சி அதிகம் காணப்படாத அந்தக் காலத்திலேயே அவர்களால் இப்படிப் பட்ட அற்புதமான ஓவியங்களை எப்படித் தீட்ட முடிந்தது என்பதே இதில் ஆச்சரியம்.




**சுடர் சிந்தனை :- "தொடர்ச்சியான பயிற்சியே வெற்றிக்கு வழி"**

# தரம்-05 புலமைப்பரிசில்

## விசேட மாதிரி வினாத்தாள் - 03

மாணவர் பெயர் : ..............................................................
முகவரி : ..............................................................
பாடசாலை / கல்வி நிலையம் : ..............................................................
மாவட்டம் : ..............................................................
தொலைபேசி இலக்கம் : ..............................................................

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**பகுதி I**

01. பின்வரும் பாடலடியை வாசித்து அவற்றில் குறிக்கப்பட்டுள்ள விடயத்திற்கு பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

**இனிய "கப்பல்" "இதரை" - கறிக்கு**
**உகந்த "சாம்பல்" "மொந்தன்"**
**கனியக் கொஞ்சம் புளிக்கும் - அந்தக்**
**கதலி.......**

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள தாவரம் எந்தவகை என்பதைத் தெரிவுசெய்க.

1)  2)  3) 

02. பின்வரும் பாடலில் விவரிக்கப்பட்டுள்ள பிராணியைக் குறிக்கும் உருவின் கீழ்க் கோடிடுக.

**போன்றும் பொருளும் தேடாமலே - நீருள்**
**புகுந்து மிதந்தவை போகுதடா**
**ஆழி நதிகள் குளங்களினுள் - அவை**
**அமிழ்ந்து அழகுற நீந்துதடா**
**வாழத்துடிக்கும் மனிதருக்கே - தமை**
**வழங்கியே நல்லுணவு ஆகுதடா.**

1)  2)  3) 

03. அடைப்புக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானிக்கவும். ஒவ்வொரு உருக்களுக்கும் ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.


















உதாரணத்தை விளங்கி தொடர்பை அறிந்து சரியான விடையைத் தெரிவுசெய்க.
உதாரணம் :- A:H
1) B:E, C:F, D:G 2) B:G, C:F, D:E 3) B:G, C:E, D:F

பின்வரும் பாடலை வாசித்து 4ஆம், 5ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

**அன்பை வளர்க்க வேண்டும் - இனிய**
**அறிவைப் பெருக்க வேண்டும்.**

04. நாம் எதை வளர்க்க வேண்டும்?
1) அறிவு. 2) அன்பு. 3) கிளி.

05. நாம் எதைப் பெருக்கவேண்டும்?
1) அறிவு. 2) அன்பு. 3) கிளி.

06. பின்வரும் கருத்தை வெளிப்படுத்தும் பழமொழியைத் தெரிவு செய்க.
"எதையும் அளவுடனே செய்யவேண்டும்."
1) இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
2) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
3) விளையும் பயிரை முளையில் தெரியும்.

07. குறிப்பிட்ட பொருள் ஒன்றின் விலை PMRP . MS என குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த விலையை சரியாகக் காட்டுவது எது?
1) ரு. 5645.30 2) ரு. 5365.30 3) ரு. 5232.20

08. "W" ஐ அதிகமாகக் கொண்ட விடை எது?
1) WMWNWWWNVMWWVV
2) WWNVNWNVNMVVNMN
3) WNWNMWMVMWNNMM


09. பாம்பு → புத்தி → திக்கு → ............. இந்தச் சொற்களின் கோலத்தில் இறுதியில் வரவேண்டிய சொல் எது?
1) குடம். 2) கும்பம். 3) தினம்.



10. அருகிலுள்ள கடிகாரத்திலிருந்து நாம் பெறும் தகவல்,
1) ஒன்றுக்கு இருபது நிமிடம் உள்ளது.
2) பன்னிரண்டுக்கு இருபது நிமிடம் உள்ளது.
3) ஒன்று கழிந்து நாற்பது நிமிடம்.




11. 
தரப்பட்டுள்ள உருவுடன் தொடர்புபட்டது எது?
1) நீர்.
2) தீ.
3) காற்று.


12. அருகிலுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதிக்குச் சமனான உருவைத் தெரிவுசெய்க.



1)  2)  3) 

13. உருவை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.



1)  2)  3) 

14. அமீரிடம் 42 மாபிள்கள் உள்ளன. அவற்றுள் 2/6 பங்கு மாபிள்கள் சிவப்பு நிறமானவை. மீதி மாபிள்கள் மஞ்சள் நிறமானவையாகும். எனவே, மஞ்சள்நிற மாபிள்கள் எத்தனை?
1) 21 2) 14 3) 28

பின்வரும் கணிதச்செய்கையைக் கவனத்திற்கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

# + ✱ = 6 # - ✱ = 2

15. # இன் பெறுமானம் யாது?
1) 3 2) 4 3) 6

16. ✱ இன் பெறுமானம் யாது?
1) 2 2) 3 3) 4

பின்வரும் தகவல்களைக் கருத்திற்கொண்டு 18ஆம், 19ஆம், 20ஆம் வினாக்களுக்கு விடைதருக.

**மகனின் வயதைப்போல் மூன்றுமடங்கு தாயின் வயதாகும்.**
**மகனின் வயதைப்போல் நான்குமடங்கு தந்தையின் வயதாகும்.**
**மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 56 ஆகும்.**

17. மகனின் வயது யாது?
1) 6 2) 7 3) 10

18. தாயின் வயது யாது?
1) 18 2) 20 3) 21

19. தந்தையின் வயது யாது?
1) 28 2) 30 3) 32

20. 750ml போத்தல் ஒன்றுக்கு 15ml கொண்ட சிறிய குவளையால் நீர் நிரப்பப்பட்டது. எனின், எத்தனை தடவைகள் சிறிய குவளையால் நீர் ஊற்றப்பட்டது?
1) 48 2) 50 3) 60



# துள்ளித் திரிந்த காலம்

சிறுகதை

பாலா சங்குபிள்ளை

சுதாகர் சட்டென கண்விழித்தான்.

நன்றாக விடிந்து விட்டிருந்தது. அவன் மனைவி சாந்தி ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள். இரவு தூங்குவதற்கு வெகுநேரமாகி விட்டது. இன்று சனிக் கிழமை விடுமுறை தினம். எனவே சுதாகரின் இறுக்கமான பிடியிலிருந்து அவளால் விலகமுடியவில்லை. மனைவி என்பவள் வயலின் இல்லை. வாசித்த பின் சுவரில் நம் விருப்பப்படி தொங்கவிடமுடியாது. சுதாகர் மணம் முடித்து கிட்டத் தட்ட இருபது ஆண்டு கள் ஓடிவிட்டன. தேவைக்கதிகமான பணம், ஆடம்பரவாழ்கை, அன்பான மனைவி இவையெல்லாம் இருந்தும் அவர்களின் பெயரைச் சொல்ல ஒரு வாரிசில்லை. வாழ்க்கை என்பது மலர். காதல் அதனுடைய தேன் என்று யாரோ ஒரு அறிஞன் சொல்லியிருக் கிறான். அது சுதாகரை பொறுத்தவரை யில் உண்மைதான். திகட்ட முடியாதள வுக்கு அவனுக்கு இல்லறவாழ்வில் இன்பம் கிடைத்தது. ஆனால், அதற்கு ஆதாரமாக ஒரு வாரிசு கிடைக்கவில்லை. யார் மேல் குற்றம் இருக்கிறது என்பதை யறிய அவன் வைத்தியரை நாட விரும்ப வில்லை. அவன் மேல் குற்றம் இருந் தால் பரவாயில்லை. அதுவே மனைவி மேலிருந்தால்!

சுதாகர் கட்டிலை விட்டு எழுந்தான். சாந்தியின் நெற்றியில் அழுத்தமாக ஒரு முத்தத்தை பதித்துவிட்டு குளியலறைக் குச் சென்றான். சுமார் பத்துமணிக்கு மனைவியிடம் சொல்லிவிட்டு சுதாகர் வெளியே புறப்பட்டான். புத்தம் புதிய அந்தக் காரை அவனே ஓட்டினான். ஓட்டிக்கொண்டே செல்போனில் இலக் கங்களை தட்டினான்.

''ஹலோ யார் அண்ணாமலையா... நேற்றுச் சொன்னியே புதுஷா ஒண்ணு இருக்குன்னு இப்போ வந்தா பார்க்க லாமா... வயசு எவ்வளவு ...பதினைந்தா... பிரச்சினை ஏதும் வராதே...இரவுக்கு வேணாம்... இப்போ ஏற்பாடு செஞ்சிடு ... நீ சொல்ற இடத்துக்கு நான் வந்துடுறேன் ஒகேவா...''

ஆம். வீட்டிலே ராமன் வெளியிலே கிருஷ்ணன். இதுதான் சுதாகரின் உண் மையான நிலை. ஏராளமான சொத்து, அழகான மனைவி - வீட்டோடு மாப் பிள்ளை - வாழ்நாள் முழுவதும் பணத் துக்கு பஞ்சமில்லை. எனவே, மனைவி யிடம் உத்தமனாக இருந்தவன் வெளி யில் புத்தம் புது மலர்களை தேடி அனு பவிப்பதில் மன்மதனாக இருந்தான். நஞ்சுள்ள நல்ல பாம்பு புற்றுக்குள் பதுங்கிக் கிடக்கிறது. நஞ்சு இல்லாத தண்ணீர்ப் பாம்பு கரைக்கு வந்து அலைந்து திரிகின்றது.

சுதாகர் அனுபவிக்காத பெண்களே கிடையாது. ஆனால், அவர்களின் சம்மத மில்லாமல் அவர்களை தொடவே மாட் டான். சிறுவயதில் அவன் அனுபவித்த கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கண்டிப்பான குடிகார தந்தை. நிரந்தர நோயாளி தாய்- மூன்று தங்கைகள். மூத்தவனான அவன் தலையில் சுமை களை வைத்து விட்டு அவசர அவசர மாக அவன் தந்தை இறந்தபோது அவ னுக்கு வயது இருபத்தியொன்று. க.பொ.த. உயர்தரத்யில் திறமையான சித்திபெற்றிருந்த அவனால் பல்கலைக் கழகம் போக முடியவில்லை. கடைசி யில் அவன் எல்லா கடமைகளையும் முடித்து விட்டு மணம்முடிக்கநினைத்த போது வயது முப்பத்தைந்து. இந்த வய தில் ஒருத்தியை தேடி அவளை காத லித்து கைப்பிடிப்பதற்கெல்லாம் அவனுக்கு நேரமில்லை. அவனுக்கு தேவை பணம் இனிமேலும் அவனால் கஷ்டப்பட முடியாது. இறந்து போகிற வனின் செருப்புக்காக காத்திருந்தால் கடைசியில் வெறும்காலுடன் தான் நடக்க வேண்டியிருக்கும். எனவே வீட்டுக்கு மாப்பிள்ளையாக சாந்தியை கைபிடித்தான். மனமகிழ்ச்சிக் காக தின மும் வெளியே வெவ்வேறு இடங்களில் சாந்தி முகூர்த்தத்தை நடத்தினான். சில பெண்கள் பணத்துக்காக வந்தார்கள், இன்னும் சிலர் பொழுதுபோக்குக்காக அவனை நாடினார்கள். மொத்ததில் இவனால் அவர்கள் பயனடைந்தார்கள். இவன் சந்தோஷப்பட்டான். ஆனாலும் அவனுக்கு வெகுநாளாக ஒரேயோர் ஆசை. அது வயதில் மிக குறைந்த அதாவது 15, 16 வயது பெண்ணொருத் தியை அனுபவிக்கவேண்டும்.

கார் சட்டென அந்த இடத்தில் நின்றது. அது ஒதுக்குப்புறமானதொரு இடம். அங்கே ஒரு சில வீடுகளே இருந்தன. அங்கேயிருந்த ஒரு சிறிய பெட்டிக் கடையருகே அண்ணாமலை நின்றிருந்தான். சுதாகரின் காரை காணவும் ஓடிவந்தான்.

''காரை இந்த கடைக்கிட்ட நிறுத் திட்டு நாம நடந்தே போகலாம். அதோ அதுதான் வீடு. ஆளை அறி முகப்படுத்துகிறேன். என்னோட கமிஷனை வெட்டிடுங்க. எவ்வளவு நேரம் வேணுமென்றாலும் எடுத்துக் கங்க. ஆனால், கொஞ்சம் பணத்தை அதிகமாவே குடுத்துடுங்க...''

அண்ணாலை - வளவளவென பேசிக்கொண்டே சுதாகரை அந்த சிறிய வீட்டுக்கு அழைத்துச்சென் றான். கதவுமூடியிருந்தது. அவன் கதவை தட்டினான். ஒரு பெண்மணி வந்து கதவைத்திறந்தாள்.ஆனால், அவள் தலை மற்றும் முகத்தை சேலையினால் மூடியிருந்தாள். ''வாங்க அண்ணாமலை - இவர்தான் ஆளா..கேட்கிறபணத்தை தந்திடு வார் இல்லையா...''

சுதாகருக்கு அந்த பெண்ணின் குரலை எங்கேயோ கேட்டதைபோல இருந்தது. ஆனால், ஞாபகம் வரவில்லை. அண்ணாமலை சுதாகரிடம் கணிச மான தொகையை வாங்கிக்கொண்டு இடத்தைக் காலி செய்தான். சுதாகர் வீட்டினுள்ளே செல்ல அவள் கதவை மூடினாள்.

''உட்காருங்க வசந்தியை வரச் சொல்லுறன்.''

''வசந்தி உங்க மகளா....''

''ஆமா....''

''இதுதான் முதல் தடவையா....''

''நான்தான் தொழில் செஞ்சிக் கிட்டிருந்தேன். எனக்கு நோய் வந் திடுச்சி. வெளியே எக்கச்சக்கமான கடன். வயிற்றுப் பிழைப்புக்கு வழி தெரியவில்லை. மருந்துக்கு வேற நிறைய பணம் தேவை. என்னோட கஷ்டத்தை பார்த்துத்தான் வசந்தியா இந்த முடிவுக்கு வந்தா. எனக்கும் வேற வழி தெரியல்லை. படிப்பையும் பாதியில நிறுத்திட்டா...''

சுதாகர்- சற்றுநேரம் பேசாமல் இருந்தான் -அப்போது-

வசந்தி வந்தாள். அவனுக்கு வணக்கம் சொன்னாள். மிக அழகாக இருந்தாள். முகத்தில் இனம்புரியாத சோகம் இருந்தது. சுதாகரினால் அந்த முகத்தை அதிகம் பார்க்க முடிய வில்லை. ஏனோ அந்த கண்ணோட் டத்தில் அவளை அவனால் பார்க்க முடியவில்லை. அவனுக்கு ஒரு வாரிசு இருந்தால் இவளைப் போல இந்த வயதில் தானே இருப்பாள்.

''அங்கிள்.... அம்மாவுக்கு மருந்து வாங்கணும். என்ன செய்யணுமோ செஞ்சிட்டு பணம் தந்திங்கன்னா ரொம்ப உதவியா இருக்கும்...''

முதல்முறையாக சுதாகரின் இதயத் தில் யாரோ சம்மட்டியால் இறுக அடித் ததை போல இருந்தது. அவன் தலை குனிந்தான்.

''பணம் எவ்வளவு வேணும் என்று சொல்லு நான் தாறேன். இது எல்லாம் வேணாம்.

''இல்ல அங்கிள் இன்னைக்கி நீங்க இல்வசமா பணம் தருவீங்க.... அப்புறம் நாளைக்கு யார் தருவாங்க...''

அவன் மறுபடியும் தலைகுனிந்தான்.

'' உங்களுக்கு இது ஒரே மகள் தானா....''

''ஆமா.... என் கணவன் ஒரு குடி காரன்... அவன் பணத்துக்காக என்னை இந்த சாக்கடையில தள்ளிட்டான். நான் நல்ல குடும்பத்தை சே..ந்தவ தான். அந்த காலத்துல்ல அழகுல எல்லாரையும் கலங்கடிச்சேன் அது தான் இன்னைக்கி கரைதெரியாம தத்தளிச்சிகிட்டிருக்கேன்...''

''உங்களுக்கு ஆட்சேபணை இல் லாட்டி நீங்க யாரு....உங்க பேர் என்னன்னு சொல்ல முடியுமா....?

''இதுவரைக்கும் இங்கு வந்த வங்க காசைக் குடுத்து காரியத்தை முடிக்கிறதில்தான் கண்ணாயிருப் பாங்க. ஆனால் நீங்கமட்டும் தான் இதெல்லாம் கேட்குறீங்க.... எனக்கு என்னைப் பற்றி ரொம்ப நாளைக்கப் புறம் ஒருத்தர் கிட்ட செல்லுறது மனசுக்கு ஆறுதலா இருக்கு - என் பேரு தமயந்தி - அப்பா பேரு அருணா சலம்.அவர் பாடசாலை ஆசிரியரா இருந்தாரு, இப்ப இல்ல...''

சுதாகர் சட்டென அவளை கூர்ந்து பார்த்தான்.

'' என்னது தமயந்தியா ? அருணா சலம் மாஸ்டர் மகள் தமயந்தியா...? தமயந்தி என்னை உனக்கு ஞாபகம் இல்லையா? உன்னோட ஒரே பாடசாலை யில படிச்ச சுதாகர்... கிளி மூக்கு சுதா கர்...''

தமயந்தி - சட்டென திரும்பினாள் - அவள் முக்காடு சேலை நழுவி விழுந் தது. முகமெல்லாம் வெள்ளை வெள்ளை யாக தலைமுடி கொட்டி மிக அலக் கோலமாக இருந்தாள். அவள் கண்களி ருந்து கண்ணீர் பெருகியது.

''சு..சுதாகர் நீங்களா... நல்லா இருக் கீங்களா... நீங்களா இந்த பாவப்பட்ட இடத்துக்கு வந்தீங்க....''

''என்ன மன்னிச்சிடு தமயந்தி ... இன்பத்துக்காக வந்தேன். உன் துன்பகர மான வாழ்க்கையை கண்டேன். என் னால தாங்கமுடியலை உனக்கா இந்த கதி... நீ எப்படியெல்லாம் இருந்தே.. சிட்டுக்குருவி மாதிரி சிறகடிச்சி பறந் தியே.... இப்போ சிக்குப்பட்ட நூல் போல உன் வாழ்கை அமைஞ்சிடுச்சே ...வேணாம் உனக்கு இந்த கேவலமான வாழ்க்கை ...வசந்தி இங்கே வாம்மா...''

வசந்தி தயங்கியவாறு அவனிடம் வந்தாள். '' வசந்தி என்னோட என்வீட் டுக்கு வந்திடுறியா உன்னை நான் நல்லா படிக்கவைக்கின்றேன்.''

'' யாரடி உன் அம்மா.... உன்னைச்சாக் கடையில தள்ளப்பார்த்த நானா உன் அம்மா.. வேணாம்டி.. நான் இருக்கப் போறது இன்னும் கொஞ்சக்காலம் தான்... நீ அந்த அங்கிளோட போயிருடி... அவர் ரொம்ப நல்லவர். உன்னை நல்ல பார்த்துக்கொள்வாரு..''

'' முடியாது... நான் உன்னை விட்டு போக மாட்டேன். எனக்கு அம்மாதான் வேணும்...''

''வசந்தி பிடிவாதம் பிடிக்காதே... நான் உண்மையிலேயே உன் அம்மா இல்லடி....''

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)



# விஜய் படத்தில் நயன்தாரா

குருவியில் தவறிய வாய்ப்பு நயன்தாராவின் உள்ளங் கையிலேயே வந்தமர்ந்திருக்கிறது. பிரபுதேவா இயக்கத்தில் விஜய் நடிக்கும் புதிய படத்தில் நயன்தான் நாயகி. அடுத்தடுத்து இரண்டு படங்கள் சுமார் என்பதால் உஷாராகிவிட்டார் விஜய். இந்தியில் வெற்றிபெற்ற சோல்ஜர் படத்தின் ரீமேக் விஜய்க்கும் தமிழுக்கும் ஏற்றபடி தயாராகிறது. கஜகஸ்தானில் படப்பிடிப்பு நடத்துவதற்காக பிரபுதேவா லொக்கேஷன் பார்க்க கிளம்பிச் சென்றுள்ளார். தேவிஸ்ரீ பிரசாத், விஜய்க்கான ஸ்பெஷல் டியூன்களில் ஏற்கனவே பிஸி.

தசாவதாரத்திற்குப் பிறகு மாஸ்கோவின் காவிரி படத்தை இயக்கிவரும் ரவிவர்மன்தான் கமரா. தொழில்நுட்பக் கலைஞர்கள் தயார். பெயர்தான் முடிவாகவில்லை. சிங்கம் டைட்டிலுக்கு ஹரி சொந்தம் கொண்டாடுவதால் சிங்கம் மாதிரி உறுமலான வேறு பெயரைத் தேடிவருகிறார்கள்.







# சிம்பு படத்தில் ஸ்ரேயா

சும்மா நடந்துபோனாலே சிம்பு பற்றிய வதந்திகள் காலை இடறும் காலம் ஒன்று இருந்தது. அது மலையேறிவிட்டது. இப்போதெல்லாம் சிம்பு மௌனச் சாமியார் பேசுவதேயில்லை. அதற்காக அப்படியே விடமுடியுமா? சிலம்பாட்டத்தில் நடித்து வருகிறவர் சக்தி சிதம்பரம் இயக்கும் படத்துக்கு கால்ஷீட் கொடுத்துள்ளார். பக்கா ஆக்சன் கதையாம். ஜோடியாக நடிக்க சிம்புவின் சொய்ஸ் ஸ்ரேயா. சக்தி சிதம்பரம் ஸ்ரேயாவிடம் பேசி சம்மதம் வாங்கியிருக்கிறார். நயன்தாராவும், த்ரிஷாவும் ராக்கெட் வேகத்தில் முந்துவதால் சம்பளத்தை குறைத்து பில்டப்பையும் குறைத்துள்ளார் ஸ்ரேயா. அதன் எதிரொலிதான் சிம்பு படத்தில் கேட்டதும் நடிக்க ஒப்புக்கொண்டது என்கிறார்கள்.



# விஷால் மொட்டை பாஸ்

பாகவதர் டைப் முடி வைத்து பொலிஸாக நடித்ததெல்லாம் அந்தக்காலம். கேரக்டருக்குத் தேவையென்றால் மொட்டை போடவும் தயங் குவதில்லை இன்றுள்ள நடிகர்கள். கஜினி சூர்யா, சிவாஜி ரஜனியைத் தொடர்ந்து மொட்டை பாஸாகியிருக்கிறார் விஷால், இந்த டாலடிக்கும் கெட்டப் சத்யம் படத்துக்காக.

நான்கு கோடி பட்ஜெட்டில் தொடங்கிய இந்தப்படம் இன்று பன்னிரண்டு கோடியைத் தாண்டியிருக்கிறது என சத்யத்தின் பிரமாண்டம் பற்றி பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கிற நேரம், இன்னொரு பில்டப்பாக விஷாலின் மொட்டை கெட்டப். கிளைமாக்சில் பொலிஸ் கமிஷனராக வரும் விஷால் மொட்டைத் தலையுடன் தோன்றவேண்டும். தேவையைச் சொன்னதும் விக்சைஸ் பார்க்கச் சொல்லவில்லை விஷால், பார்பரை அழைத்து தலையை பளபளப்பாக்கியிருக்கிறார். சூரியன் முதல் சிவாஜி வரை நாயகன் மொட்டை போட்ட படங்கள் எல்லாம் ஹிட். மொட்டை செண்டிமெண்டை சத்யமும் காப்பாற்றட்டும்.

## பாண்டி திரைவிமர்சனம்

பாண்டி (லாரன்ஸ்) பள்ளிப்படிப்பை பாதியில் விட்டவர். தன்னைப் போலவே வேலை இல்லாமல் சுற்றிக்கொண்டிருக்கும் சிலரைச் சேர்த்துக்கொண்டு 'ஊர் வலம்' வருகிறார். அவரது அப்பா கட்டுப்பாடான பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர். பாண்டியை அவருக்கு கட்டோடு பிடிக்காது. அவரது பழக்கவழக்கம், நட்புக் கூட்டம் ஆகியவற்றைக் கண்டால் கடுகடுப்பாகிவிடுவார்.

ஆனால், அம்மா சிவகாமியோ (சரண்யா) மகன்மீது பாசத்தைக் கொட்டுபவர். அவர் செய்யும் தவறுகளையும் சில்மிஷங்களையும் மறப்போம், மன்னிப்போம் என்ற பாலிசியின்படி கண்டுகொள்ளாமல் விட்டுவிடுபவர்.

சூழ்நிலை காரணமாக பாண்டி துபாய் போக நேரிடுகிறது. அங்கு ஒரு வேலையில் சேர்ந்து குடும்பத்தைக் காக்கவேண்டிய நிர்ப்பந்தம். இந்தச் சமயத்தில் தான் பாண்டியின் பால் அவரது அப்பாவுக்கு அன்பு பிறக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பாண்டியின் தந்தையின் பரமவிரோதியான ராஜ்கபூர், பாண்டியின் தாயாரைக் கொன்றுவிடுகிறார். பாண்டி துபாயிலிருந்து திரும்புகிறார். தாயைக் கொன்றவரைப் பழிவாங்க கிளம்புகிறார். மிச்சசொச்சம்தான் படத்தின் கதை. சண்டைக் காட்சிகளில் அடிதடி, ஆட்டம்பாட்டம், சென்டிமென்ட் என அத்தனையையும் கலவையாக்கி படத்தை எடுத்திருக்கிறார்கள். நமீதா இரண்டு பாடல்களில் கவர்ச்சியாக கிளுகிளுக்க வைத்துவிட்டுப் போகிறார்.

சினேகா படம் முழுக்க கலக்கியிருக்கிறார். சில காட்சிகளில் படுகவர்ச்சியாகக் காட்சி தருகிறார்.

## நிறைவேறிய ஆசை

'பருத்திவீரனில்'தகரக்குரல் பிரியா மணியை சொந்தக்குரலில் அமீர் பேசவைத்தாலும் வைத்தார். பேசினால் சொந்தக்குரல்தான் என கொடிதூக்கஆரம்பித்துவிட்டனர், இடிபோன்ற குரல் இருக்கும் நடிகைகள்.

பாவனா அதில் ஒருவர். பார்க்க கொடி போலிருக்கும் இவரது குரலில் மென்மைக்குப் பதில் வன்மையே அதிகம் தொனிக்கும், ஜல தோஷத்தால்அடைத்ததுபோன்ற குரல் இவருடையது.இந்தக் குரலை வைத்து டப்பிங் பேசுவேன் என அடம்பிடித்து,அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்.

வினயுடன் பாவனா நடித்திருக்கும்'ஜெயம் கொண்டானில்' சொந்தக்குரலில் பேசியிருக்கிறார் பாவனா. இதில் மிளகாய் மண்டி வைத்திருப்பவரின் மகளாக நடித்துள்ளார் பாவனா.

## ...னாவுக்கு முகப்பரு

...கஷ் பட் தயாரிப்பில் விக்ரம் பட் இயக்கிய படம் ...ஸ்'. இதில் பிபாஷா பாசு நடித்திருந்தார். இதன் ...இரண்டாம் பாகமான 'ராஸ் 2'வை மொத் சூரி ...குகிறார். பிபாஷாவுக்குப் பதில் கங்கனா ரனவத் நடிக்கிறார். இதன் படப்பிடிப்பு ஏற்கனவே ...துவருகிறது. இடையில் கங்கனாவின் முகத்தில் ...ருக்கள் அதிகரித்துவிட்டன. இதை ஒருவரும் கவனிக்கவில்லை. வழக்கம்போல படப்படிப்புக்கு வந்தார் கங்கனா. கமரா ஓடத்தொடங்கியதும் நடிக்கஆரம்பித்தார். திரையில் இதைப் பார்த்த மொத் சூரி, காட்சியை நிறுத்தினார். கங்கனாவின் முகத்தில் இருந்த பருக்களை கவனித்த அவர், 'பருக்களுடன் நடிக்கவேண்டாம். பொலிவான முகம் எனக்குத் தேவை' என படப்பிடிப்பை நிறுத்திவிட்டார். இதனால், 'ராஸ் 2' படப்பிடிப்பு தடைப்பட்டது.



## கரணின் கதாநாயகி

...த்தவராயனுக்குப் பிறகு கரண் நடிக்கும் இரண்டு படங்கள் காளி, ...ந்தா. இரண் டிற்கும் சினேகாவை முயற்சிசெய்தும் கால்ஷீட் ...டைக்கவில்லை. அதிலும் காந்தா வில் சினேகாவை நடிக்கவைக்க ...த்தைகள் பல காட்டியும் சிக்கவில்லை சினேகா. சாதாரணமாக ஒரு ...டத்துக்கு பத்துலட்சம் வாங்குகிறார் சினேகா. காந்தாவில் பதினைந்து ...ருவதாகக் கூறியும் கால்ஷீட்பெயரவில்லை. இப்போது 'நெஞ்சிருக்கும் ...ரை' நாயகி தீபாவை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

...ரணின் உதவியாளர் பாடி சந்திரன் இயக்கும் இப்படத்தை ஜூலை ...தொடங்கத் திட்டமிட்டுள்ளனர். ஸ்கிரிப்ட் தயாராக இருப்பதால் ...டைவெளியே இல்லாமல் படப்பிடிப்பு நடைபெற உள்ளதாம். ஏபி ...லிம் கார்டன் படத்தை தயாரிக்கிறது.



## சௌந்தர்யாவின் மும்மொழிப்படம்

சுல்தான் தி வாரியார் படத்தை இயக்கிக்கொண்டே புல்லட் ரயில் வேகத்தில் பாய்கிறார் சௌந்தர்யா.

நடிப்பில் உச்சம் தொட்டாலும் பிஸ்னஸில் ரஜனி சோபித்ததில்லை. அவர் எடுத்த சொந்தப் படங்கள் சொதப்பலை மட்டுமே சந்தித்தன. வியாபார விஷயத்தில் தந்தையை தாண்டிவிட்டார் சௌந்தர்யா.

இவரது ஆக்கர் ஸ்ரூடியோவும் வார்னர் பிரதர்ஸும் இணைந்து தெலுங்குப் படமொன்றைத் தயாரிக்கின்றன. மகேஷ்பாபு நடிக்க பூரிஜெகன்நாத் அதனை இயக்குவது தெரியும். தெரியாதது, சௌந்தர்யாவின் மும்மொழிப்படம்.

இந்தப்படத்தை ஒரே நேரத்தில் தெலுங்கு, தமிழ், இந்தி என மூன்று மொழிகளில் தயாரிக்கிறார். மன்றிலும் நடிப்பது மகேஷ்பாபு. இயக்கமும் பூரிஜெகன்நாத்தான். மகேஷ் பாபுவின் படமொன்று தமிழ், தெலுங்கில் தயாராக இருப்பது இதுவே முதன்முறை.

துள்ளித்திரிந்த காலம்....
(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுதாகர் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான். ''தமயந்தி... நீ..நீ... என்ன சொல்லுற....''

''ஆமாம்.. சுதாகர். என்னோட அழ குக்காக அப்பாவேட ஏழ்மையை பயன் படுத்தி தூரத்து சொந்தமான சின்ன துரை என்னை கல்யாணம் செஞ்சிட் டான். குடிகாரனான இவன் ஒரு தனி யார் நிறுவனத்துல வேலை செஞ்சி கிட்டு இருந்தான். அந்த நிறுவனத் தோட சொந்தக்காரருக்கு ஒரே ஒரு மகள் இருந்தா. இவனுக்கு அந்த பெண்மேல ஏற்கனவே ஒரு கண்ணு இருந்திச்சி. எப்படியாவது அந்த பெண்ணை தன் வலையில வீழ்த்த என்னவெல்லாமோ முயற்சிசெஞ்சான். எதுவுமே சரிவரல்ல். ஒரு நாள் முத லாளி வெளியூர்போன சமயம். சரி யான மழைபெய்துகொண்டிருந்திச்சி. இவன் எப்படியோ என்னமோ சொல்லி பங்களாவுள்ளுக்கு போயிட்டான். இவ னோட கையாள் ஒருத்தன் பங்களா சமையல்காரரோட உதவியாளராக இருந்திருக்கான். அவனை பிடிச்சி அந்தப்பொண்ணு வழமையாக குடிக் கிற பால்ல போதைமருந்தை கலக்க வைச்சிட்டான். அந்த பொண்ணு மயக்கமாயிருக்கிற சமயத்துல இவன் அந்தப் பொண்ணோட உல்லாசமாயி ருந்துட்டு ஒண்ணுமே தெரியாதவன் மாதிரி வந்துட்டான். பாவம் அந்த பெண்ணுக்கு இதெல்லாம் தெரியாது. மூணாவது மாசம் வயித்துல குழந்தை உருவான போதுதான் தாய் கிட்ட சொல்லியிருக்கு. ஏற்கனவே பலஹீன மான உடம்போட இருக்கிற அந்த பெண்ணோட கருவை கலைச்சா உயிருக்கே ஆபத்தா முடிஞ்சிடும்னு டாக்டர்மார் எச்சரிக்கை பண்ணினதால வேறொரு ஊருக்குமே யாருக்குமே தெரியாம பொண்ணைக் கொண்டு போயிட்டாங்க. ஆனா இந்த மனுஷ மிருகம் அதை எப்படியோ மோப்பம் பிடிச்சிடுச்சி அந்த பொண்ணு, பெண் குழந்தையொன்றை பெத்துடுச்சி. இவன் அநாதை விடுதிக்கு குடுத்த அந்தக் குழந்தையை இங்கே கொண்டுவந்துட்டான்.

இந்த குழந்தையை வச்சி அவங்க கிட்ட கணிசமான அளவு பணம் பறிக் கிறதுதான். இவன் திட்டம் ஆனால், நான் கேட்டப்போ நமக்குதான்குழந்தை இல்லையே அதனால அநாதையில்லத் துல இருந்து இதைக் கொண்டுவந்ததா பொய் சொல்லிட்டான். நான் இதை நம்பல்லை ஒரு நாள் அதிகமான குடி வெறியில எல்லாத்தையும் உளறிட்டான் என்னோட வாழ்கையை வீணாக்கியது மில்லாம இன்னொரு பெண்ணோட வாழ்க்கையையும் கெடுத்துட்டான்னு நான் ஆத்திரப்பட்டேன் என்னை கொஞ் சம் கொஞ்சமாக நாசம் பண்ணின என் கணவன் பணத்துக்காக என்னை பல பேரோட கட்டிலை பகிர்ந்துக்க வச்சான். அதைக்கூட பொறுத்துக்கிட்டேன் ஆனா இன்னொரு பொண்ணுக்கு செஞ்ச அக்கிரமத்தை என்னால பொறுத்துக்க முடியலை அதனால...''

''அதனால...''

''அவன் குடிக்கிற சாராயத்துல கொஞ்ச கொஞ்சமா ஆளை செயலிழக்கச் செய் கிற விஷயத்தை சேர்த்தேன். இப்போ அரசாங்க ஆஸ்பத்திரியில என் புருஷன் சின்னதுரை நிரந்தர நோயாளியா நட மாட முடியாதநிலையில கிடக்கிறான். இவ என் மகள் இல்லை. ஆனால் என் மகளைவிட பாசமா வளர்த்தேன். இவ ளோட எதிர்காலம் வீணாகக்கூடாது. ஆண்டவனா பார்த்துதான் உங்களை இங்கே அனுப்பி வச்சிருக்காரு....''

''தமயந்தி நான் கேட்கிறேன்னு தப்பா நினைச்சிக்காத... வசந்தியோட உண்மையான தாய்...''

'' இவ வசந்திக்கு இந்த விஷயம் தெரியக்கூடாதுனு தெரிஞ்சா வருத்தப் படுவான்னு என் புருஷனோடடயரிடை' யும் அதுல இருந்த அந்தபெண்ணோட புகைப்படத்தையும் அண்ணாமலைக் கிட்ட குடுத்துவைச்சேன் நாளைக்கி வந்தா என்னால அதை வாங்கித் தரமுடி யும்'' கால் சட்டைப்பையிலிருந்து கணிசமான பணத்தை எடுத்தான்.

''இந்தா தமயந்தி இதை வச்சிக்க. நான் என் மனைவியோட கலந்துபேசி நாளைக்கு வந்து வசந்தியை கூட்டிட் டுப் போறேன். உன்னையும் நல்ல வைத்தியசாலையில் காட்டி சிகிச்சை தரப்போறேன்...''

''இல்ல சுதாகர்... என்னைப் பத்தி கவலைப்படாதீங்கள் நான் பட்டமரம்... இவ பச்சைக் கொடி இவளுக்குத் தான் நல்ல கொழுகொழும்பு தேவைப்படுது...''

''அதெல்லாம் ஒண்ணும்பேசாதே... என்னோட முடிவுல எந்த மாற்றமும் இல்லை வசந்தி... அப்போ நான் வரட் டுமா...?

''உங்களை நான் அப்பான்னு கூப்பிடலாமா...?

சுதாகர் கண்கள் கலங்க அவள் கைகளை பற்றிக் கொண்டான்.

''நிச்சயமா... நீ என்னை அப்பா' ன்னு கூப்பிடுறப்போ என் உடம்புல ஏதோ ஓர்வகை சந்தோஷம் ஏற்படுது. இதுதான் விட்டகுறை தொட்டகுறையோ ... தெரியவில்லை. வாழ்க்கைன்னா என்னன்னு இப்போதான் எனக்கு விளங் குது குழந்தை பெற்றெடுத்தவன் தான் முழுமனிதன் என்பது எவ்வளவு பெரியஉண்மை...''

சுதாகர்... காரில் ஏறினான். கார் மெது வாக ஓடியது. சுதாகர் ஒன்பதாவது படித்தபோது அவனுடன் ரமணி, சங்கர், குமார் என மூன்று பேர் அவனு டன் ஒன்றாகச் சேர்ந்து படிக்கும் நண் பர்களாக இருந்தார்கள். அதில் ரமணி என்பவன் முரடன். அவனின் முரட்டுத் தனத்திற்காகவே அவனை சுதாகர் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். எம்.ஜி.ஆர். திரைப்படங்கள் திரையரங் கில் புதிதாக வரும்போது பாட சாலைக்கு மட்டம் போட்டு விட்டு முதல்நாள் முதல் காட்சி பார்க்க அவன் தான் எல்லோருக்கும் சேர்ந்து டிக் கெட் எடுப்பான். அடுத்தநாள் அவர் கள் நால்வரும் சேர்ந்தே ஆசிரியரிடம் அடியும் வாங்குவார்கள். சங்கர்தான் ஒலிபெருக்கி. அபிநயங்களுடன் அடுத்தநாள் பார்த்த திரைப்படத்தின் கதை வசனத்தை மிக அழகாக மற்ற மாணவர்களுக்குசொல்லிக்காட்டுவான்.

மழைக்காலம் வந்துவிட்டால் அவர் களுக்கு கொண்டாட்டம் தான். பாட சாலைக்குள் தண்ணீர்வந்து விடுவ தால் பத்துமணிக்கெல்லாம் விடுமுறை கொடுத்துவிடுவார்கள். அவர்கள் நால் வரும் மழையில் ஆடிப்பாடி நடந்த வாறு பாடசாலை பக்கத்திலிருக்கு வீட்டுமரத்தின் மேல் ஏறி கொய்யாப் பழம் பறிப்பார்கள். சிலநேரங்களில் வீட்டுக்குப் போவதாக போக்குக்காட்டி விட்டு பத்தாவது முறையாக பத்து மணி படக்காட்சிக்கு போய்விடுவார்கள்.

அவர்களுக்கு அருணாசலம் ஆசிரியர் இலக்கியம் படித்துக் கொடுத்தார். அவரிடம் இலக்கியப் பாடம் படித்தால் மிக சந்தோஷமாக இருக்கும். கம்பராமாயணத்தில் ஒவ்வொரு காட்சி யையும் மிக அருமையாக கண்முன்னே கொண்டு வருவார். அவரின் மகள் தான் தமயந்தி. அவள் வேறோரு பெண்கள் பாட சாலையில் கல்விகற்றுவந்தாள். இலக்கியம் பாடத்தில் கொஞ்சம் தகராறு இருக்கவே அருணாசலம் ஏனையோடு சேர்ந்து அவனையும் மாலை வகுப்புக்கு வீட்டுக்கு வரச்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டு கோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியு டன், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.
கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல. 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.




கடிதத்தைப் பிரித்துப் படித்த டேவிட் மிக மகிழ்ந்தான்.

மகிழ்ச்சியை உடனே மனைவி யிடம் பகிர்ந்துகொள்ளவும் விரும்பினான்.

பாக்கெட் தொலைத் தொடர்புச் சாதனத்தை எடுத்துச் சில பொத்தான்களை அழுத்த- சின்னத் திரையில் தேதி மினுக்கியது.

03.01.2094

பிறகு அவனுடைய குடியிருப்புப் பகுதி தெரிந்தது.

அதற்குப்பின் 1, 2, 3,......47 ஆவது மாடி.

வீடு எண் 383.

வீட்டின் வாசலில் பூட்டு.

''மன்னியுங்கள். உங்களுடைய வீடு பூட்டப்பட்டிருக்கிறது. சற்றுக் கழித்து நானே அழைக்கிறேனே! காலம் தண்ணீர் போன்றது. அதுவரை உங்கள் வேலையைக் கவனியுங்கள்.''

வேலை?

அதைத்தான் இந்தக் குட்டிக் கம்ப்யூட்டர் பிசாசுகள் செய்து விடுகின்றனவே.

வார இதழைப் பிரித்தான்.

மெக்ஸிகோ சலவைக்காரி ஜோக்கை, திருச்சி எட்டிலிருந்து ஒன்பதாம் தமிழழகன் கேட்க -

அதற்கு இன்னும் சி.நா.கா. என அரசு பதில் தந்திருந்தார்.

இருக்கையை விட்டு எழுந்து



ஜன்னல் வழியே கீழே நோக்கினான். நெட்டிலிங்க மரங்கள் குடைக்காளான்கள் சைஸில் தெரிந்தன.

பீப்... பீப்... பீப்...

தொலைத் தொடர்புச் சாதனம் சிணுங்கி உயிர்த்தது.

திரையில் ஞானம். அவன் மனைவி தெரிந்தாள்.

மேனியில் வெண்ணெய் வளப்பம்.

''தொடர்புகொண்டீர்களாமே! எது விஷயமாக?''

''நல்ல செய்திதான். அது சரி. நீ எங்கே போயிருந்தாய்?''

''மறந்துவிட்டீர்களா? இன்று ரேஷன் கிழமை.

''மை குட்னஸ். நீ ரேஷன் கடைக்கு போயிருந்தாய் அல்லவா? எவ்வளவு கிடைத்தது?'' வழக்கமான ஐந்து லீட்டர்தான். உங்களுடைய அப்பா, அம்மாவின் பெயர்களைச் சேர்த்திருந்தால் இன்னும் இரண்டு லீட்டர் தண்ணீர் அதிகமாகக் கிடைத்திருக்கும்.''

''இறந்துபோனவர்களுடைய பெயர்களை ரேஷன் அட்டையில் சேர்ப்பது பாவமில்லையா?''

''பாவ, புண்ணியத்தைப் பார்த்தால் மாதத்துக்கு இரண்டு தடவைதான் குளிக்க முடியும். என் வாயைக் கிளறாமல் நீ சொல்ல வந்ததைச் சொல். ''

''அண்ணாசாலைக்குச் செல்ல நமக்கு அனுமதி கிடைத்திருக்கிறது!''

''வா....வ்! நம்முடைய நீண்ட நாளைய கனவு என்றைக்கு?''

''14.01.2094 அன்று''

''அன்று தமிழர் திருநாள் அல்லவா?''

''ஆம். அதனால்தான் கொஞ்சம் அதிகமானவர்களுக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. பை... மாலை பேசுவோம்.''

ஸ்பரிசம் பட்டதும் கதவு திறந்துகொண்டது.

ஓடி வந்த ஞானம் அவனை கட்டிக்கொண்டாள்.

காலையில் அவன் சொன்ன சந்தோஷச் செய்திக்காக ஒரு முத்தம் தந்தாள்.

''டேவிட்! நான் நிரம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீ ஏன் இப்படி வாடிப்போயிருக்கிறாய்?''

''மாடிகளில் இறங்கி வந்தேன். குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தாயேன்.''

''விளையாடுகிறாயா? அடுத்த வாரம் நம்முடைய அத்தியாவசியத் தேவைகளுக்கே தண்ணீர் போதுமா என நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். பால் கொணர்கிறேன். நல்ல பிள்ளையாகச் சாப்பிடு.''

''சற்று நேரம் கழித்துக் குடிக்கி றேன். இதற்குமுன் நீ அண்ணாசாலைக் குப் போயிருக்கிறாயா?''

''சின்ன வயதில், அப்பாவின் கையைப் பற்றிக்கொண்டு அங்கே சென்றது புகை மூட்டம் போலத் தெரி கிறது. தெளிவாக நினைவில்லை. நீ''

''கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபொழுது ஹொஸ்டல் சுவரேறிக் குதித்து நண்பர்களுடன் திருட்டுத்தனமாக ஒரு முறை போனதோடு சரி''

''பதினான்காம் தேதி காலையில் புறப்பட்டால் போதுமல்லவா?''

''எதற்கும் முதல் நாள் இரவே புறப்பட்டுவிடலாம்''

''போகலாமா?'' என்றாள் ஞானம்.

கீழே வந்தார்கள்.

கார் நகர்ந்தது.

தாம்பரம் நுழைவாயிலில் கான்ஸ்டபிள் காரை நிறுத்தினார்.

''நீங்கள் எங்கே போகிறீர்கள்?''

''அண்ணாசாலைக்கு!''

''மவுண்ட் ரோட்டுக்குச் செல்ல தங்களிடம் அனுமதிச்சீட்டு உள்ளதா!''

சீட்டைக் காட்டினான்.

''எனக்கு ஒரு சந்தேகம். மவுண்ட்ரோட, அண்ணாசாலை இரண்டுமே ஒன்றுதான்!''

''மவுண்ட் ரோட் என்ற பெயரை அண்ணாசாலை என மாற்றி சுமார் 120 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எனினும், மிகப் பெரும்பாலானோர் மவுண்ட் ரோட் என்றே சொல்கின்றனர்.''

''சரி டேவிட்! இப்படி ஊர்ந்தபடி போனால் நாம் எப்பொழுது அங்கே போய்ச்சேருவது? ம்... இதற்குத்தான் ஒரு ஹெலிகார் வாங்கு என்று சொல்கிறேன். நீ கேட்பதாகத் தெரியவில்லை.''

சிரித்தான் டேவிட்.

''எதற்கு ஏன் இந்தச் சிரிப்பு?''

(27 ஆம் பக்கம் பார்க்க)

21. விழா ஒன்றிற்காக மின்குமிழ் அலங்காரம் செய்யப்பட்டது. சிவப்பு, பச்சை, நீலம் என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டது. எனின், 25 ஆவதாக ஒளிரும் மின்குமிழின் நிறம் யாது?
1) சிவப்பு. 2) பச்சை. 3) நீலம்.

22. பாரதி கல்விநிலையத்தில் கற்கும் எல்லா மாணவர்களும் புத்திசாலிகள். பாலன் என்ற மாணவன் பாரதி கல்விநிலையத்தில் கல்விகற்கிறான். இக்கூற்றிலிருந்து நாம் அறிவது,
1) பாலன் புத்திசாலி என கூறமுடியாது.
2) பாலன்பற்றி எதுவும் கூறமுடியாது.
3) பாலன் புத்திசாலி.

23. பிள்ளைகள் வானொலியில் ஒலிபரப்பான பாடலைப் பார்த்து ரசித்தனர். இக்கூற்று தவறானது. ஏனெனில்,
1) வானொலியில் பாடல் ஒளிபரப்பப்படுவதில்லை.
2) பிள்ளைகள் பாடலை ரசிப்பதில்லை.
3) வானொலியில் பாடல் ரசிக்கப்படுவது கேட்பதன் மூலமேயாகும்.

24. அப்பா தனது சட்டைப் பையினுள் மூன்று வகையான பத்து நாணயங்கள் இருப்பதாகவும் அவற்றின் மொத்தப் பெறுமதி 32 ரூபா எனவும் கூறினார். அந்நாணயங்கள் எவை?
1) 5 ரூபா நாணயங்கள் 5, 2 ரூபா நாணயங்கள் 2, 1 ரூபா நாணயங்கள் 4.
2) 5 ரூபா நாணயங்கள் 5, 2 ரூபா நாணயம் 1, 1 ரூபா நாணயங்கள் 5.
3) 5 ரூபா நாணயங்கள் 6, 2 ரூபா நாணம் 1, 1 ரூபா நாணயங்கள் 2.

25. ஒரு விறகுவெட்டிக்கு 100kg விறகை வெட்ட 5 நாட்கள் தோவைப் பட்டது. அவ்விறகை ஐந்து விறகுவெட்டிகள் வெட்டுவதாயின் எத்தனை நாட்கள் தேவைப்படும்?
1) 01 2) 02 3) 03

கீழே தரப்பட்டுள்ள கணிதச்செய்கையை விளங்கி26ஆம், 27ஆம், 28ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | | |
|---|---|---|---|
| 6 | 2 | 7 | = 15 |
| 4 | y | z | = 15 |
| 5 | x | 2 | = 15 |
| = | = | = | |
| 15 | 15 | 15 | |

26. X இன் பெறுமானம் யாது?
1) 6 2) 5 3) 8

27. Z இன் பெறுமானம் யாது?
1) 6 2) 7 3) 8

28. Y இன் பெறுமானம் யாது?
1) 7 2) 4 3) 5

ஆகாயவிமானம் என்ற சொல் பின்வரும் குறியீடுகளினால் குறிக்கப்பட்டுள்ளது.

▲ ● ■ ⬢ ⬟ ★ ◆


29. "ஆகாயம்" என்ற சொல்லின் குறியீடுகள்,
1) ▲●■★ 2) ▲●■◆ 3) ▲●◆■

30. "கானம்" என்ற சொல்லின் குறியீடுகள்,
1) ●★◆ 2) ●◆★ 3) ★◆●

31. ⬟★◆ என்ற குறியீடு குறிக்கும் சொல் யாது?
1) காயம். 2) கானம். 3) மானம்.


32. ⬟■◆ என்ற குறியீடு குறிக்கும் சொல் யாது?
1) காயம். 2) மாயம். 3) மானம்.

ஒரே சதுரமுகியில் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன. (ஒவ்வொரு பக்கத்திலும் 1-6 வரை இலக்கம் இடப்பட்டுள்ளன.)




33. இலக்கம் 1 இற்கு எதிரேயுள்ள இலக்கம் யாது? ( ............... )


34. இலக்கம் 5 இற்கு எதிரேயுள்ள இலக்கம் யாது? ( ............... )

35.

இவ்வுருவிலுள்ள சதுரங்கள் எத்தனை?
( ............... )

36. மைதானம் ஒன்றின் நீளத்தை அளத்தல் சில்லினால் அளந்தபோது 81 தடவை மணி ஒலித்தது. எனின், மைதானத்தின் நீளம் எத்தனை சென்ரி மீற்றர் ஆகும்? ( ............... )

37. பண்ணை ஒன்றிலுள்ள ஆடுகளினதும், கோழிகளினதும் கால்களின் எண்ணிக்கை 160 ஆகும். ஆடுகளின் கால்களின் எண்ணிக்கை 80 எனின், கோழிகளின் எண்ணிக்கை யாது? ( ............... )

பாலன் வீட்டிலிருந்து பாடசாலையை நோக்கிச்செல்லும் பாதை உருவில் பாட்டப்பட்டுள்ளது. உருவை நன்கு அவதானித்து 38ஆம், 39ஆம் வினாக்களுக்கு விடை தருக.



38. பாலன் பாடசாலையிலிருந்து வீடுநோக்கிச்செல்லும்போது இடப் பக்கமாக எத்தனை தடவைகள் திரும்பினான்? ( ............... )

39. பாலன் அதிக தடவைகள் திரும்பிய பக்கம் எது? ( ............... )

40. உச்சிகள் எதனையும் கொண்டிராத உரு ஒன்று தருக.
( ............... )

## தரம்-05 மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக வெளியிடப்படும்

# விசேட மாதிரிவினாத்தாள் - 03


ஆசிரியர்:- து.திலீப்குமார்
( விவேகானந்தாக்கல்லூரி, கொழும்பு. )


### விசேட மாதிரிவினாத்தாள் 01 இன் விடைக்குறிப்புகள்.

**பகுதி - I**

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 2 | 02) 1 | 03) 3 | 04) 2 | 05) 3 |
| 06) 2 | 07) 3 | 08) 4 | 09) சரி | 10) சரி |
| 11) பிழை. | 12) பிழை. | 13) சரி. | 14) சரி. | 15) சரி. |
| 16) சரி. | 17) பிழை. | 18) சரி. | 19) 8 | 20) B |
| 21) 3 | 22) C | 23) 3 | 24) B | 25) A |
| 26) 2 | 27) 3 | 28) 1 | | |

29) சரியான விடை கொடுக்கப்படவில்லை. 30) 2 31) 1
32) 3 33) 3 34) 2 36) 3 ரூபா. 37) 48
38) 110 39, 40 ஆம் வினாக்களுக்கு பொருத்தமான கருத்துடைய வாக்கியங்கள்.

**பகுதி - II**

01. 1-4 பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.
02. 1) 1. தாய்தந்தை. 2. தருமம்.
3. கருமம். 4. தொண்டு.
2) 1. அதர்மம். 2. மறக்க.
3. முடியும். 4. அழித்தல்.
3) 1. செய்யும் சேவை. 2. மனமிரங்குதல்.
3. செயலைச்செய்ய ஆரம்பிக்கும்போது.
4) 1. தாய்தந்தை. 2. கன்று/பசு.
3. நீங்கள். 4. நாங்கள்.
03. 1) குருவிக்குஞ்சு. 2) ஆற்றுநீர்.
3) மட்குடம். 4) நூலேணி.
04. 1) முயல் + குட்டி. 2) கூடு + புறா.
3) பொன் + காப்பு. 4) வெறுமை + இலை.
05. 1) சிவப்பு, மஞ்சள், நீலம். 2) 11
3) சிலந்தி, மண்புழு. 4) குரக்கன், எள்.
5) குளோரின்.
06. 1) 0.9 2) 1.1
3) 18
07. 1) 1l600ml 2) 4 மணித்தியாலங்கள்.
3) 52 4) 44
08. C, D, A, E, B, F
09. C, E, F, D, A, B
10-15 பொருத்தமான கருத்துடைய திருத்தமான வாக்கியங்கள்.

தொகுப்பு:- ஆசிரியர் பி.அம்பிகைபாகன்.

விசேட மாதிரிவினாத்தாள்-02 இன் விடைகள் அடுத்தவாரம் வெளிவரும்.



# உங்கள் மார்பகங்களைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டிய ௨௦ விஷயங்கள்

✱ இளம்வயதில் பிரா தேர்ந்தெடுக்கும்போது 'கிச்' சென்று இறுகப் பிடிக்கும் அளவு உள்ள பிராவை தேர்ந்து எடுக்கக் கூடாது. மார்பகம் பெரிதாக வளரும் வயது என்பதால்,பிராவின் அளவுக்கு அடங்காத பகுதி, பிதுங்கியது போன்ற நிரந்தர ஷேப்புக்கு உள்ளாகிவிடும். அந்தந்த வயதில் மாறும் மார்பக அளவுக்கு ஏற்ப, பிரா அளவை மாற்றிக் கொண்டே இருக்கவேண்டும்.

✱ கனமான மார்பகம் உள்ளவர்களுக்கு மார்பகம் விரைவாகவே தளர வாய்ப்புள்ளது. சரியான பிரா போடா விட்டால் இந்தத் தொல்லை இன்னும் அதிகம். இவர்கள் போடும் பிரா கனமான மார்பகங்களைக் கொஞ்சம் தூக்கித் தரும் படியும், சரியாக பொருந்தும்படி கொஞ்சம் டைட்டாகவும் இருக்க வேண்டும்.

✱ கனமான மார்பகம் உள்ளவர்கள் இரவில் கண்டிப்பாக பிராவைக் கழற்றக்கூடாது. மற்றவர்கள், அதிகஇறுக்கம் இல்லாத பிரா போட்டுக்கொள்ளலாம். கழற்றி விட்டும் படுக்கலாம்.

✱ பெண்களின் உடல், கர்ப்பகாலத்தில், குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக தயாராகும். அதனால் அந்த நேரத்தில் மார்பகம் அதன் அளவிலும், வடிவத்திலும் வழக்கத்தை விட பெரிதாக மாறும். ஆகவே பிரா அளவை மாற்றி, இறுகப் பிடிக்காதபடி போடுங்கள். முக்கியமாக நிப்பிளைச் சுற்றியுள்ள கறுப்பு நிறம் இன்னும் அதிகமாகும். ஆனால் அதற்காக பயப்படத்தேவையில்லை. இது சாதாரணமானது.

✱ கர்ப்பத்தின் போது மார்பகத்தின் அளவு பெரிதாவதால் அதில் கோடுகள் விழவாய்ப்புண்டு. அதனால் கர்ப்ப காலத்தில் விட்டமின் 'ஈ' க்ரீம் தடவிக் கொள்ளுங்கள். சிலருக்கு நிப்பிளின் முனை நீளமாக இருக்காது. இது பால் குடிக்கும்போது குழந்தைக்கு சிரமத்தை ஏற்படுத்தலாம். அதனால் முன்னெச்சரிக்கையாக கர்ப்பத்தின் ஏழாம் மாதத்திலிருந்து குளிக்கும்போது மார்பு முனைகளை லேசாக இழுத்து விட வேண்டும். இதனால் பலன் இல்லையென்றால் டாக்டரிடம் காட்டுங்கள்.

✱ பால் கொடுக்கும் முன்னும் , கொடுத்த பிறகும் நிப்பிளைச் சுற்றி, தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்த பஞ்சை வைத்து சுத்தம் செய்ய வேண்டும். இதனால் பால் குடிக்கும் குழந்தைக்கு தோற்று நோய் வருவது தடுக்கப்படும்.

✱ மெனோபாஸ் வரும் நேரத்தில் மார்பகத்தின் அளவில் மாறுதல் ஏற்படும். மார்பகத்தில் உள்ள கொழுப்பு டிஷ்யூ, அக்குள் பகுதியில் போய்ச் சேரும். இதனால் இந்த வயதுப் பெண்களுக்கு பிளவுஸ், கைப் பக்கத்தில் மட்டும் பிடிப்பாகிவிடும். இதைத்தடுக்க உடல் பருமனை குறைக்க வேண்டும். டாக்டரிடம் காட்டி, அவர் சொல்லும் உடற்பயிற்சியை விடாமல் செய்ய வேண்டும்.

✱ மெனோபாஸ் தாண்டிய வயதில் சில பெண்களுக்கு மார்பகத்தின் அளவு குறைந்து தட்டையாகவும் மாறிவிடலாம். இந்த நிலைக்கு ஒன்றும் செய்ய முடியாது. இதற்கு தகுந்த அளவு பிராவை கச்சிதமாகத் தேர்ந்தெடுத்து போட்டுக் கொள்ளுங்கள்.

✱ மெனோபாஸ் முடிந்தபின் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ அவசியம் மார்பகத்தை செல்ப் டெஸ்ட் (Self Test) செய்து பார்த்துக் கொள்வதோடு டாக்டரிடம் மார்பகப் புற்று நோய்க்கான ' மேமோகிராம் ' டெஸ்டும் செய்து பாருங்கள்.

✱ ஏதாவது சில காரணங்களால் மார்பகத்தில் சிறிய காயங்கள் ஏற்பட்டால் உடனடியாக கவனம் எடுத்து ஆன்டிசெப்டிக் க்ரீம் பூசுங்கள். தேங்காய் எண்ணெய் கூட பூசலாம். காயத்தின் அளவு பெரிதாக இருந்தால் கட்டாயம் டாக்டரிடம் போக வேண்டும். ஏனென்றால் மார்பகம் மிகவும் உணர்வு பூர்வமான உறுப்பு. உடனடியாக தோற்று ஏற்பட்டு விட வாய்ப்புண்டு.

(22 ஆம் பக்கம் பார்க்க)



## ஜீன்ஸ் போட்டால் தொடை கறுப்பாகி விடுகிறதா...?

சிலருக்கு தொடை இடுக்கு கறுப்பாக, சொரசொரப்பாக இருக்கிறது. இரண்டு தொடைகளும் உராய்வதால்தான் இப்படி ஆகியிருக்கலாம். இதைத் தவிர்க்க உள்ளாடைகளை ஈரமில்லாமல் அணிவது நல்லது. ஈரமாக இருந்தால் அந்த இடங்களில் அழுக்குகள் மற்றும் பற்றீரியாக்கள் தங்கி தோலில் 'பிக்மென்டேஷன்' ஏற்படும். அதனால், ஈரத்தை நன்றாகத் துடைத்துவிட்டு தொடை இடுக்கி லுள்ள ஈரத்தை உறுஞ்ச பவுடரைப் போட்டுக் கொள்ளுங்கள். கண்டிப்பாக கிறீம் களைப் பயன்படுத் தாதீர்கள். இது பிக்மென்டே ஷனை அதிகரிக் கச் செய்து விடும். அதனால் தொடை உரசாமல் தடுக்க தொடைவரை இருக்கும் கொட்டன் டைட்ஸை அணியலாம். இதனால், தொடைகள் உராய்ந்தாலும் டைட்ஸ் போட்டிருப்பதால் தொடைகள் கறுப்பாகவோ சொரசொரப்பாகவோ ஆகாது.

## டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...

★ சமையல்சோடாவில் இரண்டுசொட்டு எலுமிச்சைச் சாறு, கடுகு எண்ணெய் சேர்த்து பல்லைத் தேய்த்துக் கழுவினால் பற்கள் பளபளக்கும்.

★ குழந்தைகளுக்குச் சளி, இருமல் இருந்தால் ஓமவல்லி, தூதுவளை, துளசி மூன்றையும் சம அளவு எடுத்து சாறு பிழிந்து கொடுத்தால் குணம் அடைவர்.

★ மாதுளை விதைகளை தனியாக எடுத்து மைபோல் அரைத்து வாரத்திற்கு ஒருமுறை தலையில் பூசிவந்தால் பேன் மறையும்.


★ மஞ்சள் கரிசலாங்கண்ணிக் கீரையை அரைத்துச் சாறு பிழிந்து சம அளவு நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி அடிப்பகுதி சுண்டி மெழுகு பதத்திற்கு வந்தபின் இறக்கிவிடவேண்டும். ஒரு டீஸ்பூன் காலைவேளையில் தலைக்குத் தடவ நரைமாறி விடும்.

★ துளசி இலையை நன்றாக இடித்துச் சாறு எடுத்து அதனுடன் சிறிதளவு பச்சைக்கற்பூரம் கலந்து பல்வலி இருக்கும் இடத்தில் தேய்த்து வர பல்வலி குணமாகும்.

★இதயவலி உள்ளவர்கள் ஒருபிடி துளசியுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்துச் சாப்பிட்டுவர நல்ல குணம் தெரியும். அதேபோல் ஓம இலையையும் துளசி இலையையும் சம அளவு எடுத்து ஒன்றுசேர்த்து ரசம்போல் காய்ச்சி அருந்தி வந்தால் மேனி பளபளப்பாகும்.

## சமைப்போம் சுவைப்போம்

### ஓட்ஸ் இட்லி



தேவையான பொருட்கள்

ஓட்ஸ் - ஒரு கப்.
உளுந்து - கால் கப்.
மிளகு - அரை தேக்கரண்டி.
சீரகம் - அரை தேக்கரண்டி.
இஞ்சி - ஒரு சிறிய துண்டு.
உப்பு - தேவையான அளவு.

செய்முறை:

உளுந்தை ஊறவைத்து இட்லிக்கு அரைப்பது போல அரைத்துக்கொள்ளவும். ஓட்ஸை தண்ணீர் சேர்த்து பிசைந்து உளுத்தமாவுடன் கலந்துகொள்ளவும். இதில் பொடித்த மிளகு, சீரகம், துருவிய இஞ்சி, உப்பு சேர்த்து 2மணிநேரம் புளிக்க வைக்கவும். பிறகு இட்லி தட்டில் ஊற்றி வேகவிட்டு எடுக்கவும்.

### வாழைப்பூ எள் கறி



தேவையான பொருட்கள்

ஆய்ந்து நறுக்கிய வாழைப்பூ - ஒரு கப்.
வெள்ளை எள் - 2 தே.க.
காய்ந்த மிளகாய் - 2.
உளுத்தம்பருப்பு - 2 தே.க.
கடலைப்பருப்பு-2 தே.க.
தேங்காய்துருவல் - 2 தே.க.
கடுகு - சிறிதளவு.
எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

செய்முறை:

தாச்சியில் எண்ணெய் காய்ந்ததும் எள், காய்ந்த மிளகாய், உளுத்தம்பிருப்பு, கடலைப்பருப்பு ஆகிய வற்றைச் சேர்த்து சிவக்க வறுத்துக்கொள்ளவும். அதில் உப்பு சேர்த்து பொடித்துக் கொள்ளவும்.

வாழைப்பூவை வேகவைத்துக் கொள்ளவும். தாச்சியில் இரண்டு தேக்கரண்டி எண்ணெய்விட்டு, காய்ந்ததும் கடுகு தாளித்து, வெந்த வாழைப்பூ, தேங்காய் துருவலைப் போட்டு வதக்கவும். செய்துவைத்துள்ள எள்பொடியை சேர்த்துக் கிளறி மல்லித்தழை, கறிவேப்பிலை தூவி பரிமாறவும்.



# நள்ளிரவில் ஒரு நாடகம் 18

## முன்கதைச் சுருக்கம்

சிக்காகோ நகரம். இரவுநடுச் சாமத்தை கடந்துவிட்டது. அமுரா, ஹொஸ்டலில் தனது அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறாள். அப்போது கதவு தட்டப் படும் ஓசை! இந்த நேரத்தில் யாராக இருக்கும்! காதலன் ஜோனாக இருக்குமோ என்ற சந்தோஷத்துடன் கதவைத் திறக்கிறாள். ஆனால், ஓர் மர்ம உருவம் அவளை உட்தள்ளி கதவைத் தாழிடுகிறது. அமுராவைத் தேடி ஜீனா வருகிறாள், மர்ம உருவம் ஜீனாவையும் விட்டு விடவில்லை. உள்ளே இழுத்துக் கொண்டது. டாக்டர் வில்லியம்ஸ் மூலமாக ரோலண்டுடன் மேரி அறிமுகமாகிறாள். அவனுடன் ஊர்சுற்றி விட்டு, ஹொஸ் டலுக்கு வருகிறாள். அங்கு மர்ம உருவத்தைக் கண்டு பயந்து வீதியில் ஓடும்போது ரோந்து பொலிஸ்காரனைச் சந்திக்கிறாள். அவனுடன் சல்லாபிக்கிறாள். அதில் உயிரையே விட்டு விடுகிறாள். இவை அறியாத ரோசி, தோழிகள் செக்ஸ் விளையாட்டுகளில் ஈடுபடுவதாக நினைத்து அவர்களை கையும் களவுமாகப் பிடிக்க முனையும்போது மர்ம மனிதனிடம் மாட்டிக் கொள்கிறாள். மர்ம மனிதனின் பிடிக்குள் அகப்பட்ட அவள், அவனைத் தாக்கி விட்டு ஓடுகிறாள். கொல்லும் நோக்கு டன் அவளை மர்மமனிதன் தேடிக் கொண்டிருக் கிறான். இதற் கிடையில் மீண்டும் மேரியைத் தேடிவந்த ரோலண்ட் மர்ம மனிதனால் கொலை செய்யப்படுகிறான். சப்-இன்ஸ் பெக் டர் ஹரிசன் ரோந்து வருகிறான். துப்பாக்கி வெடிச் சத்தத்தை கேட்டு ஏதோ நிகழ்வதாக உணர்கிறான். இனி...

சப் இன்ஸ்பெக்டர் ஹரிசன் சுதாகரித்துக் கொண்டான். வேகமாக வந்த வாகனங்கள் பொலிஸ் ஜீப் இருந்த இடத்தைக் கடந்து பறந்தன. ஜீப் இருளில் நிறுத்தப் பட்டிருந்தது. முன்விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. ஒரு வாகனம் நின்று கொண்டிருப்பதே வெளியில் தெரியவில்லை.

ஹரிசன் உற்றுப்பார்த்தான். அவனுடைய கழுகுக் கண்கள் வாகனங்களை அடையாளம் கண்டு விட்டன.

அவை,

சிறைச்சாலை பாதுகாவலர்கள் பயன்படுத்தும் வாகனங்கள். ஏன் இப்படி அலறி அடித்துக்கொண்டு பறக்கின்றன?

ஹரிசன் தலையை சொறிந்து கொண்டான். சிறைச்சாலையில் அடிக்கடி கலவரங்கள் ஏற்படும். கைதிகள் குழப்பம் செய்வார்கள் - சிறை அதிகாரிகளின் சித்திரவதைகளை பொறுக்கமுடியாமல் ஒன்று சேர்ந்து எதிர்த் தாக்குதல்கள் நடத்துவார்கள். சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சில கைதிகள் தப்பி ஓடி விடுவார்கள்.

ஒரு வேளை-

தப்பியோடும் கைதிகள் சிறை அதிகாரிகளின் வாகனங்களை திருடி அவற்றில் தப்பி ஓடுகிறார்களா... என்ற எண்ணம் ஹரிசனுக்கு ஏற்பட்டது.

அப்படியும் நினைக்க முடியவில்லை . வாகனங்கள் விரைகின்ற திசையை கவனித்தால் அந்த எண்ணம் தோன்றுகிறது . சிறைச்சாலைப் பெரிய அதிகாரியின் பெரிய வீடு அந்த திசையில் தான் இருக்கிறது. குற்றவாளிகள் பல்வேறு வேலைகளுக்காக அடிக்கடி அவரது வீட்டிற்கு கொண்டு செல்லப்படுவதால் அநேகமான கைதிகள் அதனை நன்றாக அறிவார்கள். அப்படியிருக்க தப்பியோடுபவர்கள் ஏன் அந்த திசைக்கு செல்லப்போகிறார்கள் என்றெல்லாம் மனம் அசைபோடுகின்றது. வண்டிகள் பறந்து மறைந்துவிட்டன.

மின்னலடித்து இடி இடித்து ஓய்ந்தாப்போல் இருக்கிறது. ஹரிசன் வண்டியிலிருந்து இறங்கினான். முன்னோக்கி வேகமாக ஓடினான்.

ஒன்று, ஒரு கொலைகாரன் தப்பிசெல்கிறான். இரண்டு, ஒரு சிறைச்சாலை கைதி தப்பிச் செல்வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றான்.

இக்குற்றவாளிகளில் யாரை கையும் மெய்யுமாகப் பிடித்தாலும் அவன் புகழடைவான். ஓடுகிற வாகனங்களை நிறுத்தி என்ன நடந்தது போன்ற விசாரணைகளில் காலத்தையும், நேரத்தையும் செலவிடுவது முட்டாள் தனம். அவர்கள் என்னன்னவோ சொல்வார்கள் நாமும் உளறிக் கொட்ட நேரிடும். அப்புறம் அனைத்தும் அனர்த்தம் தான்.



எழுதுவது கே. வி.

இவ்வாறெல்லாம் சப் - இன்ஸ்பெக்டரின் மனம் சுழன்றடிக்கவே, வாகனங்கள் பறந்து சென்ற சம்பவத்தை மறந்தவனாக நடுவீதியில் ஓடிவந்த மனிதன் மறைந்து விட்ட இடத்தைத் தேடி ஓடினான்.

அந்த இடத்திற்கு வந்து விட்டான். களைக்க களைக்க முன்னும் பின்னும் திரும்பிப் பார்த்து. மரங்களினூடே பார்வையைச் செலுத்தினான். ஒரு உருவம் தள்ளாடித் தள்ளாடி ஓடுவது தெரிகிறது. இடம் தெரியாமல் தடுமாறுவது போலவும் பின்னர் விழுந்து விடுவதும் தெரிகிறது. ஹரிசன் அதற்கு மேலும் அவசரப்பட்டு ஓடவில்லை. லிங்கனை சத்த மிட்டு அழைத்தான். லிங்கன் ஓடிவந்தான்.

''இதோ இங்கே நின்றுகொள். அந்த மரங்களுக்கிடையில் எவனோ விழுந்து கிடக்கிறான். அதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. விழுந்தும் கிடக்கலாம், பதுங்கியும் இருக்கலாம். நான் போய்ப் பார்க்கின்றேன். ஏதும் ஆபத்து என்றால் உடனே உஷாராகி விடு. ஓ கே!''

என்றவாறே ஹரிசன் மரங்களுக்கிடையே புகுந்து ஓடத்தொடங்கினான். பதவி ஆசையும், புரமோஷன் ஆசையும் யாரைத்தான் விட்டு வைக்கிறது. எவ்வளவு நுணுக்கமாகச் செயல்பட்டு அதனை அடைய முடியுமோ அத்தனை முயற்சிகளிலும் இவர்கள் ஈடுபடுகிறார்கள். சாதாரண கடைச்சிப் பந்தி முதல் பாதுகாப்புத்துறையில் பணியாற்றுபவர்கள் வரையில் இப்படித்தான் போலும்.

ரொம்பவும் இருளாகவிருந்தது. அதனால் தேடுவது கஷ்டமாக விருந்தது. டோர்ச்சை பயன் படுத்துவது ஆபத்தில் முடியலாம் என்று நினைத்த ஹரிசன் முடிந்த மட்டும் தனது கண்களையும், காதுகளையுமே பயன்படுத்தினான்.

மிகவும் நிசப்தமாகவிருந்தது. அவனுடைய பாதங்களின் ஓசை காதுகளில் விழாத வண்ணமே அவன் ஓடினான்.

ஓரிடத்தில்--

கால்களில் ஏதோ இடறுபட்டு ஹரிசன் தடுமாறினான். கீழே விழாமல் சுதாகரித்துக் கொண்டான். ஏதோ இடறியது. ஏதோ மனிதவுடல் தான் என்று ஊகித்துக் கொண்டு விட்ட ஹரிசன் தனது டோர்ச் விளக்கை இனி பயன்படுத்தலாம் என்று நினைத்தான்.

டோர்ச் எரிந்தது.

அவ்வெளிச்சம் ஓர் உடலின் மீது படர்ந்தது. அதன் மீது பார்வையை செலுத்திய ஹரிசன் சப்த நாடியுமொடுங்கிப் போனான். அது- ரோந்து பொலீஸ்காரன். ஹரிசன் வேகமாக அவனை நெருக்கி டோர்ச் வெளிச்சத்தை உடல் முழுவதும் பாய்ச்சி கவனித்தான்.

அவன் உடல் நடுங்கியது. ரோந்து பொலிஸ் காரனின் உடலில் காணப்பட்ட படுகாயங்கள் அவனை வெல வெலத்துப் போகச் செய்தன.

அவனுடைய நாக்கு தொங்கிகொண்டிருந்தது. கையெலும்புகள் ஒடிக்கப்பட்டு அறுபட்ட வாழைத்துண்டுகளாக தொங்குகின்றன.

ஹரிசன் வேகமாக இரண்டடிகள் பின்நகர்ந்தான். இவ்வளவு மோசமாக பாதிக்கப்பட்ட உடலோடு ரோந்து பொலிஸ்காரன் வீதியில் எப்படி வந்தான் என்பது அவனுக்கு அதிசயமாகவிருந்தது. நிச்சயமாக அவனால் முடியாது. ஓரளவு காயங்களுடன் அவன் தப்பிவந்திருக்கலாம். ஏதோ மிருகமொன்று தான் அவனை தாக்கியிருக்கிறது. தொடர்ந்து வந்த அது இவ்விடத்திலேயும் அவனை தாக்கியிருக்கிறது. கழுத்தை நெரித்திருக்கிறது. அதனால் தான் உயிர் ஊசலாடும் நிலைக்கு அவன் போயிருக்கிறான் என்ற ஊகங்கள் அவன் மனதில் அலை மோதின. அப்படியானால் அவன் இங்கேதான் இருக்கமுடியும். இருளில் நின்று என்னை அவதானித்துக் கொண்டிருக்கிறான். எக்கணமும் என்னையும் தாக்கலாம் என்ற திகில் ஹரிசனை உலுக்கியது.

டோச் விளக்கு அணைந்தது.

ரிவால்வர் கைப்பிடிக்குள் இறுகியது. ஏதேனும் நகரும் ஓசை தன்னை நெருங்குகின்றதா வென அவனுடைய செவிகள் சிலிர்த்து நிமிர்ந்து நின்றன. அப்போது -

லேசான முனகங்கள் சத்தம் கேட்டது . வேதனையுடன் அது ஒலித்தது. அது ரோந்து பொலிஸ் காரனுக்கு சொந்தமானதாக இருக்கலாம்.

ஹரிசன் சில அடிகளுக்கு முன்னால் புல்தரையில் கிடக்கும் அவ்வுடலை நோக்கிநகர்ந்தான்.

உடல் காலில் தட்டுப்பட்டது?

'' ஜோர்ஜ் ! என்ன நடந்தது?''

''ஐ அம் டையிங்! நான் சாகிறேன். அந்த பிசாசு என்னை அடித்தது''

''எந்த பிசாசு?''

'' ஐ யோ ! வாவிக்கரையில் வாவிக்கரையில்....'' அதற்கு மேல் சப்தம் வரவில்லை''

'' ஜோர்ஜ் ! ஜோர்ஜ் !''

ஹரிசன் ரோந்து பொலிஸ்காரனின் பெயரைச் சொல்லி இருமுறைகள் அழைத்தான். பதில் எதுவும் வரவில்லை. அவன் சடலமாகி விட்டான். என்ன சொன்னான்? வாவிக்கரையில் பிசாசா? என்று தன்னையே கேட்டுக்கொண்டு நின்றபோது எவரோ தன்னை நெருங்கி வருவதுபோன்ற காலடி ஓசை ஹரிசனுக்கு தெளிவாகக் கேட்டது.

(தொடரும்)

# சிறுவர் பக்கம்



புத்தர் ஒருமுறை தான் பருகுவதற்காக அருகில் உள்ள குளத்திலிருந்து தண்ணீர் எடுத்து வருமாறு தனது சீடர் ஒருவரிடம் கூறினார். பாத்திரத்துடன் சீடர் குளத்துக்குச் சென்றபோது யானை ஒன்று அந்தக் குளத்தைக் கலக்கிவிட்டுச் சென்றிருந்தது.

## பொறுமைக்கு ஒரு பாடம்

தண்ணீர் கலங்கிப் போய் குடிப்பதற்கு இல்லாதிருந்தது.

எனவே, சற்றுத் தொலைவில் உள்ள ஓடையில் இருந்து தண்ணீர் எடுத்து வரலாம் என்று சீடர் நடந்தார்.


ஆனால், அப்போது சீடரை புத்தர் அழைக்கவே, அவர் தண்ணீர் எடுக்காமல் திரும்பிவந்தார்.

குளத்தில் உள்ள தண்ணீர் கலங்கிப்போய் இருந்ததால் தான் ஓடையிலிருந்து தண்ணீர் எடுத்துவரச் சென்றதாக சீடர் கூறினார்.

''தேவையில்லை...'' என்ற புத்தர் ''குளத்து தண்ணீரையே குடிக்கலாம்'' என்றார்.

எனவே, மீண்டும் குளத்துக்குச் சென்ற சீடர், அதில் கலங்கல் அடங்கி தற்போது தெளிவாக சூரியஒளியில் தண்ணீர் பிரகாசிப்பதைக் கண்டார். தூயதண்ணீரை பாத்திரத்தில் முகர்ந்து கொண்டு வந்து புத்தரிடம் கொடுத்தார்.

''எதுகுறித்தும் அவசரத்தில் முடிவெடுக்காதே. நீ பிரச்சினைகளைச் சந்திக்க நேரும்போது எல்லாம் அமைதியாகும் வரை பொறுமையாயிரு...கலங்கிய குளத்தில் தூசு, தும்புகள் அடங்குவதைப் போல'' என்று போதித்தார் புத்தர்.



## பழமொழிகள்

- அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது.
- அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.
- அற்ப ஆசை கோடி தரித்திரம்.
- இல்லது பிறவா அள்ளது குறையாது.
- இறைத்த கிணறு ஊறும் இறையாத கேணி நாறும்.
- உடையவன் பாராவேலை ஒரு முழம் கட்டை.
- உண்ணாச்சொத்து மண்ணாப் போகும்.
- உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயிற்று.
- போகாமற் கெட்டது உறவு கேளாமற் கெட்டது கடன்.
- எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு.

## விடுகதைகளும், விடைகளும்

1. எட்டாத உயரத்தில் தண்ணீர்க்கலசம். அது எது?
2. அடிபட்டவன் அழுதால் அனைவருக்கும் ஆனந்தம். அவன் யார்?
3. சிறுத்தவன் பருத்தால் சிதறிவெடிப்பான். அவன் யார்?
4. வாலுள்ளவன் வான் உயரம் பறக்கிறான். அவன் யார்?
5. தலையில் மரம் சுமந்தபடி தாவி ஓடுவான். அவன் யார்?

விடைகள்: 1.இளநீர், 2.மத்தளம், 3.பலூன், 4.பட்டம், 5.மான்.

## அழகாக நிறம் தீட்டுங்கள் 52



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப் படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங் களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத் தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 49



முதலிடம் பெற்றவர் - எஸ்.கிரேசி, தரம் - 6பி, கொ/ புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்.

### பாராட்டுப் பெறுவோர்...

1. த.வித்தியாசாகர், தரம்4, பெல்வெயர் சர்வதேச கல்லூரி, வெள்ளவத்தை.
2. ஆர். அக்ஷா தரம் 3 சி, கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை, கல்முனை.
3. எஸ். ஆன்ஜன் தனுஷன், தரம் 4ஏ, நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு.
4. கி.சுதர்சன், தரம் 3, ஹைலன்ஸ் ஹட்டன் கல்லூரி. 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன்.
5. ஜோர்ஜ் ஜோமாட்டனோ, தென்இந்திய திருச்சபை முன்பள்ளி, மாங்குளம்.
6. டி.ராகித், தரம் 4சி, ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன.
7. கேமேந்திரா ஜோன்சன் குகேந்திரன், தரம் 1, சிவானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு.



காகவின், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு 15.



மி.சங்கவி, தரம் 4, மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா., புதுக்குடியிருப்பு.



மினோலி, கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு 15.




ஜெ.யாழினி, பாலர் வகுப்பு, கிளி/புனித சூசையப்பர்முன்பள்ளி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

## சிறுவர் கைவண்ணம்



மோ.கரிகாலன், கரடிப்பிலவு, நெடுங்கேணி.



நா.சுதாகரன், 105, கட்சன் வீதி, வட்டக்கச்சி.

# ரொம்ப நன்றி அம்மா



'சேச்சே... எப்படி ஏமாந்தோம்? மிகவும் கவனமாகத்தானே இருந்தோம்?' எனக்குள்ளே நொந்துகொண்டேன் நான்.

"ஏய் திவ்யா... கல்யாணம் முடிஞ்சதும் அவசர அவசரமா மூன்றாவது மாசத்திலே கர்ப்பமாகி... பத்தாவது மாசத்திலே குழந்தையைப் பெற்று கொள்ளாதே. அப்புறம் சின்ன வயசிலே இளமையைத் தொலைச்சிட்டு, கிழவி மாதிரி ஆயிடுவே! ஒரு மூன்று, நாலு ஆண்டு தள்ளிப்போடு."

திருமணத்தன்று தோழி கல்பனா சொன்ன வார்த்தைகளை வேதவாக்காக எடுத்துக்கொண்டு, சர்வ ஜாக்கிரதையாய் தாம்பத்தியத்தைக் கையாண்டுகொண்டிருந்த என்னை தள்ளிப்போய்விட்ட 'அந்த' நாட்கள் எச்சரிக்கையூட்ட பெண் மருத்துவரிடம் ஓடினேன். சோதனை நடந்தது. கர்ப்பம்தான் என்று தெரிந்தது.

அன்றிரவே கணவனிடம் சொன்னேன்.

"நான் நாளைக்கே கருவைக் கலைச்சிடப் போறேன்!"

"தி... வ்... யா... என்ன சொல்றே?" ஆத்திரமாக கேட்டான், சுரேஷ்.

"எதுக்கு இப்படிக் கத்துறீங்க? நான் என்ன சொல்லிட்டேன்.... ஊர் உலகத்தில எங்கையும் நடக்காததையா சொல்லிட்டேன்?"

என் செயலை நியாயப்படுத்தும் விதமாய் நான் பேச,

"நீ புரிஞ்சுதான் பேசுறியா? எத்தனையோ பேர் குழந்தைப்பாக்கியம் இல்லையென்று கவலைப்பட்டு, கோவில் கோவிலா ஏறி இறங்கிட்டு இருக்காங்க. ஏதோ ஆண்டவனா பார்த்து நமக்குக் கொடுத்த இந்த வரத்தை அழிக்கிறேன்கிறியே.... இது நியாயமா, திவ்யா?"

" மன்னித்துக் கொள்ளுங்கள்... இந்த விஷயத்துல நான் என்னோட முடிவை மாத்திக்கிறதா இல்லை" ஆணித்தரமாய் கூறினேன்.

"சேச்சே... நீயெல்லாம் ஒரு பெண்ணா?" என்று வெறுப்பை உமிழ்ந்து விட்டு, அந்த இடத்தை விட்டு அகன்றான் சுரேஷ்.

காலை ஒன்பதரை மணிக்கே மருத்துவமனைக்கு புறப்பட்ட நான், நிதானமாய் நடக்கத் தொடங்கினேன்.

வழியில் மக்கள் கும்பலாய் நின்று எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, மெல்ல எட்டிப் பார்த்தேன் அடை காத்த கோழி ஒன்று செத்துக் கிடந்தது.

**உண்மைக்கதை**

அதன் அருகில் ஒரு பாம்பு இரத்தக் காயங்களுடன்!

"அடடா... இதுதான் அம்மா தாய்மைக்குணம் என்கிறது பார்த்தீங்களா, இந்தக் கோழியை? தன் முட்டைகளைக் குடிக்கத்தான் அந்தப் பாம்பு என்று நினைச்சு அதோடு சண்டைப் போட்டு.... தன்னோட முட்டைகளைக் காப்பாத்திடுச்சு!"

"பின்னே? எந்தத் தாய்தான் தன்னோட வாரிசை இழக்கிறதுக்கு சம்மதிப்பா? பறவை இனமா இருந்தாலும் அந்தக் கோழியும் ஒரு தாய்தானே? அதான் உயிரைக் கொடுத்து, காப்பாத்தி இருக்கு!"

பொட்டில் அடித்தது போலிருந்தது. எனக்கு 'கேவலம்... ஒரு கோழிக்கு இருக்கிற தாய்மை உணர்வுகூட எனக்கு இல்லாமப் போச்சே... அது கூட உயிரைக் கொடுத்து தன் சிசுவைக் காப்பாத்துது. நான்... நான்...'

கையிலிருந்த ஆஸ்பத்திரி சீட்டை 'பரபர' வென்று கிழித்துப் போட்டு விட்டு, திரும்பிநடந்தேன். என்னையும் அறியாமல் எனது கை சிலாகிப்புடன் அடிவயிற்றைத் தொட்டுப்பார்த்தது. உள்ளே இருந்த குழந்தை, 'ரொம்ப நன்றி அம்மா' என்று சொல்வதைப் போல இருந்தது எனக்கு.

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 317

*சொற்சிலம்பம் 317 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் ஜூன் 15 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 21 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 315 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.*

*தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 315

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | 2 வ | ப் | 3 பு | ■ | 4 க | 5 மு | 6 கு |
| 7 மி | கை | ■ | 8 ரா | 9 ஜா | ■ | 10 த | லை |
| க் | ■ | 11 பு | ண | ர் | 12 த | ல் | ■ |
| 13 கி | 14 ர | க | ம் | ■ | ந் | ■ | 15 ம |
| ■ | 16 க | ல் | ■ | 17 அ | தி | 18 ப | ன் |
| 19 ம | சி | ■ | 20 து | ணை | ■ | 21 க | ள |
| 22 ச | ய | ன | ம் | ■ | 23 ச | ர் | வ |
| 24 கு | ம் | ■ | 25 பி | தா | ம | க | ர் |

## சொற்சிலம்பம் போட்டி இல.317

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | 19 | |
| | ■ | 20 | | | ■ | 21 | |
| ■ | 22 | | | ■ | 23 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 317

**இடமிருந்து வலம்**

1. செருக்கு.
6. ஒரு கிரகம்.
7. ஒரு திசையின் குறுகிய சொல்.
8. தாண்டு.
9. கழுவுதல் / அரற்றுதல்.
11. சாதாரண மனிதன்.
13. நோவு.
14. ரகம்.
15. என்று.
17. சிரசு.
18. ஆசைப்படல்.
20. துன்பம் இழைக்கும் செயல்.
21. சேர்.
22. திடீரென.
23. படிப்பு/அறிவு ஊட்டுவது.

**மேலிருந்து கீழ்**

1. நிகழக்கூடாதது. சம்பவிக்கக்கூடாதது.
2. பழம்.
3. புலவன்
4. தேர் இழுக்கும் கயிறு.
5. சமுத்திரம்
8. ஒரு வாழைப்பழ ரகம்.
9. இரும்புக் கருவிகளைத் தீட்டுவது இதனால்.
10. உலகம்.
12. குழந்தை.
15. சேற்றில் ஒய்வெடுக்கும் மிருகம்.
16. சரணம் வரிசையில் ஒன்று/பதத்தில் ஓர் உறுப்பு.
18. தங்குமிடம்.
19. வெளிச்ச வேளை.
20. வழங்கு.


### சொற்சிலம்பம் போட்டி இல. 315

1. கே. தர்ஷினி, இல.296, டைக்வீதி, திருமலை.
2. ப. குமார், 36 - 4/4, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
3. ச. சுரேந்தினி, 42, இனிசியம் வீதி, தெஹிவளை.

### பாராட்டுப் பெறுவோர்

1. ம. குருச்சந்திரன், திருகோணமலை.
2. நா. லுபோஜிதா, கல்முனை.
3. ப. குசான், மட்டக்களப்பு.
4. திருமதி. அ. தவமணி, கொழும்பு-06.
5. ம. கனகசேகரம், தெஹிவளை.
6. ஆர். கார்த்திகேசு, கொழும்பு - 06.
7. ச. பாலசூரியன், வவுனியா.
8. திரு. க. சிவப்பிரகாசம், மொரட்டுவை.
9. நர்மிக்கா - தர்மதாஸ், மன்னார்.
10. ப. நாகேஸ்வரி, கல்கிசை.
11. எம். ஐ. எம். முன்ஸிப், வெலிகாமம்.
12. அ. ஆனந்தி, திருகோணமலை.
13. ராஜினி புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு.
14. இ. பிரானினி, மட்டக்களப்பு.
15. ஆர். குழந்தைவேலு திருகோணமலை.

''அம்மா... என்று மெல்லிய குரலில் ஆரம்பித்தாள் சுதா. சுதாவின் முகம் சிவந்து, உதடுகள் துடிப்பதைப் பார்த்தவுடனேயே அவளை மெதுவாக அணைத்துக்கொண்டு, ''என்ன சுதா?''



# மத்தளத்துக்கு

நிமிடக்கதை

என்று கௌளி கேட்டு முடிப்பதற்குள் மடைதிறந்த வெள்ளம் போல் தன் மாமியார், மாமனார் , மைத்துனர் குறைகளைப் பட்டியலிட்டாள் சுதா.

''இதோ பார் சுதா. நீ சின்னப் பெண். படித்திருக்கிறாயே தவிர விவரம் போதாது. புகுந்த வீட்டில் இன்னும் கொஞ்சம் பொறுமையாக நடந்துகொள். தெரியாததைக் கேட்டுத் தெரிந்துகொள். எங்களுக்குப் பெருமை தேடித் தருகிற மாதிரி நடந்துகொள்'' என்று இதமாகச் சொல்லி அவளைத் தேற்றினாள் அம்மா கௌளி.எப்படியோ நாட்கள் நகர்ந்தன. காலம் சுழன்றது. இதோ, சுதா மறுபடியும் சிவந்த முகமும் கலைந்த முடியுமாக கௌளியின் அருகில் ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கிறாள்.

'' எங்க வீட்டிலே...'' என்று தொடங்கிய சுதாவை இடைமறித்து அவளது கரங்களை இதமாக அழுத்தியவாறு சொன்னாள் அம்மா கௌளி, ''இங்கே பார் சுதா. காலம் எவ்வளவு விரைவாக ஓடிடுச்சு... உன் மருமகள் விபா சின்னப் பெண். செல்லமாக வளர்ந்தவள். நீதான் அவளிடம் விட்டுக் கொடுத்துப் போகணும். பொறுமையா அரவணைச்சு அவர்களுக்குத் தெரியாததை பக்குவமா கற்றுக்கொடு. அனாவசியமா நொந்து போகாதே!''

தலைமுறை மாற்றங்களாலும் கலாசாரப் புரட்சிகளாலும் ஸாண்ட்விச் ஆகிப்போன தன்னை நினைத்து ஒரு புன்முறுவலுடன் தீர்மானமாக எழுந்தாள் சுதா. ஊஞ்சலும் கிரீச்சிடுவதை நிறுத்தியது!

கருகிய உள்ளங்கள்...

(26 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்தாளர் வ.கீதா இதுபற்றிக் கூறியதாவது:

''எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்தே இதுபற்றித் தொடர்ந்து பேசி வருகிறோம். பெண்களின் பாலியல் உறவு பற்றிப் பேசினாலே கற்பு, கலாசாரம் என்று காட்டுக்கூச்சல் போடுகிறார்கள். லெஸ்பியன் என்பது ஒருவரின் தனிப்பட்ட சுதந்திரம். குடும்பம், சாதி, மதம் போன்ற ஆயுதங்களால் அதைக் கொல்லக்கூடாது. நம்முடைய புராணங்கள், பல்வேறு மொழிகளின் இலக்கியங்கள் ஆகியவற்றில் ஓரினச்சேர்க்கைக்கான ஆதாரங்கள் இருக்கின்றன. கஜுராஹோ மற்றும் கோனார்க்கில் ஆகிய இடங்களில் உள்ள சிற்பங்களே இதற்குச் சான்று. லெஸ்பியன்கள் மீது விருப்பத்திற்கு மாறான குடும்ப உறவைத் திணிக்கும்போதுதான் அது, அவர்களை மரணத்தை நோக்கித் தள்ளுகிறது. அவர்கள் சுயமரியாதையோடு வாழக்கூடிய சூழலை உருவாக்கித் தரவேண்டும்'' என்றார்.

இந்தக்கூட்டமைப்பின் சார்பில் கவுன்சிலிங்கில் ஈடுபட உள்ளவர்களுக்குப் பயிற்சியளிக்கும் டாக்டர் மேக்தலின் தெரிவிக்கையில்: ''பொதுவாக ஓரினச் சேர்க்கையில் ஆர்வமுடைய ஆண்கள் நிறையப்பேர் கவுன்சிலிங் கேட்டு என்னிடம் வருகிறார்கள். ஆனால், பெண்கள் அப்படி வரமுடிவதில்லை. காரணம் இந்த வாய்ப்புக்கூட பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. தற்கொலை செய்துகொள்ளக்கூடிய அளவுக்கு லெஸ்பியன் உறவு தகாதது அல்ல. ஓரினச்சேர்க்கை பற்றிய எந்தப் புரிதலும் இல்லாமல்அதை ஒடுக்க முயற்சிக்கும்போதுதான் கிறிஸ்டி, ருக்மணி போன்றவர்கள் சாகநேரிடுகிறது. வாழ்க்கையில் இயற்கைக்கு முரணான பல்வேறு விஷயங்களை ஏற்றுக்கொள்கிற நாம், இயல்பான முரணான பல்வேறு விசயங்களை ஏற்றுக்கொள்கிற மனிதர்களைப் போலவே லெஸ்பியன்கள் சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படவேண்டும்'' என்கிறார்.

இந்தவிவகாரம் பற்றி பாலியல் நிபுணரான டாக்டர் நாராயண ரெட்டி கூறுகையில்,

'லெஸ்பியன்களை மனநோயாளிகளாகவே மருத்துவ உலகம் கருதியநிலையில்...1978ஆம் ஆண்டு 'அமெரிக்கன் சைக்கியாட்ரிஸ்ட் அசோசியேஷன்'தான் இது மனநோயல்ல என்று கூறியது. சிலருக்கு இடதுகைப்பழக்கம் இருப்பது மாதிரித்தான் லெஸ்பியன் பழக்கமும். விலங்களிடம்கூட ஹோமோ செக்ஸ் பழக்கம் இருக்கும்போது இது இயற்கைக்கு முரணானது இல்லை. ஆனால், 'இயற்கைக்கு முரணான உடலுறவு தண்டனைக்குரியது' என்று சொல்லும் நம்முடைய சட்டம் எது இயற்கைக்கு முரணானது என்பதை தெளிவாக வரையறுக்கவில்லை. இதில் கணவனும் மனைவியும் வாய்வழி உறவுகொண்டால் கூட இயற்கைக்கு முரணானது என்றுகூற வாய்ப்பிருப்பதால் இச்சட்டம் விலக்கிக்கொள்ளப்படவேண்டும்.

இப்போது ஆண், பெண் தேவையின்றி 'ஸ்டெம் செல்'களைப் பயன்படுத்தினாலே குழந்தை பெறலாம் என்கிற இயற்கைக்கு மாறான செயலை ஏற்றுக்கொள்ளும் மக்கள், லெஸ்பியன்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். மாவீரன் அலெக்சாண்டர், நீரோ மன்னன் போன்ற சாதனையாளர்கள் கூட ஓரினச்சேர்க்கையாளர்கள் தான். இதனால் எந்தவிதத்திலும் அவர்களின் ஆளுமைத்திறன் பாதிக்கப்படாது...உடலிலும் எந்த மாற்றமும் நிகழாது!'' என்கிறார் அவர்.

தமிழகத்தில் இப்படியொரு விஷயத்தில் இந்தளவுக்கு வெளிப்படையான விவாதங்கள் இதற்குமுன்பு கிளம்பிய தில்லை.இப்போது கிளம்பி விட்டது எப்படி எதிர்கொள்ளப்போகிறது தமிழகம்?

## உங்கள் மார்பகங்களைப்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

* சில பெண்களுக்கு மார்பகத்தில் அங்கங்கே முடிகூட இருக்கும். சிலருக்கு இது பாரம்பரை காரணமாக இருக்கலாம். வயதுக்கு வந்த இளம் வயது பெண்களுக்கும், திருமணமாகி குழந்தை இல்லாத பெண்களுக்கும், மாதவிடாய் சுற்று சரிவர வராத பெண்களுக்கும், இப்படி அதிகம் இருக்க வாய்ப்பு உண்டு. இதற்கு டாக்டரிடம் காட்டி முறையான சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

* மாதவிடாய் நேரத்தில், பொதுவாக ஒரு வாரம் பத்து நாட்களுக்கு முன்னரே மார்பகத்தில் வலி வருவது சாதாரணமான ஒன்றுதான். ஹார்மோன் சுரப்பிகளின் மாறுதல்களால் இப்படி ஏற்படுகிறது. பயப்படத் தேவையில்லை.

* குழந்தை பெற்றெடுத்த நிலையில் மட்டுமல்லாமல், சும்மாவே சிலருக்கு நிப்பிளில் திரவக்கசிவு இருக்கும். பிராவிலும் நீர்க்கசிவின் அடையாளம் தெரியும். இதுபோல இருந்தால் உடனடியாக டாக்டரிடம் போக வேண்டும். பின்னாளில் இது புற்றுநோய்க்கு கூட வழிவகுக்கும்.

* மார்பகமோ அதன் நுனிப்பகுதியோ வழக்கத்துக்கு மாறாக தங்கள் அமைப்பிலோ; நிறத்திலோ மாறுபட்டிருந்தாலோ, மார்பகத்தில் அசௌகரியமோ; வலியோ ஏற்பட்டாலோ, நிப்பிளில் திரவக்கசிவு இருந்தாலோ பெண்கள் தாங்களது மார்பகத்தை தாங்களே பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

பொதுவாக மாதவிலக்கு முடிந்தபிறகு இந்தப் பரிசோதனை செய்துபார்ப்பது நல்லது . கண்ணாடியின் முன்நின்று கையைத் தலைக்கு மேலே தூக்கிக்கொண்டு உள்ளங்கையை மார்பகங்களின் மீது வைத்து வட்டவடிவில் தடவுங்கள்.

கையில் உருண்டையாக ஏதாவது தட்டுப் பட்டால் பயந்துவிடாதீர்கள். அது புற்றுநோய்க் கட்டியாகத்தான் இருக்கவேண்டும் என்பதல்ல. இப்படித் தென்படும் உருண்டைகளில் பத்துக்கு ஒன்பது ஒருவேளை ஆபத்தில்லாத கட்டிகளாகவோ, அடைத்துக்கொண்டிருக்கும் தாய்ப்பால் கட்டிகளாகவோ அல்லது நீர்க்கட்டிகளாகவோ கூட இருக்கலாம். நீர்க்கட்டி எனில், சுலபமான அறுவைச்சிகிச்சை மூலமே எளிதில் நீக்கிவிடலாம். ஆனாலும் அவை ஆபத்தில்லாத கட்டியா என்று தெரிந்துகொள்ள 'மேமோகிராம்' டெஸ்ட் செய்யவேண்டும்.

* புற்றுநோய்க்கான வீக்கம் எனில், சற்றே கடினமாக கையில் தென்படும். ஆனால், இந்த வீக்கங்களில் வலி இருக்காது. இப்படி ஏதாவது நீங்கள் பரிசோதனை செய்யும்போது தென்பட்டால் எந்த வயதினராக இருந்தாலும் உடனடியாக டாக்டரிடம் போகவேண்டும்.

* சிலருக்கு திடீரென்று மார்பகம், அதிக கனமாகவும் வலியுடனும் மாறும். இதை தொற்று என்று கருதி சில டாக்டர்கள் ஆன்டிபயாடிக் மருந்துகளை தருகிறார்கள். ஆனால், கொழுப்புச்சத்து, பால்பொருள்கள் மற்றும் காபி, டீ போன்றவற்றைக் குறைத்தாலே சிலருக்கு இந்த வலி சரியாகலாம்.

* மனித உடலின் ஜீன் P53இல் இருக்கும் தவறுகளால் கூட புற்றுநோய் வரவாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அதோடு புகைப்பிடிக்கும் பழக்கம், வைரஸ் இவைகள் மட்டுமல்லாமல் தவறான உணவுப்பழக்கங்கள் கூட புற்றுநோய் வர அதிகளவு வாய்ப்பாகின்றன.

* மார்பகத்தில் அறுவைச்சிகிச்சை என்றால் மார்பகம் முழுவதையும் நீக்குவது என்று அர்த்தமில்லை. இப்போதெல்லாம் லேசர் சிகிச்சையும், கீமோதெரபி சிகிச்சையும் மிகவும் சர்வ சாதாரணமாகிவிட்டன. அப்படியே மார்பகம் முழுமையும் நீக்கப்பட்டாலும் கூட உங்கள் சாதாரண வாழ்க்கை எந்தவிதத்திலும் பாதிக்கப்பட்டுபோவதில்லை. பொதுவாக, கைகளின் அடிப்பாகத்தில்தான் அறுவைச்சிகிச்சைகள் நடக்கும் . ஏனெனில், அங்குதான் புற்றுநோய் கட்டிகள் சுலபமாக பரவிடக்கூடிய வாய்ப்பு அதிகம்.

* பெரிய மார்பகங்கள் இருப்பதுதான் மிகவும் பெருமை என்று உலகம் முழுவதிலும் பலபெண்கள் ஆசைப்படுகிறார்கள். இதனால், இதற்காக செயற்கை மார்பகம் பொருத்திக்கொள்வது அதிகமாகிவருகிறது. ஆனால், இப்படி செயற்கை முறையில் பெரிதாக்கப்படும் மார்பகங்களால் அழகு கூடினாலும் தொல்லைகள் ஏற்படவும் வாய்ப்பு அதிகம் உண்டு.

* புற்றுநோய் போலவே பயமுறுத்தக் கூடிய ஒருவிஷயம், 'காஸ்டோகான்டிரிட்டிஸ்'. மார்பகத்தில் கட்டிபோலத் தென்பட்டு வலி அதிகமாக இருக்கும். இதற்கு லோக்கல் அனஸ்தீசியா கொடுத்து, ஸ்டீராய்ட் ஊசி போட்டாலே வலி சரியாகிவிடும்.

## அமெரிக்கா......

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து விடயங்களிலும் இருவருக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. இருவரில் எவர் வென்றாலும் அரசியலில் அதீத எல்லையில் உள்ள ஒருவர் நாட்டுக்குக் கிடைப்பார். மக்கெய்ன் பழைமைவாதி; ஒபாமா தாராளவாதி.

ஏப்பிரலில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் இருதரப்புக் கொள்கைகளுக்கும் கணிசமான ஆதரவு இருப்பது புலனாகியது.

மக்கெய்ன் ஈராக்கில் படையினரை அதிகரிக்க வேண்டுமென்பதற்கு ஆதரவானவர். உடனடியாக படைகளை விலக்குவதை எதிர்க்கின்றார். ஈரானுக்கு எதிராகக் கடும் தடைகள், சுதந்திர வர்த்தகம், வரிச்சலுகை, கருக்கலைப்பு எதிர்ப்பு போன்றவை இவரது கொள்கை.

ஒபாமா இவற்றிற்கு, எதிரான தாராளவாதி. சமூக நலன்களை தனியார் மயப்படுத்துவதை எதிர்ப்பவர். கருக்கலைப்பு உரிமையை ஆதரிப்பவர். ஈராக் யுத்தத்திற்கு எதிரானவர். ஆரம்பம் முதல் அவரது முக்கிய கொள்கையாக இது காணப்படுகின்றது.

தனிப்பட்ட பின்னணி மற்றும் தோற்ற ரீதியிலும் வித்தியாசமுள்ளது. வெள்ளை இனத்தவரான மக்கெய்னை பார்த்தவுடனேயே அவரது இராணுவ பின்னணி புலப்படும். வியட்நாம் யுத்தக்கைதி, கடற்படை வீரர், 1982 இல் காங்கிரஸில் நுழைந்தவர்.

ஒபாமா, கென்யா தந்தைக்கும் கான்சஸ் தாயாருக்கும் பிறந்தவர்; இந்தோனேஷியாவில் பிறந்து ஹவாயில் வளர்ந்தவர்; மூன்றரை வருடங்களாகவே செனட்டில் இடம்பெற்றுள்ளார்.

வயதுக்கும் இனத்துக்கும் இடையில் மோதல் இடம்பெறுவதும் சுவாரசியமானது.

மக்கெய்னின் வயதை ஒரு பிரச்சினையாக கருதியவர்களின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துள்ளது. அதேவேளை, நிறரீதியில் வாக்களிக்க வேண்டுமா என சிந்திப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கருத்துக்கணிப்புகள் இதனைப் புலப்படுத்துகின்றன.

# நடக்காதென்பார் நடந்துவிடும்

மற்றுமொரு எண்பத்துமூன்றுக்கு (83) இடமளிக்கப்போவதில்லை என மகிந்த ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்திருக்கிறார். தன்னுடைய வாசஸ் தலத்திற்கு ஊடகங்களின் ஆசிரியர்களையும்,பொறுப்பதிகாரிகளையும் அழைத்து காலை விருந்தளித்துப் பேசுகையிலேயே இலங்கை ஜனாதிபதி இதனைக் கூறியிருக்கிறார்.

அத்தோடு எந்தவிதமான அழுத்தங்கள் வந்தாலும் யார் கூறினாலும் எத்தனை அழிவுகள் ஏற்பட்டாலும் யுத்தத்தை நிறுத்தப்போவதில்லை என்றும் சூளுரைத்திருக்கிறார்.

பொதுமக்களை இலக்கு வைத்து அடிக்கடி நடத்தப்படுகின்ற குண்டுத் தாக்குதல்கள் மூலம் தெற்கிலே ஒரு கலவரத்தைத் தூண்டுவதற்கு புலிகள் முயற்சித்து வருகின்றனர் என்று மகிந்த ராஜபக்ஷ அங்கு குற்றஞ்சாட்டினார். எனினும், தனது அரசாங்கம் அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் வலியுறுத்தினார்.

இவ்வகையான இனக்கலவரம் இடம்பெற அனுமதிக்கப் போவதில்லை என்றவாறான கருத்துக்கள் கடந்த மாதங்களில் முன்னரும் சில தடவைகள் ஒலித்ததை வாசகர்கள் மறந்திருக்க நியாயமில்லை. ஏன் இவ்வாறு அடிக்கடி பேசப்படுகிறது?

பல மாதங்களுக்கு முன்னர் இலங்கை நாடாளுமன்றில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.கஜேந்திரன் யாழ்ப்பாணத்திலுள்ள நாற்பதாயிரம் படையினரும் தென்னிலங்கைக்குச் சவப்பெட்டியில் அனுப்பப்படுவர் எனக் கூறியதற்குப் பதிலளித்த அமைச்சர் '' தென்னிலங்கையில் உள்ள நான்கு லட்சம் தமிழர்களையும் கிளிநொச்சிக்கு சவப்பெட்டியில் அனுப்புவோம்'' என எச்சரித்திருந்தார்.

இந்தக்கூற்றை, மேற்படி இடமளிக்கப் போவதில்லை என்ற கூற்றுடன் எவ்வூறு பொருத்திப் பார்க்கமுடியும்?

இந்தக் கேள்விக்கான பதில் திட்டமிட்டுத் தூண்டுதல் என்பதாகும் அல்லது இந்தவிதமான பதிலளிப்புக்குத் தயாராக இருங்கள் என்பதாகும்.

1958 மே மாதத்தின் கடைசி வாரத்தில் தமிழ்மக்கள் மீது தென்னிலங்கையிலும் வடக்கு,கிழக்கின் சிங்களக் குடியேற்றப் பகுதிகளிலும் நடத்தப்பட்ட தாக்குதல்களை அரசாங்கத்தின் தலைவர்கள் வதந்திகளையும், வானொலி உரைகளையும் பாவித்துத் தூண்டி,விளாசி எரியவிட்டதை இவ்விடத்தில் ஒப்பிடமுடியும்.

நுவரெலியா நகரத்தின் முன்னாள் மேயர் செனிவிரத்ன என்பவர் தமிழர்



களால் படுகொலை செய்யப்பட்டு விட்டார் என அப்போதையப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டார நாயக்க வானொலியில் தெரிவித்தார். அவசர உரை என ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கு ஒருமுறை மறுபடி மறுபடி ஒலிபரப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

இது தமக்கு விடுக்கப்படும் செய்தி என்பதை உணர்ந்த சிங்களக் குண்டர்கள் அரசின் வழி நடத்தலுக்கேற்ப தென்னிலங்கையின் நகரங்கள் தோறும் பேயாட்டம் ஆடி இனச்சங்காரம் புரிந்தனர்.

**எஸ்.வில்லவன்**

இவ்வகையான சம்பவமொன்று பதவியாவில் இடம்பெற்றது.

இப்பகுதியில் குடியேற்றப்பட்டு நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றில் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்த சிங்கள குற்றப் பின்னணி கொண்ட குடியேறிகள் கலவரத்தின் ஆரம்ப நாட்களில் தமிழர்களைத் தாக்குவதற்கு ஆயுதங்களை எங்கே பெறுவதெனக் கையைப் பிசைந்து கொண்டிருக்கையில் அமைச்சர் சீ. பீ. டீ.சில்வா ஒரு பத்திரிகைச் செய்தி ஊடாக அவர்களுக்கு வழிகாட்டினார்.

கனரக வாகனங்கள், வெடிமருந்துகள், ஆயுதங்கள் ஆகியன தவறானவர்களின் பாவனைக்கு உள்ளாகி விடக்கூடாது என்பதற்காகப் பாதுகாப்பாகப் பூட்டி வைக்கப்பட்டுள்ளன என அவர் ஒரு சிங்களப் பத்திரிக்கைக்கு வழங்கிய செய்தியில் காடையர்களுக்கான செய்தி இருந்தது.

களஞ்சியசாலைகளை உடைத்து அவர்கள் ஆயுதங்களையும், வெடிமருந்து உள்ளிட்ட பொருட்களையும் கைப்பற்றியதோடு அங்கிருந்த வாகனங்களிலேயே கெப்பற்றிக்கெல்லாவ, வவுனியா ஊடாகப் பயணித்து, அநுராதபுரத்திற்கு வந்துசேர்ந்திருந்த தென்னிலங்கைத் தமிழ ஏதிலிகளைத் தாக்கச் சென்றனர். வவுனியா அரச அதிபரின் நடவடிக்கைகளால் இந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

இதைவிட இடத்துக்கிடம் பரப்பப்பட்ட ஏராளமான வதந்திகள் கலவரத்தீயை பற்றியெரியச் செய்தன.

''சிங்களப் பெண்களின் மார்புகளைத் தமிழர்கள் வெட்டினர். யாழ்ப்பாணத் திலிருந்தும் திருகோணமலையிலிருந் தும் மீன் லொறிகளில் சிங்களவர் களைக் கொன்று உடல்களை ஏற்றி அனுப்புகின்றனர்'' என்றவாறான பலப்பல வதந்திகள் அரச அமைச்சர்களாலேயே திட்டமிட்டமுறையில் உருவாக்கப்பட்டு பரப்பப்பட்டன.

இதன்பேறாக வெகுண்டெழுந்த சிங்களக் காடையர்கள் தமிழர்களைக் கொன்று தீர்த்தனர்.

இதன் விளைவாக அகதிமுகாம்கள் உருவாக்கப்பட்டு தென்னிலங்கைத் தமிழர்கள் அங்கே தஞ்சம்புகவைக்கப்பட்டு அடுத்தபடியாகக் கப்பல்களிலே வடக்கு கிழக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதுநடந்து ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மகிந்த ராஜபக்ஷ மற்றுமொரு எண்பத்து மூன்றுக்கு இடமளிக்கப்படமாட்டாது எனக் கூறுவதன் நோக்கம் என்ன?

1958, 1977, 1983 ஆகிய மூன்று இனக்கலவரங்களிலும் மிகமுக்கியமாகச் சிங்களப்பேரினவாதம் சாதித்தது என்னவெனில், தென்னிலங்கையின் நகரங்கள் தோறும் காணப்பட்ட தமிழர்களின் இடுப்பை ஒத்தியெடுத்து அகற்றியமையாகும்.

இதற்கு மிகச்சிறந்த உதாரணங்களாக அநுராதபுரம், பொலனநறுவை ஆகியவற்றைக் குறிப்பிடமுடியும்.

அநுராதபுரத்திலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்டது தான் கிளிநொச்சியிலுள்ள தருமபுரம் என்னும் கிராமம்.

1958ஐயும் 1977, 1983 ஐயும் கடந்து இன்னமும் கொழும்பிலே மட்டும் தமிழர்களின் வர்த்தக இருப்பும் பிடியும் இருக்கின்றன. இந்த இருப்பை அழிப்பதற்குப் பல்வேறு முயற்சிகளை அரச ஆதரவோடு அவ்வப்போது பேரினவாதம் எடுத்தபோதும் திருப்திகரமான விளைவு அவர்களுக்குக் கிட்டவில்லை.

கடத்தல், கப்பம்பெறுதல், காணாமற் போகச் செய்தல், கூட்டாகவெளியேறச் செய்தல் போன்ற உத்திகள் எதிர்பார்த்த வெற்றியைத் தராததால் அடுத்தகட்டப் பாய்ச்சலுக்குத் தயாராகக் காத்திருக்கிறது அது.

கொழும்பிலே தமிழர்கள் நாடாளுமன்ற ஆசனங்களைத் தக்கவைப்பதும், கட்சிகளை அமைத்து சர்வதேசப் பிரபல்யத்தை தேடிக்கொள்வதும் வர்த்தகம் ஊடாக மேலாதிக்கத்தைக் கொண்டிருப்பதும் பொறுக்கமுடியாத விடயங்கள் பேரினவாதத்திற்கு.

எனவே, இந்தத் தமிழ்க்குடியிருப்புகள், வர்த்தகநிலையங்கள், நிறுவனங்கள்தான் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் பயங்கரவாதிகளுக்குப் புகலிடமாயிருக்கின்றன என்றும் ஒரு நீாசகாரப் பரப்புரை அடிமட்டத்திலே நாசூக்காகப் பரப்பி வரப்படுகிறது.

இந்தப் பின்னணியிலேயே மகிந்த ராஜபக்ஷவினது கூற்றுக்களை நாம் பார்க்கவேண்டும். இன்னொருபுறம் தென்னிலங்கையில் நடத்தப்படும் தாக்குதல்கள் அங்கேயுள்ள தமிழர்களின் இருப்புக்கு உலைவைக்கும் என்பதான மிரட்டலாகவும் அவை அமைவதைக் கண்டு கொள்ளவேண்டும்.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் எதுவொன்று நடைபெறமாட்டாதெனக் கூறுகின்றார்களோ, வலியுறுத்துகிறார்களோ அதை விரைவில் நிறைவேற்றப் போகின்றார்கள் என்பதே அர்த்தமாகும்.

*நன்றி: தமிழ்வின்*

---

கிழக்கில்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கெரில்லாத் தாக்குதல் அணியினர் யால வனவிலங்கு சரணாலயப் பகுதியில் மீண்டும் ஒன்றுகூடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து யாலவின் பாதகாப்பைப் பலப்படுத்தும் உத்தரவு யாலவிலுள்ள ஒருங்கிணைப்புக்குழு கட்டளை மையத்திற்கு இராணுவத் தளபதியால் கடந்தவாரம் அனுப்பப்பட்டுள்ளது. புலனாய்வுப் பிரிவின் இந்தத் தகவல்கள் உண்மையாயின் அடுத்துவரும் நாட்களில் யால வில் தாக்குதல்கள் அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளன.. யால வனவிலங்கு சரணாலயத்தின் வடபகுதியான பாணம என்ற பகுதியிலேயே சுமார் 10பேரடங்கிய புலிகள் குழுவினரின் நடமாட்டம் காணப்பட்டதாக அப்பகுதிச் சிங்கள மக்களும் தெரிவித்திருக்கின்றனர்.

ஏற்கனவே, கடந்த டிசம்பர் 7ஆம் திகதியும் இப்பகுதியில் புலிகளின் நடமாட்டம் இருப்பதாகக் கிடைத்த தகவல்களையடுத்து படையினர் தேடுதல் நடத்தியபோது அப்பகுதியில் இருதரப்பிற்கும் இடையே மோதல் மூண்டிருந்தது. எனினும், அங்கிருந்து புலிகள் தப்பியிருந்தனர்.

தற்போது மீண்டும் புலிகளின் நடமாட்டம் குறித்த தகவல்கள் கிடைத்துள்ளன. யால வனவிலங்கு சரணாலயப் பகுதியில் புலிகள் முதன்முதலாக 1997ஆம் ஆண்டிலேயே சிறியதொரு கெரில்லா தாக்குதலை நடத்திவிட்டு அங்கிருந்து பின்வாங்கியிருந்தனர். அதன்பின்னர் தற்போதே புலிகளின் நடமாட்டம் யாலவில் அதிகரித்திருக்கிறது. கெரில்லாத் தாக்குதல்களை நடத்துவதற்கான சிறந்த ஒரு களமாக யால வனவிலங்கு சரணாலயப் பகுதியை புலிகள் கருதியிருக்கலாம். அடிக்கடி அப்பகுதியில் இடம்பெற்றுவரும் தாக்குதல்களும் அதனை உறுதிப்படுத்து வது போன்றே உள்ளது.

கஞ்சிகுடிச்சாறு மற்றும் பேராறு பகுதிகளில் சுதந்திரமாக இயங்கிவரும் புலிகளின் அணியினரே யால, வனவிலங்கு சரணாலயப் பகுதிக்குள் கெரில்லா தாக்குதல்களை நடத்தும் நோக்கில் உள்நுழைகின்றனர் என்று படைத்தரப்பு கூறிவருகிறது. அதாவது, கஞ்சிகுடிச்சாறு மற்றும் பேராறு பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி புலிகளை விரட்டமுடியாத கையாலாகாத நிலையில் தாம் இருப்பதை படைத்தரப்பு மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது. அதேநேரம் வன்னியில் அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு பலியெடுக்கும் படலம் தொடர்வதை தடுத்துநிறுத்துவதற்காக தென்னிலங்கையிலும் தாக்குதல்கள் நடத்தவேண்டியதொரு நிலை புலிகளுக்கு விரும்பியோ விரும்பாமலோ ஏற்பட்டிருப்பது யாவரும் அறிந்த உண்மையே.

எனவே, வன்னியிலுள்ள மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்தும் வகையிலான தாக்குதல்கள் தென்னிலங்கையில் அதிகரிக்கும் சாத்தியங்களும் காணப்படுகின்றன. வன்னியில் கடந்த 23ஆம் திகதி நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட 16பேரின் சடலங்களும் கிளிநொச்சி பாரதிபுரத்தில் மறுநாள் 24ஆம் திகதி அருகருகே புதைக்கப்பட்டன.

சடலங்கள் புதைக்கப்பட்ட சமயம் கொழும்பில் கடவத்தையிலும் மொறட்டுவையிலும் பேருந்துகளில் அதிசக்திவாய்ந்த இரண்டு குண்டுகள் பயணிகள் வழங்கிய தகவலையடுத்து படைத்தரப்பால் மீட்கப்பட்டன. இந்த இரண்டு பேருந்துக் குண்டுகளும் மீட்கப்பட்டமை வன்னித் தாக்குதலில் மக்கள் கொல்லப்பட்டமைக்கு கொழும்பில் பதிலடித் தாக்குதல் நடத்தப்படவிருந்ததையே எடுத்துக்காட்டுகிறது. பேருந்துக் குண்டுகள் அதிர்ஷ்டவசமாக மீட்கப்பட்டாலும் தெகிவளை புகையிரத நிலையத்தில் வெடித்த குண்டை மீட்கமுடியாமல் போய்விட்டது. இச்சம்பவத்தில் 9பேர் இறந்ததுடன் 70வரையானோர் காயமடைந்தும் உள்ளனர்.

எதிர்வரும் காலங்களிலும் இத்தகைய பதிலடிகள் தொடராது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. எனவே, எதிர்வரும் வாரங்களில் கிழக்கில் மட்டுமன்றி தென்னிலங்கையின் ஆழமான பகுதிகளிலும் கொழும்பிலும் கூட படைத்தரப்பு பாரிய நெருக்கடியைச் சந்திக்க நேரலாம். படையினருக்கு ஏற்படும் இத்தகைய நெருக்கடிகள் களமுனைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், புலிகளுக்கு அத்தகைய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்விக்கே இடமில்லாத வகையில் அவர்களது செயற்பாடுகள் அமைந்துள்ளன.


அதாவது, வன்னியைச் சூழ்ந்து பலமுனைகளில் படையினர் தாக்குதல்களை நடத்திக்கொண்டு, இன்னும் மீதமாகவிருக்கும் ஓரிரு ஆயிரம் புலிகளை விரைவில் அழித்துவிடு வோம் என்று கூறிக்கொண்டிருக்கின்றனர்.

அப்படி ஆள்பற்றாக்குறை இருந்தால் புலிகள் நிச்சயம் தமது புதிய அணிகளை கிழக்கில் தரையிறக்க முன் வந்திருக்க மாட்டார்கள்.

வன்னியைத் தக்கவைப்பதற்கே தமது அணிகளை அவர்கள் பயன்படுத்த முனைவர். ஆனால், கிழக்கிற்குத் தமது புதிய அணிகளை மேலதிகமாக புலிகள் அனுப்பி வருவதைப் பார்க்குமிடத்து புலிகளுக்கு ஆட்பற்றாக்குறை இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களுக்கும் புதிதாக சிறப்புத் தாக்குதல் தளபதிகளை புலிகளின் தலைமை நியமித்திருப்பதானது புலிகளிடம் கிழக்கிற்கு அணிகளை அனுப்புமளவுக்கு ஆளணி வளம் இருப்பதையே காட்டுகிறது. கிழக்கிற்கு அணிகளை அனுப்பிவைப்பதுடன் பணிமுடிந்துவிடப் போவதில்லை. அவர்களுக்கான விநியோகம், தொடர்பாடல், நிர்வாகம் என்பவற்றை உறுதிப்படுத்தவேண்டும். அப்படியிருந்தும் புலிகளின் தலைமை கிழக்கிற்கு அணிகளை அனுப்பும் நிலைக்கு வந்திருக்கிறதெனில் புலிகளின் தலைமைக்கு நிர்வாகச் சிக்கல் என்பது இல்லவே இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. இத்தகையதொரு நிலையானது படைத்தரப்பிற்கு நிச்சயம் பாரிய நெருக்கடிகளை விரைவில் கொடுக்கும் அதேவேளை வரலாற்றுச்சமர்களை மீண்டும் நினைவுபடுத்தும் வகையிலான தாக்குதல்களும் நடைபெறலாம் என்பதையும் கட்டியம் கூறி நிற்கின்றது.

*நன்றி: நிலவரம்*



# வாழ்வியலை அழகியலுடன் தரும் அரிய படைப்புகள்

## (ஓர் எழுத்தாளனின் டயறி)

'ஓர் எழுதுவினைஞனின் டயறி' த. ஆனந்தமயில் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு. ஈழத்து சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் ஏற்கனவே பிரசுரமான பன்னிரெண்டு சிறுகதைகளை இந்நூல் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் 70, 80 காலகட்டங்களில் எழுதப்பட்ட கதைகளாகும். வல்வெட்டித்துறை வர்ணா வெளியீடாக நூல் வடிவம் கொண்டுள்ள இந்நூலினை கதாசிரியரின் மகனான ஆனந்தமயில் நித்திலவர்ணன் வெளியிட்டிருக்கின்றார். கருத்தாழம் மிக்க சமூகச் சித்திரங் களாக 'மிளிரும் ஆசிரியரின் படைப்புகளும், கவிஞர் இ. முருகையனின் முன்னுரையும், எழுத் தாளர்களான குப்பிழான் ஐ. சண்முகத்தின் ஆசிரியர் அறிமுகக் குறிப்பும், ஆ. யேசுராசாவின் அச்சுப்படிகள் திருத்தமும், ஓவியர் ரமணியின் அட்டைப்படச் சத்திரமும் இணைந்து நூலினை கனதியாக்கியுள்ளன.

ஒற்றைக்கால் கோழி, முருக்கைக் கற்பூக்கள், காக்காச்சி கரிமகளே, திருவிழா, ஓர் எழுதுவினைஞனின் டயறி, வாழும் வெளி, ஒரு கட்டுமரம் காத்திருக்கிறது, கொலுமீட்பு, நண்பனும் ஒரு புளியமரமும், விதி, கலை வந்தபோது, விளக்கீடு ஆகியபன்னிரெண்டு கதைகள் நூலில் பிரசுரமாகியுள்ளன.

மல்லிகை, அலை, வீரகேசரி, சமர், தினக்குரல், தமிழோசை ஆகிய சஞ்சிகைகளிலும், பத்திரிகைளிலும் இக்கதைகள் பிரசுரமாகியுள்ளன.

சிறுகதை, கவிதை, புதினம் என்ற நவீன படைப்புகளைத் தரும் நமது படைப்புகளில் பெரும்பாலோர் தாம் சமூக படைப்பாளிகள் என்றே பறைசாற்றிக்கொள்வதுண்டு. வாசிப்பு ரசனைக்காக மட்டுமே எழுதுகின்றோம் என்று மார்தட்டிக் கொள்பவர்கள் நம்மிடையே மிகமிகக் குறைவு. இன்று நாம் நமது முன்னோடிகள் என்று மேளமடிக்கிற பலரும் ஆரம்பத்தில் ரசனை எழுந்தாளர்களாகவே இருக்கின்றனர். அதனால்தான் கல்கியும், கலைமகளும் அவர்களின் படைப்புக்களை பிரசுரித்தன என்று நமது ஒரு விமர்சகர் குறிப்பிடுவதுண்டு. இது எப்படிபோனாலும் நமது நாட்டின் சமூகநிலைமைகளும், பிறழ்வுகளும் இலக்கியத்தில் சமூகத்தன்மை, தனித்துவம் என்பவற்றுக்கான தேவை குறித்து கோட்பாட்டு அழுத்தத்திற்கு வழிவகுத்தன. அவற்றின் வெளியீட்டுத்தன்மையாக காலத்தின் குரல்களாகவும், பிரதிபலிப்புகளாகவும் படைப்பிலக்கியம் அழுத்தம் கண்டது. அத்தகைய தெளிவுடன், கலைத்துவம் மிக்கவர்கள் படைப்புகளில் காலடி பதித்த போது சிறந்த படைப்புகள் பெறுபேறாக அமைந்தன. அத்தகையோரில் 70,80 காலகட்டங்களில் எழுத ஆரம்பித்த சிறந்த படைப்பாளிகளில் த. ஆனந்தமயிலும் ஒருவராக இருக்கிறார். அவருடைய படைப்புகள் அதனை உறுதி செய்கின்றன.

மண்மணம் கமழும் மொழி நடை, யதார்த்தமுடன் துலங்கும் வாழ்வியல் சித்திரம் என்பன இதற்கு ஆதாரமாகின்றன. அன்னாரின் ஆக்கங்கள் தனித்துவம் மிக்கன வாக திகழ்கின்றன. ஏற்கனவே எழுதப்பட்ட கதைகளையே இன்று பெரும்பாலான எழுத்தாளர்கள் நூலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய நவீன வளர்ச்சியின் சுலபமான அச்சக வசதிகள் இதற்கு துணையாகின்றன. இன்றைய பரப்பான வாழ்வியலும், திகிலும் அச்சமும் மிக்கதான நெருக்கடிகளும், நிகழ்வுகளும் கதைகளில் இல்லையே என்ற மனத்தாங்களை வெளிப்படுத்து பவர்கள் உள்.



அது சரியான கணிப்பீடு அல்ல. இலக்கியம் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்கின்றபோது, ஆக்கம் வெளியான காலத்தின் பிரதிபலிப்பாக விளங்குமாயின் இன்றைய வாழ்வியலின் கடந்தகால வாழ்வியலையே பிரதிபலிக்கின்றது. யதார்த்தமான பாத்திரத்தன்மை, பேச்சுமொழி, காலப்பொருத்தமான நிகழ்வு இவை இணைகின்றபோது வாழ்வியல் அழகியல்மிக்கதான கலைவடிவமாகிறது.

ஆனந்தமயிலின் ஆக்கங்கள் அனைத்திலும் இச்சிறப்பியல்புகள் அனைத்தும் துல்லியமாக இழையோடுவதை தரிசிக்க முடிகிறது.

திருவிழா! ஓர் அருமையான படைப்பு. ஒரு சமூகத்தின் அகவயத் தன்மையை உள்ளார்த்தமாக பேணிப் பாதுகாப்பது திருவிழாக்களே. ஒரு திருவிழா நிகழ்வினை கதையாகத் தந்து ஒரு சமூகத்தின் வாழ்வியலையே சொல்கிறார்.

ஒரு திருவிழாவை கதையாக வடிவமைத்து வாசகன் முன்வைக்கின்றபோது மெலிதான உள்ளுணர்வுகளை வெளிக்கொணரும் விதமாக நிகழ்வுகளை முதன்மைப்படுத்துவதன் மூலம் அதனை மனதில் ஆழப்பதிவாக்குகின்றார். இத்தகைய சித்திரம் ஒருசிறுகதை வடிவில் முழுச் சமூகத்தையும் கண்முன் அமைகின்றபோதும் சமூகத்தின் வாழ்வியலை ஓவியமாக கண்முன் நிழலாடச் செய்வதாகும். திருவிழாக்களில் இடம் பெறும் சடங்குகள் பல மூடத்தனங்களின் வேர்கள்தான். ஆனால், முதிய சமூகம் அவற்றை ஜீரணிக்கும் புதிய தலைமுறை அதை நிராகரிக்கும். அவற்றை முன்வைக்கும் முற்போக்குக் குரல்கள் மெதுவாக ஒலிக்கின்றன. பரிணாமத்தின் உட்கருக்கள் இவ்வாறுதான் புதையுண்டிருந்து படிப்படியாக வளர்ச்சிகாண்கின்றன. கருத்துப் பிரசாரத்தின் அழகியல் தன்மை இவ்வாறுதான் ஆர்ப்பாட்டம் இன்றி அமையும். இதுவே மக்கள் இலக்கியமாகிறது. கலைத்துவம் மிக்க ஆனந்தமயிலின் இத்தகைய கலை யாக்கப் பண்புகளை இத்தொகுதியின் சகல கதைகளிலும் காணமுடிகிறது.

ஆனந்தமயில் பரீட்சைத் திணைக்களத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். எழுத்தில் வல்லவராகவும் வாழ் நெறியில் நல்லவராகவும் வாழ்ந்து விட்ட ஓர் எழுத்தாளரான அவர் ஆர்ப்பாட்டமும் போலித்தனமும் மிகுந்த இன்றைய எழுத்துலகிற்கு பரீட்சயமற்ற ஒருவராக குடத்துள் விளக்காகவே வாழ்ந்துவிட்டார். அவருக்கு மிகவும் நெருக்கமான எழுத்தாளர்களான குப்பிளான் ஐ.சண்முகம், அலை.செ.யேசுராசா ஆகியோரின் குறிப்புகள் அன்னாரின் வாழ்வியலை கண்முன் நிறுத்துகின்றன. மெல்லிதயம் படைத்தவர் என்கிறார் சண்முகம். ஆர்ப்பாட்டமில்லாதவர் கலைத்துவமிக்கவர் என்கிறார் யேசுராசா. இவை வெறும் கூத்தல்ல என்பதை ஒவ்வொரு கதையும் பறைசாற்றுகின்றது.

''இந்தக் கால்களைப் பதித்து பழகிய பாதையில் நடக்க முடிந்தால் எவ்வளவு நல்லது. புல்நுனி, முள்,கல் எதுவானாலும் மிதித்துப்போக எவ்வளவு ஆசையாக இருக்கிறது. நடக்கப் பழகியபோது அம்மா எவ்வளவு மகிழ்ந்தாள். இருகைகளையும் நீட்டி மீதித் தூரத்தையும் நடந்து முடிக்க அனுசரணை செய்தாள். நடக்க வேண்டும். இல்லையேல் ஆகாயத்தில் பறக்க வேண்டும். வெளியே வானம் முதலானவற்றைப் பார்க்கவேண்டும். எங்கே நீ? உன்னுடன் கதைக்கவேண்டும்....''

இவ்வாறு நீள்கின்ற வரிகள் 'கலை வந்தபோது...' கதையின் ஆரம்பவரிகள் ஒரு கலைத்துவமான மெல்லிதயத்தின் தூறல்கள். ஒரு விபத்தின் காரணமாக பத்து வருடங் க்ளுக்கும் மேலாக படுக்கையிலே கிடக்கும் ஓர் எழுத்தாளனின் இதய உதறல்கள்.

ஆனந்தமயில் நித்திலவர்ணன்
வர்ணா வெளியீடு
ஊர்மனை (கொத்தன்றை)
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை

என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு ஓர் அரியநூலை பெற்றுக்கொள்ளுங்கள்.

**கே.வி.**



# பையன் வெளிநாடுன்னா அப்பன் ஜாலியாக இருக்கவேணாமோ?

''மனச்சாட்சி இருந்து என்ன புண்ணியமுங்க. புத்திசாலித்தனம் இருக்கனுமிங்க''

''ஆமா! என்ன மனமொடிஞ்சி பேசுரிய''

''பின்ன என்னங்க நம்ம பய வெளிநாடு போயி அஞ்சுவருஷமாயிடிச்சி. நம்ம கண்டது ஒன்னுமில்லே. அடுத்த ஊட்டு பையன் போனான். ஒரு வருஷம்தான் ஆச்சு, அவங்கப்பன் மோட்டார் சைக்கிள்ளே ஓடித்திரியுரான். சிகரெட் சிகரெட்டா ஊதித்தள்ளுரான்.''

''அடேயங்கப்பா! பையன் பெரிய எடமா தொழிலோ?''

''உம். அப்படித் தெரியல்ல. ஏன்னா நம்ம பையனை விட படிப்பு கம்மிதான். டாஸ் பூஸ்'ஸின்னு நாலு இங்கிலீஸ் வார்த்தை கூட பேசத் தெரியாது. நம்ம பையன் அதுல எல்லாம் சமத்துதான். ஆனா என்ன பண்ரது பொய் பேசமாட்டான். ஆருடைய பணத்துலேயும் கை வைக்க மாட்டான். சூதுவாது கெடையாது. ஆரு சொத்துக்கும் ஆசை கிடையாது. எல்லாம் என் தகப்பன் பேரனுக்கு கத்துக் குடுத்தது. வெறும் சுண்டைக்காய் படிப்பு. வெளிநாட்டுக்கு போயும் என் புள்ளே நாலு பணம் அனுப்பி வைக்க முடியாம கெடக்கான்.''

''ஆகா! என்னே ஒரு பையனை பெத்து இருக்கிங்க. வெளிநாட்டுக்கு போயும் இவ்வளவு நேர்மையாக வாழ்ந்து கிட்டிருக்கான். கொடுத்து வைச்ச மனுஷன் நீர்.''

''அட நிறுத்தும் ஐயா! ஆருக்கு வேணும் இந்த கத்தரிக்காய் வாழ்க்கை. புள்ளைக வெளிநாட்டுலே இருந்தா நாம இங்கே ஜாலியாக வாழ வேண்டாமா? ஒவ்வொருத்தன் கேட்கிற கேள்வியை காதுல எடுத்தால் நாக்கை புடுங்கிக்கில்லாம் போல இருக்கே. என்னதான் என்டாலும் அடுத்த ஊட்டுக்காரன் புள்ளயை பாராட்டனும். தொழில் ஒன்றும் இல்லே, ஆனால் என்ன நாலு கூட்டத்திற்குள்ளே புகுந்து ஆர் தாலியாவது அறுத்து நாற்பது ஐம்பதுன்னு அனுப்பிக்கிட்டே இருக்கான். அப்பன் கொடுத்து வைச்சவன்.''

''அடப்பாவி!''

# பொழைக்கத் தெரியணும் - அண்ணே பொழைக்கத் தெரியணும்!

''ஏலே! என்னா அரசியல் வாதின்னா ரொம்ப கேவலமா பேசுர? நாம எல்லாம் புத்திசாலிக, பேச்சு வல்லமை உள்ளவங்க. இதுதான் தெறமை. அதனாலே பொழைச்சிக்கிறோம்.''

''எதை தெறமைன்னு சொல்லுதிய. ஒரு எழுத்தாளன் பத்திரிகைகாரனுக்கு ஏத்தமாதிரி கதை எழுதுரான். ஒரு மந்திரி அரசனுக்கு ஏத்தமாதிரி யோசனை சொல்லுரான். அப்படித்தான்.''

''ஒன்னும் புரியல்லையே!''

''ஏலே! இந்த கதையை கேளு அப்ப புரியும். ஒரு ராஜா மந்திரியை கேட்டார். ஐயா மந்திரி! மரக்கறிகளிலே உயர்ந்தது எது? மந்திரி மகிழ்ந்து போனார். ஏன்னா அவர் தோட்டத்துலே கத்தரிக்காய் வெதைச்சு இருந்தார். நல்ல வெளைச்சல். இதை எங்கே கொண்டு போய் தள்ளுறதுன்னு தலையை பிச்சுக்கிட்டிருந்தவருக்கு வரப்பிரசாதமாயிட்டுது.

மன்னா! மரக்கறிகளிலே சிறந்தது கத்தரிக்கான்னு சொன்னார்.

எதை வைச்சு சொல்றீர்? மன்னன் கேட்டான்.

மன்னா! கத்தரிக்காய் மரக்கறிகளிலே மன்னன் என்பதற்காகத்தான் இறைவன் அதன் தலையிலே கிரீடம் வைச்சிருக்கான்.

ஆகா! அன்று முதல் கத்தரிக்காய் மாளிகையின் சமையல் அறையில் தூள் பரத்தியது. பொரியல் என்ன வறுவல் என்ன கத்தரிக்காய் விளைச்சல் எல்லாம் முடிந்துவிட்டது. மன்னனுக்கும் கசந்துவிட்டது. என்ன கண்றாவி இதுன்னு அலுத்துப்போய் மந்திரியை கூப்பிட்டு, என்ன மந்திரியாரே கத்தரிக்காய் என்றீர், கிரீடம் என்றீர் சே சகிக்க முடியல்லயே என்றார்.

மந்திரியார் சிரித்தார். ஆமாம் மன்னா! அதனால்தான் அதன் கிரீடத்தை கழற்றும் விதத்தில் இறைவன் படைத்திருக்கிறான் என்றார்''

''ஆகா! அரசியல்வாதி பிழைக்கத்தெரிந்தவன்தான்.''

# கவிதைப்புனல்

My Heart is Yours

## சிறை மீண்ட கவிஞர்

சங்கமுன் வீடு; என்றும்
சங்கத்தாள் ஏடு; நடையில்
சிங்கத்தின் பீடு; விழிகள்
சிவப்பேறும் மேடு; எஸ்.பி.
தங்கவேல் நாமம்; போக்கில்
தனித்துவம்; வசனக் கோவை
பொங்குமுன் குமுறல்; கவிதை
பூப்புநல் யாப்பில்! நன்று!

ஆக்கங்கள் பூக்கும் சங்க
இதழினில்; தோட்ட மக்கள்
ஏக்கத்தைச் சொல்லும்; அன்னார்
எதிர்பார்ப்பை விள்ளும்; சமூகத்
தூக்கத்தை நீக்கும்; எங்கும்
துடித்தெழச் செய்யும்; கற்றோர்
மூக்கின்மேல் விரலை வைப்பர்
முத்தமிழ்ப் புலமை கண்டு!

எரிமலை அச்ச மூட்டும்
எரிசுடர் வெளிச்சங் காட்டும்!'
விரிகடல் நீலங் காட்டும்
விண்ணகம் விசாலம் காட்டும்
பரியோட்டம் வேகம் காட்டும்
பன்றினம் பெருக்கம் காட்டும்
கரியுடல் வலிமை காட்டும்
கவிதைகள் புலமை காட்டும்!

வழிநடை; கவிதைக் கட்டை
வைப்புக்கைப் பைக்குள்; நின்னை
பிழிந்தனர் கேள்வி கேட்டு
போலிஸார்; கவிதைக் கட்டை
சுழிப்போடு பார்த்தார்; மூடன்
செப்பினான் அர்த்தம் வேறாய்!
கழித்தனை சிறையில் நாட்கள்
கண்ணீரில் துவண்டு மீண்டாய்!

■ கவிஞர் ஸி.எஸ்.காந்தி

## கண்ணீர்க் கோடுகள்

உறவுகளின் வாழ்விற்காக
மரநிழலொன்றில் அடைக்கலம்
தேடினேன்... மனதின் காயங்களை
புன்னகைக்குள் புதைத்தபோதும்
இராப்பொழுதுகளில் கண்ணீரால்
நனைந்தது தலையணை!
பயணித்த பாதைகள் தடைப்பட்டபோது
உறவுகளை கனவுகளில் தானே
கண்டு மகிழ்ந்தேன்...! இப்போது
நிழல்தந்த மரத்தின் வேர்களே
இலைகளை உதிரச் செய்து வெய்யிலை
தந்த வேதனை என்ன... என்
தலைவிதியா... இதனால்
என் உறவுகளுக்கு கன்னத்தில்
கண்ணீர்க்கோடுகளே
என்றும் நிரந்தரமா?

■ ஆ.சுதா, புளியங்குளம்.

## முடியவில்லை

தேடினேன் கிடைத்தாய்
பார்த்தேன் பேசினாய்
நெருங்கினேன் அணைத்தாய்
தாகம் என்றேன் நீராய் வந்தாய்
சோகம் என்றேன் மகிழ்வாய் தந்தாய்
பிரிவு என்றாய் நீ
என்னால் எதுவும் தர முடியவில்லையே!

■ இரா. ஆ. ஸ்ரீசிபாமேரி, முழங்காவில்

## நர்கீஸ் புயலின் நரபலி வேட்டை!

அல்லும் பகலும் அகதிச் சிலுவை!
அந்தோ நர்கீஸ் புயலின் கோரமை!
இல்லை மியன்மார் மக்களின் உயிரை
எடுத்தது! எங்கும் பிணங்களின் வாடை!

அடுப்படி புகையா தாறிப் போயின!
ஆடைகள் யாவும் ஊறிப் போயின!
படுப்பதற் கோரிடம் எடுப்பதற் கில்லை!
பாலகர் அழுகுரல் அதுபெருங் கவலை!

மாடிகள் மனைகள் மாபெருஞ் சாலைகள்!
மாடாய் வாய்ந்தே சேர்த்ததெம் உடைமைகள்!
பாடிப் பறந்தன பயங்கரப் புயலால்
பதறியே போனோம் இயற்கைச் சமரால்!

தொலைந்தவர் லட்சம்! தேடியும் காணோம்!
தோட்டத்தும் சோகச் சுமைக்குள் ஆனோம்!
அலையும் அவனியில் தனிமர மாயின்று
அனைத்து உயிரையும் இழந்தே போனோம்!

நகரத் தெருவிலும் சிதைவுக லுற்று
நடைப்பிண மானதை என்னென் றுரைக்க!
நகர்ந்தே உயிர்களைப் பலியாய்த் தின்ற
நர்கீஸ் புயலை நாமினி மறவோம்!

மரத்தடி நிழலில் குடித்தன மாகி,
மாய்த்தே சென்ற புயலை எண்ணி!
துரத்தும் இயற்கை அனர்த்தம் ஏசி
துடிக்கும் எம்மவர் வாழ்க்கை பாதி!

இரத்தக் காடாய் ஆனதே மியன்மார்
நர்கீஸ் புயலின் நரபலி வேட்டை!
புறத்தே இருந்தெமைப் புதைக்கும் தீய
புண்படு நிலையிங்கு இனிமேல் வேண்டாம்!

■ கவிஞர். ஏ. அஹ். நாகூர், திருமலை.

## தேடல்கள்

நிசப்தத்தின் பிடியில்
இருள் கௌவிக் கொள்ளும்
அர்த்த ஜாமத்தில் - சில
ஆன்மாக்களின் தேடல்கள்

உள்ளங்கையில் - தீப் பெட்டியும்
சில தீக்குச்சிகளும் - எனினும்
தேடிக் கொண்டிருக்கிறார்கள்
வெளிச்சத்தை...!

மனிதத்தை விற்று
மானிட வாழ்க்கையில்
புரையோடிப் போன- உளுத்த
உணர்வுகளுக்கு உரமேற்றும்
வீராவேசக் கூச்சல்கள்!

அனலிடைப்பட்ட
புழுவாக
புயலிலகப்பட்ட
நாணல்களாய்
மானிடக் கூட்டங்கள்
வானை வெறித்தபடி
ஒளியை எதிர்பார்த்து
காலத்தைக் தீய்க்கின்றன.

■ மா. சிவசோதி, கரவெட்டி மேற்கு.

## மரணம்

ஊரோரத் தெருவில் கிடந்து
உன்னால் உயிர் பெற்றெழுந்தேன்.
உன் நாவல்கள்
என்னை மனிதனாக்கின
உன் சிந்தனைகள்
என்னைப் புனிதனாக்கின
நானும் ஒரு கவிஞனாய்
உனை உயிரோட்டமாய்
பார்க்க வர இருந்தேன்
அப்போதுதான் அதோ!
அந்த பரிதாபகரமான
செய்தி 'சுஜாதா இறந்து விட்டார்'
இன்னும் என் செவிப்பறைகளில்
மோதிய வண்ணம்
நான் எழவில்லை - இன்னும்
நல்ல நிலையினில்
'மரணம் அது மாபெரும்
கொடை'
உலக ஜீவராசிகளுக்கு
இது மட்டுந்தான்
உண்மை என அறிந்தேன்.

■ றிஸ்வினா எம். இர்ஷாட்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

## தமிழ் என்றால் கசப்போ!

மூடனே தேன் சொட்டும்
தமிழை தமிழ் மொழியை
நிந்திக்காதே....
பாரதி தொட்ட தமிழை
கம்பர் கையாண்ட தமிழை
உச்சரிக்க உனக்கு
வெட்கமோ....
ஆங்கிலத்தில் கதைப்பதா
உனக்கு கௌரவம்...

எவனோ ஓர் அன்னியன்
அழித்துச் சென்ற எச்சமடா
அந்த ஆங்கிலம்
புரிந்துகொள் கொஞ்சம்
சிந்தித்து தெளிந்துகொள்...

■ எம். ரமேஸ், கலஹா.

## மறக்க முடியவில்லை

மறக்க முடியாத - என்
நினைவலைக்குள் உன்
மதி வதனம்!
சுழி போடியும்
நழுவமுடியாத - நீ
என் சுவாசத்தை
இயக்கும் சுந்தரியாள்!

சிறகடித்தும் - நீ
பறக்கமுடியாமல்
என்
அகச்சிறையில்
அடைபட்டுக்கிடக்கும்
ஆயுட்கைதி!
அத்தை மகள்!!
அகவை பதினெட்டில்
அடி எடுத்து வைத்த
அம்முக் குட்டி - உன்
விம்மும்
பருவ எழிலில் - நான்
துள்ளும் மீன்!

கள்ளும் போதை தரும்
உன்
ஒவ்வொரு
தமிழ்ச் சொல்லும்
எனக்கு சுவையூட்டும் போதையே
காதல் கவிதைக்கு
கருப்பொருள் நீ - என்
சோதனையில் - நீ
சாதித்த சாதனைகள்
என் கவிதை மனதுக்கு
ஊற்றுக்கண்!

சிறை உடைத்து பறந்த
சின்ன மணிக்குயில்
உறைந்த என் உள்ளம்
ஊனமயானாலும்
அவள் பெயரை அம்மு
மறக்க முடியவில்லை!

■ சேனையூரான், மூதூர்கிழக்கு.

## உண்மை புரியும்

மனிதா...
குறுகிய வட்டத்திற்குள்
உன்னை
கட்டிப் போட்டதை
விட்டு, உடைவாயாக
உன்னிலிருந்து
உலகமும்...
உலகிலிருந்து நீயும்...
கற்றுக் கொள்ள வேண்டியது
ஏராளம் உள்ளது...!
அதனால்
வீட்டை விட்டு
வெளியே வா...
ஊர் தெரியும்...!
ஊரை விட்டு
வெளியே வா
உலகம் தெரியும் ...!
உலகையும் விட்டு
வெளியே வா
உண்மை புரியும்...!

■ எஸ். ஜெகன், நானாட்டான்.

## தூங்கும் இதயம்

இரவின் மடியில்
சிறைப்பட்டு தூங்கிறேன்
அப்போது உன் நினைவு
கடைவிழியில் கண்ணீர்
வழிந்தோடச் செய்யும்
காதல் மடல்கள்
நனைந்தது
உன் புகைப்படம்
மார்பில் புதைந்தது
இரவுகள் தொலைந்து
இருந்த போதும் - ராத்திரி
கனவுகளிலும் உன்னை
தேடுகிறேன் பாக்காமல்
சென்று விடுகிறாய்
நான் பாவமில்லையா ..!

■ கி. சுஜீவன், வவுனியா.

## தாங்கமுடியாத குறட்டை

ரோம் நகரில் வசிக்கும் ஒருவர் மீது அவரது பக்கத்து வீட்டுக்காரர்கள்



வழக்குத் தொடர்ந்துவிட்டார்கள். விஷயம் இதுதான்: 'சுமோ' என்று பெயர்கொண்ட அவரது நாய் அளவில் பெரியது. இரவில் அது எழுப்பும் பலத்த குறட்டை ஒலியால் தங்களால் உறங்கமுடியவில்லை என்று அக்கம்பக்கத்தினர் அந்த நாயின் எஜமானரிடம் அடிக்கடி தெரிவித்துவந்தனர். அவர் கேட்காது போகவே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து விட்டனர்.

## விவாகரத்து... விவகாரம்

உங்களுக்கு த்ரிஷாவைத் தெரியும். ஆனால், ட்ரிஷாவைத் தெரிந்திருக்காது. காரணம் பின்னவர் அவ்வளவாக பிரபலமில்லாத ஓர் ஹொலிவூட் நடிகை. படவாய்ப்பில்லை. வருமானத்துக்கு வழியில்லை. என்ன செய்திருப்பார் ட்ரிஷியா? அதே...அதே! நீங்கள் நினைப்பது சரிதான். வால்ஸ்மித் என்ற ஒரு கொழுத்த கோடீஸ் வரரைக் கைப் பிடித்தார்



ட்ரிஷியா. தேனிலவு 'ட்ரிப்' முடிந்ததுமே திருமணம் கசந்துவிட்டது. விவாகரத்துப்பெற நீதிமன்றம் போய் விட்டார்கள். இந்தநிலையில், தான் விவாகரத்து முடிவுக்கு வந்ததுக்கான காரணத்தை விளக்கியதுடன் வீட்டில் எங்கெங்கு வைத்து கணவர் தன்னை உதைத்தார் என்று படம் பிடித்து இணையத்தில் போட்டிருக்கிறார் ட்ரிஷியா. நடிகையல்லவா? ஒரு டெலிமார்க்கெட்டிங் விளம்பரப் பெண் போல அத்தனை நேர்த்தியாக விளக்குகிறார். ஆனால், அம்மணிக்கு 'டிவி சீரியலில்' நடித்த அனுபவமில்லை போலும். ஒரு சொட்டுக் கண்ணீரில்லை.

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

## நல்லது கெட்டது



ஒன்றைப் பற்றியோ, ஒருவரைப் பற்றியோ முடிவு செய்யும் போது ஒரு பக்கத்தை மட்டும் பார்த்துவிட்டு அல்லது கேட்டுவிட்டு முடிவுசெய்கிறோம்.

தந்திரசாலிகள் இரண்டு பக்கங்களையும் காட்டாமல் ஒருபக்கத்தை மட்டும் வெளிச்சம் போட்டுக்காட்டி ஏமாற்றுவது உண்டு.

இதனை விளக்க இதோ ஒருகதை.

சுண்டெலிக்குட்டி ஒன்று வெளியே சுற்றிவிட்டுத் திரும்பியது. அம்மாவிடம் சொன்னது:

"அம்மா நான் இரண்டு உயிரினங்களைப் பார்த்தேன். ஒன்று மிக அழகு. பட்டுப் போன்ற மேனி. நீண்ட அழகான வால். கண்கள் பளபளவென்று இருந்தன. என்னைப் பார்த்து பவ்வியமாகப் பதுங்கி பயந்து அமர்ந்திருந்தது.


அப்போது சத்தம் ஒன்று கேட்டது. அங்கே ஒரு பறவை, முரட்டு குரலால் விட்டு விட்டுக் கத்தியது. தலையில் இரத்தம் போலச் சதை இருந்தது. தன் இறக்கைகளை உயர்த்தி வயிற்றின் இருபக்கங்களிலும் அடித்துக்கொண்டு உரத்துச் சத்தம் எழுப்பியது. அதனைப் பார்த்து பயந்து நான் ஓடிவந்து விட்டேன்" என்றது.

தாய் எலி பதிலுக்குச் சொன்னது: "மகனே! உன் முடிவுகள் தவறானவை. உன்னைப் பார்த்து பதுங்கிய விலங்கு பூனை. அது உன்னைக் கொன்றுதின்று விடும். நல்லவேளை தப்பினாய்.

அடுத்துவந்த பறவை, சேவல். எமக்குத் தீமை செய்யாது. எனவே யாரையும் எதையும் பார்த்த அளவிலே நல்லது என்றோ கொடியது என்றோ அவசரப்பட்டு முடிவுகட்டக்கூடாது".

செர்விகல் புற்றுநோய் வருவதற்கு முன்னதாகவே அதனைக் கண்டுபிடித்துவிட்டால், 100சதவீத அளவில் நோயாளியை காப்பாற்றிவிடலாம். அதற்கு அடுத்த முதல் கட்ட, இரண்டாம் கட்ட ஆரம்பநிலையில் புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டால், நோயாளியைக் காப்பாற்றும் வாய்ப்பு 85சதவீதமாகும். அடுத்த 3ஆம் நிலையில் 30 அல்லது 40சதவீதம் என்ற அளவில்தான் பாதிக்கப்பட்டவரை காப்பாற்றமுடியும்.

4ஆம்நிலையில் அறுவைச்சிகிச்சை செய்யமுடியாது. ஏனென்றால், அப்போது அதிகளவில் புற்றுநோய் பரவி இருக்கும் என்பதால் ரேடியேஷன் தெரபி, கீமோ தெரபி சிகிச்சைகள் கொடுப்பார்கள். நோயாளிக்கு வலியோ, வேறு மாதிரி உணர்வுகளோ ஏற்படுத்தாத வெளிப்புற ரேடியேஷன் தெரபி சிகிச்சை கொடுப்பதுடன் கருப்பை வாய்ப்பகுதியில் உட்புற ரேடியேஷன் தெரபி சிகிச்சையும் கொடுப்பதால் ஆரோக்கியமான திசுக்கள் பாதிக்கப்படா. நோய் முற்றிய நிலையில் இருப்பவர்களுக்கு வலி மற்றும் இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்தும் மருந்துகள், அதற்கான ரேடியோ தெரபி சிகிச்சை அளிப்பதால் பாதிக்கப்பட்ட பெண்களின் வலியுணர்வு குறைக்கப்படுகிறது.





"ஓட்டப்பந்தயத்தில நீங்க பல பதக்கங்கள் வாங்கியிருக்கீங்க...அதுக்கு அடிப்படைக் காரணம் என்ன...?"

"உண்மையைச் சொல்லணும் என்றால் ஊர் முழுக்க நான் கடன் வாங்கி யிருந்தது தான் காரணம்".



"உன் காதலி சரியான லூசு என்று எப்படிச் சொல்றே?"

"என்னையே கட்டிக்கணும் என்று ஒத்தக் காலில் நிக்கிறாளே!"



"நாம இரண்டு பேரும் மோதிரம் மாத்திக்கலாம் என்று சொன்னா, வேண்டாம்கிறியே ஏன்?"

"உங்க மோதிரம் கால் பவுண், என் மோதிரம் அரைப் பவுண் அதுதான்!"



"நம்ம தலைவர் பொது அறிவுல ரொம்ப வீக்கா இருக்கார்!"

"எப்படிச் சொல்றே?"

"மில்க் ஷேக் என்றால் அரேபியாவில் இருக்கிற பால்காரனா என்று கேட்கிறார்!"



"காலத்துக்குத் தகுந்தமாதிரி எங்க தாத்தா தன்னை மாத்திக்குவார்!"

"அதுக்காக நர்மதா என்கிற உங்க பாட்டி பெயரை நமீதா என்று மாத்தினது நல்லா இல்லை?"

# கருகிய தோழிகள்.....உருகிய உள்ளங்கள்



கடந்தமாதம் 17ஆம் திகதி நள்ளிரவு, ...சென்னை திருவொற்றியூரில் உயிர்த் தோழிகளான கிறிஸ்டி ஜெயந்திமலர், ருக்மணி இருவரும் பிரிவுத்துயரால் தங்களுக்குத் தாங்களே தீவைத்துக் கொண்டனர்.

இதனை அடுத்து லெஸ்பியன் உறவுகளை சட்டப்படி அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறது.

இந்தியா முழுவதும் இருந்து சுமார் 60இற்கும் மேற்பட்ட அமைப்பினர் கடந்த வாரம் சென்னையில் கூட்டமைப்பாக சேர்ந்து இதுகுறித்து விவாதித்திருக்கிறார்கள். இதுவரை பெயரிடப்படாத இந்தக் கூட்டமைப்பின் சார்பில், இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர், சென்னை சக்தி சென்டர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அனிருத்.



இதுதொடர்பாக அனிருத் கூறியதாவது:

"இவ்வருடம் மட்டும் தமிழகத்தில் எட்டு லெஸ்பியன் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவைஎல்லாம் வெளியே தெரிந்தவை. வெளிவராதது எத்தனையோ? இனியும் தாமதிக்காது இவற்றைத் தடுத்திட வேண்டும். 'இயற்கைக்கு முரணாக உடலுறவு கொள்வது தண்டனைக்குரியது' என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், பிரிவு 377 சொல்கிறது. இந்தச் சட்டப் பிரிவையே திரும்பப் பெறவேண்டும். இதுபற்றிய வழக்கு, டெல்லி உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது. இந்தநிலையில்...ஓரினச் சேர்க்கை குறித்த விழிப்பு உணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காகப் பல கவுன்சிலிங் மெம்பர்களை எங்கள் கூட்டமைப்பு சார்பில் களமிறக்க இருக்கிறோம்" என்றார்.

தமிழக அரசிடம் கையளிப்பதற்காக மனு ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த மனுவில், எழுத்தாளரும் வரலாற்று ஆய்வாளருமான வ.கீதா, வழக்கறிஞர் சுதா இராமலிங்கம், எழுத்தாளர் மங்கை, பத்திரிகையாளர் கவிதா முரளிதரன் உள்ளிட்ட பிரபலங்கள் பலரும் கையெழுத்திட்டுள்ளனர்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

துள்ளித்திரிந்த காலம்....

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலவச மாகவே மாணவர்களுக்கு மாலை வகுப்புகளை எடுத்தார்.

சுதாகர் முதல்நாள் அருணாசலத்தின் வாடகை வீட்டுக்குப் போனான். அங்கேதான் முதல் முதலாக தமயந்தியைக் கண்டான். அப்போது அவன் பத்தாம் வகுப்புப் படித்தான். அவள் ஒன்பதாவது. மீசை முளைக் கத்தொடங்கிய அந்தநேரத்தில் தமயந்தி மேல் அவனுக்கு காதல்ஏற்பட்டது. தமயந்தி அவனு டன் இயல்பாகத் தான் பழகினாள். ஆனால், அவனோ அவளுடன் ஆசையாகப் பழகினான். சாதாரண கல்லைக்கூட வைரமாய் பளபளக்கச் செய்யும் காதலில் சிக்கியது இதயம். அவன் அவளை நேசித்தான். அதேசமயம் பரீட்சையிலும் சிறந்த சித்திபெற்றான். தொடர்ந்து க.பொ.த . உயர்தரக்கல்வி பயின்றான். தமிழையும் ஒரு பாடமாக எடுத்தமையினால் தொடர்ந்து அரு ணாசலத்திடம் மாலைவகுப்பில் பாடம் படிக்க வந்தான்.

தமயந்தியின் கடைக்கண் பார்வைக்காகத்தான் அவன் அங்கே வந்தான் என்பதுதான் உண்மையான காரணம். காதலில் விழுவதை வயது தடுப்பதில்லை. ஆனால், வயதாவதை காதல் தடுத்துவிடும். மேலும் காதல் என்பது சாம்பிராணியைப் போன்றது. அது பரப்பும் மணத்தை யாராலும் மறைக்கமுடியாது. சுதாகரின் மனதில் காதல் இருந்தபோதும் அவன் அதை அவளிடம் சொல்லவில்லை. குடிகாரத் தந்தை, நோயாளித்தாய், மூன்று தங்கைகள் - சுமைகள் அவன் தலையில். பரீட்சையில் திறமைச் சித்தியடைந்து பட்டப்படிப்பை முடித்து தங்கைகளுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்துவிட்டு அதன்பின் தமயந்தியைக் கைப்பிடித்து... இதெல்லாம் நடக்கக்கூடிய கதையா? நிச்சயமாக நடந்தே யாகவேண்டும். நாளை நிச்சயம் சூரியன் தோன்றுவானென்ற நம்பிக்கை இருக்கும்போது இதுமட்டும் ஏன் நடக்காது.

அவன் க.பொ.த.உயர்தரத்தில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானான். அந்த மகிழ்ச்சியான செய்தியை தமயந்தியிடம் கூறிவிட்டு மறுநாள் மற்றொரு இனிப்பான செய்தியை அவளிடம் சொல்வதாகக் கூறிவிட்டு தான் வாழும் லயனுக்கு வந்தான். அங்கே தந்தை இறந்து கிடந்தார். அவன் அப்போதே இறந்துபோனான். தமயந்தியிடம் தன் காதலை சொல்லமுடியாது. மேற்கொண்டு படிக்கமுடியாது. தலைமேல் இருக்கும் சுமைகளை இறக்கிவைக்கும் வரை அவன் வாழ்வில் காதல், கல்யாணம், சந்தோஷம், இன்பம் எதுவும் கிடையாது. அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. பாடசாலை நாட்கள் எவ்வளவு சந்தோஷமானவை. அந்த இனிய நாட்கள் இனி வருமா? அவன் தமயந் தியை மறந்தான். கவலையை மணந்தான். காதலைத் துறந்தான். கண்ணீரில் கரைந்தான். இயந்திரமாக மாறினான். சுமைகளின் பாரத் தினைக் குறைக்க இமைகளை மூடவும் மறந்து உழைத்தான். அனுபவிக்க வேண்டிய வயதில் அனைத்தையும் தள்ளினான். துள்ளித் திரியவேண்டிய வயதில் நேரகாலத்தை வீணாக்காமல் உழைக்கத் தொடங்கினான். சுமைகளின் அழுத்தம் அவன் இதயத்தைக் கல்லாக்கிவிட்டது.

சுதாகரின் சிந்தனை கலைந்தது. அவன் வீட்டை அடைந்தான். அவன் மிக நிதானமாக, பக்குவமாக, பதற்றமில்லாமல் சாந்தியிடம் வசந்தியைப் பற்றி பேசினான்.

சாந்திக்கும யாராவது ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க ஆசை இருந்தது உண்மைதான். ஆனால், இவ்வளவு பெரியவளைத் தத்தெடுக்க அவள் தயங்கினாள். அவன் அவளிடம் பல்வேறு பொய்களைகூறி அதிகநேரம் வாதாடி இறுதியில் சம்மதிக்க வைத்தான்.

மறுநாள் அவன் தமயந்தியைக் காண அவள் வீட்டைநோக்கி காரில் சென்றான். ஆனால், வீடு பூட்டிக்கிடந்தது. அந்தப் பெட்டிக்கடையில் அவனுக்காக அண்ணாமலை நின்றிருந்தான்.

''தமயந்திக்கு திடீரென்று நெஞ்சுவலி வந்திடுச்சி. காலையிலேயே நான்தான் வைத் தியசாலையில் கொண்டுபோய்ச் சேர்த்தேன். வசந்தியும் அங்கதான் இருக்கா. இந்த டயரியையும் உங்ககிட்ட குடுக்கச் சொன்னா. எனக்கு அவசரமான வேலையிருக்கு...அப்புறமா உங்களை வந்து சந்திக்கிறேன்.''

சுதாகர் பதற்றத்துடன் காரில் ஏறினான். வைத்தியசாலையை நோக்கி காரை விரைவாக ஓட்டினான். அண்ணாமலை கொடுத்த டயரியை ஒரு கையினால் புரட்டியவாறு மறுகையினால் காரை கவனமாக ஓட்டினான். அப்போது டயரியிலிருந்த அந்தப் புகைப்படம் நழுவி கீழே விழுந்தது. அவன் காரின் வேகத்தை குறைத்தவாறு ஆவலுடன் அந்தப் புகைப்படத்தை எடுத்தான். பார்த்தான். அவ்வளவுதான் - அவன் இதயத்தில் யாரோ சம்மட்டியினால் அடிப்பதைப் போல இருந்தது. தலைசுற்றியது. அவன் காரை பாதை யோரத்தில் நிறுத்திவிட்டு அந்தப் புகைப்படத்தை வெகு நேரமாக உற்றுப்பார்த்துக் கொண்டேயிருந்தான். புகைப் படத்திலிருந்தது வேறுயாருமல்ல. அவன் மனைவியே தான். இளம்வயதில் அந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டிருந்தது. அப்படியானால் வசந்தி வேறுயாருமல்ல சாந்தியின் மகள். அவளுடைய சொந்தமகளே அவளுக்கு தத்துப் பிள்ளையாக வளர்ப்புமகளாக வந்து சேரப்போகி றாள். அவனுக்கு தன் மனைவிமேல் கோபம் வரவில்லை, பரிதாபம்தான் ஏற்பட்டது. அவளுக்கே தெரியாமல் ஏற்பட்ட தவறுக்கு அவள் என்ன செய்வாள். மேலும் பணம், சொத்து, வசதிக்காக ஆசைப்பட்டுத்தான் அவன் அவளை மணம் முடித்தான். அவள் நல்லவளாக, உத்தமியாக வேறொருவன் கைபடாத ரோஜாவாக இருக்கவேண்டுமென அவன் எதிர்பார்க்கவில்லையே. அப்படிப் பார்த்தால் அவன் உத்தமன் இல்லையே. அவன் முதுகில் அழுக்கை வைத்துக் கொண்டு தன்னையறியாமல் எவனோ ஒருவன் செய்த தவறினால் குற்றவாளி யாக்கப்பட்ட அவளைக் குற்றம் சொல்ல இவனுக்கு என்ன அருகதை இருக்கின்றது.

அவன் மனம் தெளிவானது. இந்த உண்மையை எக்காரணம் கொண்டும் தன் மனைவியிடம் சொல்வதில்லை. இனிமேல் அவன் தன் மனைவிக்காகவும் தனக்கு மகளாக வந்து சேரப்போகும் வசந்திக்காகவுமே வாழப் போகிறான். இதோ அவனுக்காக எதிர்காலம் வசந் தத்துடன் காத்திருக்கிறது. ஒரு மனிதன் பிறவியிலேயே கெட்டவனாகப் பிறப்பதில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவன் வாழ்க்கையில் மாற்றத்தினை ஏற்படுத்தி விடுகின்றன. சுதாகர் தெளிவான உள்ளத்துடன் மறுபடியும் சுறுசுறுப்பாக காரை வைத்திய சாலையை நோக்கி செலுத்தினான். தியாகம் செய்யவும், மன்னிக்கவும், நன்றி கூறவும் தெரிந்து கொண்டு விட்டால் நாம் மகிழ்ச்சி யைத் தேடி ஓடவேண்டிய தில்லை. அதுவே நம்மைத் தேடி ஓடிவரும்.

(யாவும் கற்பனை)

---

அண்ணாமலை....

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''மேலே பார் புரியும்''

போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொண்டு மேலே நிறைய ஹெலிகார்கள் நின்ற இடத்திலேயே சுழன்றுகொண்டிருந்தன.

நடந்தார்கள்.

''கூட்டம் அதிகமாக இல்லையே டேவிட்!''

''தினமும் அதிகபட்சம் ஐந்தாயிரம் பேர்களுக்குத்தான் அனுமதி. அதுவும் இல்லாமல் நாம் வந்திருப்பது அதிகாலை வேளை.''

அண்ணா மேம்பாலத்தில் ஏறி இறங்கினார்கள்.

இன்னும் சற்றுத் தொலைவுதான்.

அந்தப்பகுதியில் கூட்டம் அடர்த்தி யாக இருந்தது.

மிஷினதனமாக 'கைடி'ன் குரல் ஒலித்தது. ''அண்ணாசாலையிலேயே மிகப் பழைய கட்டடம் இது. நூற்றைம் பது ஆண்டுகளுக்கு முன் கட்டியது.

''அம்மாடியோவ் இவ்ளோ சின்னக் கட்டடத்தை எப்படிக் கட்டியிருப்பாங்க!''

டேவிட்டும், ஞானமும் வியப்புடன் வேடிக்கை பார்த்தனர்- எல்.ஐ.சி. கட்டடத்தை!

---

# ராசி பலன்

**09-06-2008 முதல் 15-06-2008 வரை**

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை1.

காரியத்தடையுண்டு. பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்யார்.தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## ரிஷபம்



கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்யார். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

## மிதுனம்



மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம்1,2,3

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும்.

## கடகம்



புனர்பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரியத்தடையுண்டு. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் சேரலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## சிம்மம்



மகம், பூரம், உத்தராடம் 1

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம்.தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

## கன்னி



உத்தரம் 2,3,4 அத்தம், சித்தம் 1,2

காரியத் தடையுண்டு. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர்கள் அயலவர்கள் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் குறையலாம், தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும்.

## துலாம்



சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரிய தடையுண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர்நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

## விருச்சிகம்



விசாகம் 4. அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## மகரம்



உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர்.பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கும்பம்



அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

## மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்யார். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

உபயோகித்து எலியை உருவாக்கியிருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.
பாலூட்டி மிருகங்களில் இதுதான் இப்படிப்பட்ட முதல்நிகழ்வு. எலி அம்மாக்களில் ஒரு அம்மா, பிறந்த உடனேயே மரபணுவைத் திருகி ஆண்போலச் செய்யப்பட்டது.
இந்தச் செயலினால் ஏன் எலிக்காகட்டும் மனிதருக்காகட்டும் அப்பாவின் மரபணு தேவையில்லை என்று நிருபணம் ஆகிறது. தண்டு செல்லை உபயோகித்து மருததுவம் செய்யவும் இது பயன்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.
'நேச்சர்' ஏட்டில் டோக்கியோ விவசாயப் பல்கலையின் டோமேஹிரோ கோனோ இதுகுறித்து எழுதியுள்ளார். இந்தமுறையில் இவர்கள் இரண்டு எலிகளை உற்பத்தி செய்துள்ளனர். இவற்றில் ஒன்று நலமாக உள்ளது. இந்த எலிக்கு 'கருயா' என்று ஜப்பானிய புராணக் கதையின் கதாபாத்திரம் ஒன்றின் பெயரை இட்டுள்ளனர்.
இந்தப் பரிசோதனை விவசாய விஞ்ஞான நோக்கங்களுக்கு பலனளிக்கலாம் என்று டோமேஹிரோகோனோ தெரிவித்தார். இதனை மனித உற்பத்திக்கு உபயோகிக்க ஏதும் காரணம் இல்லை. கேள்வியே பொருளற்றது என்றும் தெரிவித்தார்.
சில பல்லிகளும் வேறு பல மிருகங்களும் வெறும் அம்மாவின் ஜீன்களையே உபயோகித்து இனப்பெருக்கம் பண்ணக்கூடியவைதான். ஆனால், பாலூட்டிகள் இந்தமுறையில் இனப்பெருக்கம் அடைவதில்லை. பரிசோதனைச் சாலையில் கருக்கள் உற்பத்தியாகியுள்ளன. ஆனால், பிறப்பு வெற்றிகரமாய் இதுவரை அமையவில்லை. ஆனால், கருக்கள் உற்பத்தி செய்தாலே தண்டு செல்களை உற்பத்தி பண்ணமுடியும் என்பதால் இந்தமுறை தேவையற்ற ஒன்றாய் இருந்தது. சில ஆய்வாளர்கள் கருவாக உருவாகாத மனிதச் சினை முட்டைகளை உபயோகித்து 'பார்தீனோட்' என்ற தண்டுச்செல் சேர்க்கையை உண்டுபண்ணி தண்டுச்செல்களை அறுவடை பண்ணமுடியும் என்று நம்புகிறார்கள்.

# அப்பா இல்லாமல் பிறந்த எலிகள்



அதாவது கருவை அழிக்காமல் தண்டுச் செல்களை அடைய இது உதவும் தண்டுச் செல்களை பயன்படுத்தி பலநோய்களைக் குணப்படுத்த முடியும் என்று ஆய்வாளர்கள் நம்புகிறார்கள் நம்புகிறார்கள். கருவாய் உருவாகாத சினை முட்டைகளை ஆய்வுசெய்யும் கெண்ட் வ்ரானா என்ற ஆய்வாளர் பென்சில்வேனியா அரசுப் பல்கலையில் பணிபுரிபவர். இந்த ஆய்வுபயனுள்ளது என்று நம்புகிறார். அப்பாவின் மரபணு இல்லாமல் எலி ஒன்றை உற்பத்தி செய்யமுடியும் என்றால் ஆரோக்கியமான தண்டுச் செல்கள் உற்பத்திக்கும்

இதை ஒத்த ஓர் ஆய்வு வழி இருக்கலாம் என்பது அவரின் அனுமானம். சிலவகை பல்லிகளிலும் மற்றும் சில விலங்கினங்களிலும் ஆண்களே இல்லை. அவை வெறுமே தாய்வழி மரபணுவை மட்டுமே கொண்டு சந்ததி உற்பத்தி செய்கின்றன. ஆனால், பாலூட்டிகளில் இப்படிப்பட்ட இனங்கள் இல்லை. இதுவரை பரிசோதனைச் சாலைகளில் செய்யப்பட்ட எலி மீதான பரிசோதனைகளில் ஆரம்பக்கருக்கள் உற்பத்திசெய்யப் பட்டாலும் வெற்றிகரமான பிறப்பு கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட முன்னேற்றம், ஸ்டெம் செல்கள் என்றழைக்கப்படும் தண்டு செல்களை உற்பத்தி செய்ய வல்லது. ஆயினும் கர்ப்பம் தரிக்காத மனித முட்டைகளைத் தூண்டி பார்த்தினோட்டுக்களாக உருவாகினால் அவற்றின் மூலம் தண்டுச் செல்களை உற்பத்தி செய்யலாம். (இப்போது தண்டு செல்களை அறுவடை செய்ய சாதாரண முட்டைகள் உபயோகப் படுத்தப்படுகின்றன) இந்தத் தண்டுசெல்கள் மூலம் பல நோய்களைத் தீர்க்கலாம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.













வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் ... 2008, ஜூன், 08 ...